மஞ்சரி

MAR. '48

மாசி

தனயன் துயரம்

★

பிச்சைப் பாட்டு

★

பாதுஷாவின் தந்திரப்

★

அம்ருத் கௌர்

★

கதை சொல்லும் குள

★

மின்சார மீன்

★

சிர்லா வனங்களிலே

-6-
அணா

முத்துக் குளிப்பு

ஆழ்கடலிற் குளித்து முத்தெடுக்கிறுன் முத்துக் குளிப்போன். (அட்டைப் படம்.) அதே காரியத்தைப் புரிவது 'மஞ்சரி'. இந்தியாவின் பல பாஷைகளில் பல பத்திரிகைகளில் வெளிவரும் இலக்கியம் ஒரு கடல் போன்றது. அந்த இலக்கியக் கடலில் குளித்துப் பொறுக்கியெடுத்த நல்முத்துக்களை உங்களிடம் கொண்டுவந்து சேர்க்கும் பொக்கிஷம் 'மஞ்சரி'. உலக உத்தமனை தந்தையையும் உத்தமியான தாயையும் இழந்த 'தனயன் துயரம்' மனமுருக்குவது. 'குழந்தையின் பழக்கம்' எந்தத் தாயும் படிக்கவேண்டிய பொருள். மற்றும் பல இனிய பொருள்களை இந்த இதழ் தாங்குகிறது.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. குமாரஸ்வாமி — குமுதினி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி — 'ஆர்வி'
கெளரி அம்மாள் — டி. வி. பரமேசுவரன்
மோ. ஸ்ரீ. செல்லம் — ச. கு. கணபதி ஐயர்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை. 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணு. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை "ஸர்க்குலேஷன் மானேஜர்" என்று விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 1] [இதழ் 4

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

பிச்சைப் பாட்டு

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

ஐயரவர்களுக்கு இன்று ராஜதானிக் கல்லூரியில் உருவச்சிலை திறந்து வைத்து மகிழ்ச்சி கொண்டாடுகிறோம். இது தமிழ்நாடு முழுவதுமே கொண்டாடும் மகிழ்ச்சியாகும். ஐயரவர்கள் தமிழுக்குச் செய்த சேவை அளவிட முடியாதது. சிறுகதைபோல் மிக்க அழகாய் அமைந்துள்ள இந்தக் கட்டுரை ஐயரவர்களின் அரிய வசன நடை நூல்களுள் ஒன்றிலிருந்து எடுத்ததாகும்.

சந்திரசேகர கவிராஜ பண்டிதர் சென்னையில் இருந்தபோது வண்ணார்பேட்டையிலுள்ள சஞ்சீவி ராயன் தெருவிற் சில வருஷங்கள் வசித்துவந்தார். ஒரு நாள் இரவு நிலா நன்றாக எறித்தது. இராப் பிச்சைக்காரன் ஒருவன் வீடுதோறும் சென்று அன்னப்பிச்சை வாங்கிக்கொண்டே வந்தான். அவன் பல ஊர்களைச் சுற்றினவன். பல பாட்டுக்களை அவன் அறிந்திருந்தான். “அம்மா, பிச்சை!” என்று மட்டும் சொல்லிப் பிச்சை வாங்காமல், இனிய சாரீரத்தோடு தமிழ்ப் பாடல்களைப் பாடி அன்னங்கேட்பது அவன் வழக்கம்.

பிச்சைக்காரன் பாடிக்கொண்டே சந்திரசேகர கவிராஜ பண்டிதர் இருந்த தெருவழியே வந்தான். அவனுடைய இனிய குரல் வீட்டுக்குள் இருந்தவர்களை வெளியே வரச் செய்தது; பெண்டிர் அவன் பாட்டில் மயங்கி அவனுக்கு மனமுவந்து அன்னம் அளித்தனர்.

அவன் தெம்மாங்கு, வெண்ணிலாப் பாட்டு, பராபரக் கண்ணி

காப்பிரைட்: நல்லுரைக் கோவை-IV (தமிழ்ப் புஸ்தகம்), எஸ். கலியாணசுந்தரையர், தியாகராஜ விலாசம், திருவேட்டீசுவரன்பேட்டை, திருவல்லிக்கேணி.

முதலியவற்றைப் பாடுவான். ஒரு கண்ணியில் ஓரடியையே திருப்பித் திருப்பிப் பாடுவான். ஒரு தெரு முழுவதற்கும் அந்த ஒரு கண்ணியே அவனுக்குப் போதியதாக இருக்கும். அன்று வீசிய நிலாவொளியில் அவனுடைய ஞாபகம் நிலாவைப்பற்றிய பாட்டொன்றிற் சென்றது.

"ஊரைச் சுடுமோ"

என்று அவன் ஆரம்பித்தான். தமிழ்ப்பாட்டாக யார் எதைச் சொன்னாலும் கேட்பதில் ஆவல் கொண்ட கவிராஜபண்டிதரை அந்த ஒலி வீட்டுக்குள்ளிருந்து வெளியே வருவித்தது. பண்டிதர் பிச்சைக்காரனருகிலே சென்று நின்றார். அவன், "ஊரைச் சுடுமோ" என்னும் தொடரையே பலமுறை நீட்டியும் குறுக்கியும் சொல்லிக்கொண்டு ஒவ்வொரு வீடாகச் சென்றான். பண்டிதருக்கோ அந்த நிமிஷத்திலேயே பாட்டு முழுவதையும் அவன் சொல்லக் கேட்கவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. அவனாகச் சொல்லட்டுமென்று காத்திருந்தார். "ஊரைச் சுடுமோ" என்பதற்கு மேல் ஓரெழுத்துக் கூட அவன் வாயிலிருந்து வரவில்லை.

இவர் பொறுமையை இழந்தார்; "அந்தப் பாட்டை முழுவதும் சொல்லிவிடப்பா" என்று கேட்டார். பிச்சைக்காரன் தலையெடுத்துப் பார்த்தான். ஒன்றுமில்லாமற் பிச்சை வாங்குவதை விடச் சில பாட்டுக்களைப் பாடிப் பிச்சை வாங்க எண்ணித் தான் பாடிவரும் பாட்டை ஒரு பெரியவர் கவனத்தோடு கேட்டு வருகிறாரென்பதை அவன் உணர்ந்தபோது அவனுக்குச் சிறிது கர்வமும் உண்டாயிற்று.

"இதோ சொல்கிறேன்" என்று கூறி மறுபடியும், "ஊரைச் சுடுமோ" என்றே தொடங்கினான். "இவனுக்கு இதற்கு மேல் தெரியாதோ?" என்ற சந்தேகம் பண்டிதருக்கு உண்டாயிற்று.

பல முறை, "ஊரைச் சுடுமோ" என்பதையே திருப்பித் திருப்பிச் சொல்லிவிட்டு அப்பால் பெரிய புதையலை வெளியிற் கொண்டுவந்தவன் போல அவன்,

"உலகந் தனைச்சுடுமோ"

என்றான்.

அதைக் கேட்ட பண்டிதர் அந்தப் பாட்டு ஒரு வெண்பாவாக இருக்க வேண்டுமென்று ஊகித்தறிந்தார். "பாட்டின் இனிமை முதலடியிலேயே ததும்பி நிற்கிறது! பின் அடிகள் எவ்வளவு இனிமையாக இருக்குமோ!" என்று எங்கினார். "ஐயா, நான் மறந்துவிட்டேன். தானாக வந்தால் வரும்; நானாக நினைத்தால் வருவதில்லை" என்றான் பிச்சைக்காரன்.

"யோசித்துப் பாரப்பா" என்று சொல்லிப் பண்டிதர் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று அன்னமிடச் செய்தார். அவன் தன்னால் ஆனவரைக்கும் நினைத்து நினைத்துப் பார்த்தும் வரவில்லை. முதலடிக்குமேலே பாடும் வழக்கம் அவனுக்கு இல்லை.

"பாட்டு முழுவதும் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் பண்டிதர்.

"நன்றாகத் தெரியும். எனக்கு ஒரு கிழவனார் அந்தப் பாட்டைச் சொல்லித் தந்தார். பிச்சைக்காரனுக்கு ஓரடி போதாதா? ஐயா!" என்றான் அவன்.

பண்டிதர், "எப்போதாவது பாட்டு முழுவதும் ஞாபகம் வந்தால் வந்து சொல்; இனாம் தருகிறேன்" என்றார்.

பிச்சைக்காரன், "என்னால் முடிந்தவரையிற் பார்க்கிறேன்"

என்று கூறிவிட்டு அடுத்த தெருவுக்குப் போனான். பண்டிதருக்குத் தம் வீட்டில் இருப்புக்கொள்ளவில்லை. அவன் உத்ஸாகங்கொண்டு ஒருகால் அடுத்த தெருவில் பாட்டு முழுவதையும் சொல்லக்கூடுமோ வென எண்ணினார்; அவனைப் பின் தொடர்ந்தார். அவன் அங்கும், "ஊரைச் சுடுமோ" என்ற பாட்டையே பாடினான். தெருக்கோடியில் அவனுடைய வாயிலிருந்து இரண்டாவது அடியும் வந்தது:

"ஊரைச் சுடுமோ
உலகந் தனைச்சுடுமோ
ஆரைச் சுடுமோ
அறியேனே"

என்று அவன் பாடினான். பண்டிதர் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தார்; 'எத்தனை அழகான வெண்பா' என்று மகிழ்ந்தார். 'மற்றப் பகுதியும் இப்படியே இவன் வாயிலிருந்து நழுவி வராதா' என்று ஆவலோடு எதிர்பார்த்தார். அன்று அந்த இரண்டடிக்குமேல் பிச்சைக்காரன் திருவாய்மலரவில்லை.

அப்பால் இரண்டு மூன்று நாட்கள் அன்னப்பிச்சை கேட்டுவந்த அவனிடம் இந்தக் கவியைப் பிச்சை கேட்டுக்கொண்டே பண்டிதர் தொடர்ந்து அலைந்தார். ஒரு பயனும் உண்டாகவில்லை. பிச்சைக்காரனும் நாள் முழுவதும் பாட்டை ஞாபகப்படுத்திப் பார்த்தான்; தோற்றவில்லை.

நான்காம் நாள் அவனுக்கு ஞானோதயமானது போலப் பாட்டின் பின்பகுதி உதயமாயிற்று. அதைக் கேட்ட பண்டிதர் சிறந்த குரு ஒருவரிடம் உபதேசம் பெற்றுப் பிரம்மானந்தத்தை அநுபவித்தவர் போலானார். பல வருஷங்கள் தவஞ் செய்து ஓர் அருமையான பிள்ளையைப் பெற்றால் தந்தைக்கு எவ்வளவு ஆனந்தம் உண்டாகும்! பண்டிதர் அடைந்த ஆனந்தம் அதைவிட அதிகமென்றே சொல்ல வேண்டும்.

பண்டிதர் பிச்சைக்காரனுக்கு 'இனும்' கொடுத்தார். வேறு சில செய்யுட்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். அந்தப் பிச்சைக்காரன் தந்த பிச்சையாகிய பாட்டைத் தனிப்பாடல்திரட்டிற் சேர்த்துப் பதிப்பித்தார். அது வருமாறு:—

"ஊரைச் சுடுமோ
உலகந் தனைச்சுடுமோ
ஆரைச் சுடுமோ
அறியேனே - நேரே
பொருப்புவட்ட மானநகிற்
பூங்கொடியீ ரிந்த
நெருப்புவட்ட மான
நிலா."

[இது விரகதாபத்தால் வருந்திய தலைவி ஒருத்தி நிலாவொளியை வெறுத்துக் கூறியது.]

பண்டிதர் பதிப்பித்த தனிப்பாடல் திரட்டில் உள்ள மற்றப் பாட்டுக்கள் சிலவே அவருடைய ஞாபகத்தில் இருந்தன. அவற்றுள்ளும் இந்தப் பாட்டே அவருடைய மனத்தில் பசுமரத்தாணி போலப் பதிந்து நிலவியது.

உலகம் முழுவதிலும் ஒரே உண்மையின் குரல்தான் முழங்குகிறது. கீதை என்பது ஹிந்துஸ்தானத்துக் குரான்; குரான் என்பது அரேபிய நாட்டுக் கீதை.

—புல்லேஷா கலந்தர் (200-ஆண்டுக்கு முன் வாழ்ந்த பஞ்சாபி ஸூபி பக்தர்)

தனயன் துயரம்

தேவதாஸ் காந்தி

மகாத்மா காந்தியைத் தந்தையாகவும் உத்தமி கஸ்தூர்பாவைத் தாயாகவும் பெற்ற தேவதாஸ் காந்தி, அந்த இருவரையும் தனித்தனி இழந்தபோது அடைந்த அளவிடமுடியாத துயரத்தை, அவர் வெளியிட்ட இந்த அறிக்கைகளிலே காணலாம்.

தாயை இழந்தபோது

கடைசிவரையில் என் அன்னை தன் ஞாபகத்தை இழக்காமலே இருந்தாள். ஞாயிற்றுக்கிழமையன்று அவளுடைய தேகஸ்திதி கடுமையாகிவிட்டதென்று அரசாங்க அறிக்கை கூறியது. அப்போதும் நோயை வென்றுவிடலாம் என்று அவள் நம்பிக்கொண்டிருந்தாள். சில நாளாக இருதயம் மலினமாகிவிட்டதால், நீர்ப்பை வேலை செய்யவில்லை. நிமோனியா ஜுர விளைவு இது. ரத்த ஓட்ட வேகம் மிகவும் குறைந்துவிட்டது. டாக்டர்கள் கைவிட்டுவிட்டார்கள். நான் திங்கட்கிழமை மாலையில் அங்கே போய்ச் சேர்ந்தபோது அவள் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தாள். உடனிருந்த சிறைவாசிகள் செய்த உபசாரத்தால் ஓரளவு ஆறுதல் கிடைத்தது. வைத்தியர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக அன்றிரவுக்கு மேலும் அவள் ஜீவித்திருந்தாள். அதுதான் அவளுக்கு உலக வாழ்வின் கடைசி இரவு. ஒவ்வொரு கணமும், உடனிருந்த அன்பர்களும் காந்தியடிகளும் உபசாரம் செய்துகொண்டே இருந்தனர். மயக்கமும் தெளிவும் கலந்த நிலைமையில் கேட்ட கேள்விக்கு ஒரு வார்த்தை அரை வார்த்தை பதில் சொல்வாள்; இல்லாவிட்டால் தலையை மெல்ல அசைப்பாள். ஒரு தடவை காந்தியடிகள் அருகில் வந்தபோது தன் கையைத் தூக்கி, "யார் அது?" என்று கேட்டாள். ஒருமணி நேரம் அவர் அவளைக் கவனித்துக்கொண்டார். அப்போது அவளுக்கு உண்டான ஆறுதல் மிகப் பெரிது. அவளுக்குப் பக்கத்தில் இருந்தபோது அவர் கைகள் நடுங்கினாலுங்கூட அவளைவிடப் பல வருஷங்கள் இளையவராகத் தோன்றினார். அதைப் பார்த்தபோது தென் ஆப்பிரிக்காவில் 32-வருஷங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வந்தது. அன்னை மூன்று மாதச் சிறைவாசத்திலிருந்து உருக்குலைந்துபோய் வெளியே வந்து ஒருவாறு தேறி வந்த சமயம் அது. எங்களுக்குத் தெரிந்த ஐரோப்பியர் ஒருவர் என் தாய்தந்தையரை ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் பார்த்தார். "காந்தி, இது உங்கள் தாயாரா?" என்று கேட்டார்.

காலையில் அவள் நிலை பின்னும் கேவலமாகிவிட்டது; ஆனால் அமைதியாக இருந்தாள். திங்களன்று அவள் நம்பிக்கை ஊசலாடிக்கொண்டிருந்தது. செவ்வாயன்று பற்றெல்லாம் ஒழிந்தவளாகத் தோன்றினாள். நீர்த் தொல்லையின்

பயனுன வேதனை இருந்தும், அவள் உள்ளம் அமைதியாகவும் தெளிவாக வும் இருந்தது. திங்களிலிருந்தே அவள் மருந்து சாப்பிட மாட்டே னென்று சொல்லிவிட்டாள்; தண் ணீர்கூட அருந்த மறுத்தாள். செவ் வாயன்று மத்தியான்னம் ஒரு துளி கங்காஜலத்துக்காக வாயைத் திறந் தாள். கொஞ்சநேரம் அவளுக்கு அது ஆறுதலைத் தந்தது. அன்று பிற்பகல் மூன்று மணிக்கு என்னை அழைத்து, "நான் போகிறேன்" என்று சொன்னுள். "என்றைக்காவது ஒருநாள் போகத்தானே வேண்டும்? இன்றுதான் போகிறேனே ?" என் ருள். அவள் பெற்ற குழந்தைகளில் கடைக்குட்டியாகிய என்னிடமிருந்த வாத்ஸல்யம் மாத்திரம் அவளைப் பற்றி நின்றது போலும்; ஆனுல் எல் லோரும் கேட்க இப்படிப் பேசி இன் னும் இனிய சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு அந்த வாத்ஸல்யத் தையும் விலக்கிவிட்டாள். வேறு எந்தச் சமயத்திலும் அவள் கூறிய வார்த்தைகள் அவ்வளவு தெளிவாக வும் அர்த்தபுஷ்டி யுள்ளவையாகவும் எனக்குத் தோற்றவில்லை. இப்படிச் சொன்னவுடனே தன் கைகளைக் குவித்தாள்; உதவி இல்லாமலே எழுந்து உட்கார்ந்து தலையைக் குனிந்தபடியே பல நிமிஷ நேரம் தன்னுல் கூடிய வரையில் உரத்த குரலில் பிரார்த்தனை செய்தாள். "கடவுளே, எனக்குப் புகலிட மாகிய பரம்பொருளே, கருணை புரிந்து ஆட்கொள்வாய்" என் பதே அவள் பிரார்த்தனை. அந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளிடமிருந்து எழுந்தன.

என் கண்ணீரைத் துடைத்துக் கொள்வதற்காக அறையை விட்டு வெளியிலே வந்தபோது ஆகாகான் அரண்மனைத் தாழ்வாரத்தில் அப் போதுதான் பெனிஸிலின் வந்திருந் தது. அதைச் செலுத்த டாக்டர் களுக்கு இஷ்டம் இல்லை. நீர்ப்பையோ சக்தியிழந்துவிட்டது. பெனிஸிலினுல் ஒன்றும் பயனிராது. தவிர, அதற்குரிய காலமும் கடந்து விட்டது. ஆனுலும் இந்த ஆச்சரிய மான மருந்தை எப்படியோ கொண்டுவந்துவிட்டார்கள்.

5-மணியளவில் அன்னையை மறு படியும் பார்க்கலாமென்று தைரியங் கொண்டேன். அப்போது அவள் புன்னகை பூத்தாள். இந்த 43 வருஷங்களாக அவளிடம் அரும்பி வரும் புன்னகை அது. மரணத்தை அணுகிக்கொண்டிருக்கும் அன்னை தன் மகனை உற்சாகப்படுத்தும் புன்னகையாகவும் அது இருந்தது. என்னிடம் அவளுக்குப் பிரியம் அதிகம். அந்த முறுவல் பெனிஸி லினைப்பற்றிய சிந்தனையைத் தூண் டியது. டாக்டர்களிடம் சென்று அதைச் செலுத்தும்படி மன்ருடு வது என் கடமை என்று எண்ணினேன். அவர்கள் கொடுத் துப் பார்க்கலாம் என்ருர்கள்; ஆனுல் பலனிராதென்றே சொன் ஞர்கள். அன்னைக்கு வேதனையைத் தரும் இஞ்செக்ஷன் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருப் பதை அறிந்து காந்தியடிகள் மாலை யில் உலாவச் செல்வதைக் கை விட்டு என்னோடு பேச வந்தார். "என்ன அற்புதமான மருந்தைக் கொண்டுவந்து கொடுத்தாலும் அம் மாவைப் பிழைக்கவைக்க முடியாது. நீ வற்புறுத்தினுல் உன் இஷ்டப்படி செய்யச் சம்மதிக்கிறேன். நீ நினைக் கிறது மிகவும் தப்பான காரியம். இரண்டு நாளாக எந்த மருந்தையும் தண்ணீரையும் அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவள் இறைவன் திருக்கரங்களில் இப்போது இருக் கிருள். நீ தலையிட விரும்பினுல் அப்படியே செய்யலாம்; ஆனுல்

அப்படிச் செய்ய வேண்டாமென்று சொல்லுகிறேன். மரணத்தை அணுகும் அன்னைக்கு நாலு மணிக்கோ ஆறு மணிக்கோ ஒரு தடவை இஞ்செக்ஷன் கொடுக்கும் போதெல்லாம் அவளுக்குச் சரீர வேதனையை உண்டாக்க ஏற்பாடு செய்கிறாய் என்பதை நினைத்துப் பார்!'' என்றார். எதிர்த்து வாதாட என்னால் முடியுமா? டாக்டர்களுக்குத் தொந்தரவு இல்லையாயிற்று. இந்த இனிய வார்த்தையை அவர் கூறி முடித்தவுடன் அன்னை அவரை அழைப்பதாகத் தெரிந்தது. உடனே அவர் மற்றவர்களிடமிருந்து அவளை விடுவித்துத் தன் தோள் மேலே சார்த்திக்கொண்டு ஆசுவாசப்படுத்தலானார். பத்துப் பேரோடு நானும் நின்றுகொண்டு பார்த்துக்கொண்டிருந்தேன். அன்னை முகத்தின் சாயை பின்னும் கருகியது. ஆனால் அவள் பேசினாள்; கையை அசைத்தாள்.

அப்பால் கண் இமைக்கும் நேரத்தில் முடிவு வந்துவிட்டது. எல்லோருடைய கண்களிலிருந்தும் நீர் பெருகியது. காந்தியடிகள் கண்ணீர் வெளிவராமல் அடக்கிக்கொண்டார். யாவரும் அவளுக்கு முன்னாலே அரை வட்டமாக வளைந்து நின்று அவளுக்குப் பிரியமான தோத்திரத்தைச் சொன்னோம். இரண்டே நிமிஷங்களில் அவள் பிணமாகிவிட்டாள். ஒருவர் சொன்னதுபோல, அவள் நாங்கள் சாப்பிட வேண்டுமென்று காத்திருந்தாள். அந்தப் பாதுகாப்புச் சிறையில் கடைசி உணவு மாலை ஆறு மணிக்குக் கிடைக்கும். அன்னை பிரிந்தபோது மணி 7-35.

நான் பிரயாகைக்குப் போகும் வழியில் இதை எழுதுகிறேன். அன்னையின் அஸ்தியைத் திங்களன்று கங்கையில் விடுவதற்காகப் போகிறேன். ஒரு கைப்பிடியில் அடங்கும் எலும்புகள்தாம் என் அன்னையின் உடம்பில் எஞ்சிய சின்னம். எரிந்த சிதையிலிருந்து சிறையிலிருந்த அன்பர்கள் வெள்ளிக்கிழமையன்று மந்திர பூர்வமாகச் சேகரித்தவை இவை. அவற்றை வாழையிலையில் வைத்துப் பூவால் அலங்கரித்துக் குங்குமமிட்டுத் தூபம் காட்டி எடுத்து வைத்தார்கள். நான் என் அன்னையுடன் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறேன்; நாளைக்கப்புறம் மறுபடியும் அவளுடன் பிரயாணம் செய்ய முடியாது. கங்கை யமுனைச் சங்கமத்தில் அஸ்தியைக் கரைக்க வேண்டுமென்பது காந்தியடிகளின் விருப்பம். "கோடிக்கணக்கான ஹிந்துக்கள் புனிதமான செயலாகச் செய்யும் இதுவே உன் அன்னையின் ஆத்மாவுக்குத் திருப்தியை உண்டாக்கும்'' என்று அவர் சொன்னார். பண்டித மாளவியாவும் இப்படியே செய்ய வேண்டுமென்று தந்தி கொடுத்திருந்தார்.

சாம்பலில் பெரும் பகுதியைச் சம்பிரதாயப்படி இந்த்ராயணி நதியில் கரைத்துவிட்டோம். சாம்பலில் கொஞ்சம் பகுதியையும் ஐந்து கண்ணாடி வளையல்களையும் பாதுகாப்புச் சிறையிலேயே வைத்துக் கொண்டார்கள்.

இந்த அசௌக்கியம் பாதுகாப்புச் சிறையில் 1942 செப்டம்பர் மாதத்திலே ஆரம்பமாயிற்று. முதல் தடவையாக அவள் நீர்ப்பைக்கு ஆபத்து அப்போதுதான் நேர்ந்தது. சென்ற நாலைந்து வருஷங்களாகவே தேகநிலை சரிவர இல்லாமலிருந்தாலும் அதற்கு முன் இருதய நோய் அவளுக்கு வந்ததேயில்லை. 1942 செப்டம்பருக்குப் பிறகு பழைய தேகசுகத்தை அவள் பெறவே இல்லை. சிறைவாசந்தான் அவள் உடம்பையும் மனத்தையும் குலைத்

தது. இதற்குள் மூன்று முறை சிறையில் இருந்திருக்கிறாள். ராஜகோட்டில் தனியே சிறையிருந்தபோது அநேகமாக மரணத்தை எட்டிப் பார்த்தாள். ஆனால் இங்கே கடைசியாக வந்த வியாதி கடுமையானது. அவள் உள்ளமும் உடலும் சக்தியை இழந்தன. வரையறையில்லாமல் பாதுகாப்புச் சிறையில் இருந்தது அவளை மெலியச் செய்தது. அங்கே என்ன சௌகரியம் கிடைத்தாலும் அவள் உள்ளத்துக்கும் ஆத்மாவுக்கும் சாந்தியை அளிக்கவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் இப்படியே அவஸ்தைப் படுகிறார்கள் என்பது அவள் வேதனையைப் பின்னும் அதிகப்படுத்தியது. எல்லோருக்கும் விடுதலை கிடைப்பதாக இருந்தால் தன்னையும் பாபுவையும் நிரந்தரச் சிறைவாசத்தில் இருத்திவிடலாமென்று அவள் சொல்வதுண்டு.

மிகவும் கடுமையான நிலை வந்த கடைசிக் காலத்தில் அவளை விடுதலை செய்திருந்தால் நன்மை உண்டாகி இருக்குமா? தனக்கு இஷ்டமான போது மீட்டும் சிறைக்கு வரலாம் என்ற அநுமதியோடு விடுதலை கிடைத்திருந்தால் நன்மை உண்டாகி இருக்கலாம். ஆனால் விடுதலை செய்வதாகச் சொல்லி அவள் மனசுக்கு ஆறுதல் உண்டாக்குவார் இல்லை என்பது உண்மை; கடவுள் தான் விடுதலையை அளித்தார். ஆகையினால்தான், அமெரிக்காவில் உள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதி சொன்னதைக் கேட்டு எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பல முறை அவளை விடுதலை செய்வதாகச் சொன்னார்களென்றும், அவள் மறுத்துவிட்டாளென்றும் அவர் சொல்லியிருக்கிறார். இந்தியாவில் வெளியான அரசாங்க அறிக்கைக்கு மாறானது இது. ஆனாலும் அமெரிக்காவில் வெளிப்படுத்தப்பட்ட இந்தச் செய்திக்குச் சமாதானம் ஏதும் வரவில்லை.

காந்தியடிகள் இந்தத் துயரச் சம்பவத்தில் எப்படி இருந்தார் என்பதைப்பற்றி ஒரு வார்த்தை நான் சொல்லவேண்டும். அவர் தளர்ச்சியோடு இருந்தது தெளிவாகத் தெரிந்தது. இப்போது அவர் இருக்கும் நிலைக்கு அவளும் பெரிய அளவில் காரணமாக இருந்திருக்கிறாள். ஆகவே அவர் வாழ்வில் நேர்ந்த இந்த இடைவெளி அவருக்குத் துயரத்தைத் தந்திருக்கிறது. ஆனாலும் ஞானத்தால் வந்த அமைதியும் உணர்ச்சியை அடக்கி ஆளும் தீரமும் அவரிடம் உள்ளன. அவரைச் சுற்றிலும் துக்கம் சூழ்ந்திருக்கிறது. ஆயினும் நானும் என் சகோதரர்களும் வெள்ளிக்கிழமையன்று விடைபெற்றுக்கொண்டபோது அவர் கண்ணீர் பெருக்கவில்லை; அதற்குப் பதில் வழக்கம்போல வேடிக்கையாகப் பேசினார். அவர் ஆரோக்கியமும் நன்றாகவே இருக்கிறது.

தந்தையை இழந்தபோது

நான் தாய்தந்தையில்லாக் குழந்தையாக நின்று பேசுகிறேன். நான் அவர்பால் வைத்திருந்த அன்பையும் அவர் என்பால் வைத்திருந்த அன்பையும் கடவுள் ஒருவரே அறிவார். எனக்கு அப்போது 20 வயது. மேல் படிப்புப் படிப்பதற்காக நான் காசிக்குப் புறப்பட்டேன். அப்போது அவர் என்னை அணைத்து முத்தமிட்

டது இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. அதற்கு முன் அவர் அப்படிச் செய்ததாக எனக்குத் தெளிவாக ஞாபகத்துக்கு வரவில்லை.

டெல்லியில் அவர் தங்கிய இந்தச் சில மாதங்களாக என்னுடைய மூன்று வயசுப் பையன் அவர் அன்பு வைத்துச் சீராட்டும் உரிமையைப் பெற்றான். நானே அவர் ஞாபகத்தில் பின்னே நின்றேன். பிர்லா மாளிகைக்கு நாங்கள் போகாவிட்டால், என்னைவிடக் கோபுவைப் பார்க்காமல் இருப்பதைத்தான் பெருங் குறையாகக் கருதுவார். சமீபத்தில் ஒரு முறை என்னிடம் அவர் அப்படிச் சொன்னார். அந்தக் குழந்தைப் பையன் தன்னைக் கண்டவுடன் தன் தாதா வரவேற்பதுபோலத் தன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு காட்டுகிறான். அதைக் காணும் போதெல்லாம் என் கண்ணில் நீர் துளிக்கிறது.

அண்ணல் உயிர் பிரிந்த முப்பது நிமிஷங்களுக்குப் பின் நான் போனபோது அவருடைய திருவுடல் உஷ்ணமாகவே இருந்தது. அவர் மேனி எப்போதும் மெதுவாகவும் வழுவழுப்பாகவும் அழகாகவும் இருக்கும். அவருடைய கையை என் இரண்டு கைகளாலும் மெல்ல அழுத்தினபோது ஒன்றும் சம்பவித்ததாகவே தோன்றவில்லை. ஆனால் நாடி நின்றிருந்தது. தம்முடைய படுக்கையில் அபாவின் மடியில் தலை வைத்தபடியே வழக்கமாகப் படுத்திருக்கும் கோலத்தில் கிடந்தார். சர்தார் படேலும் பண்டித நேருவும் மௌனமாக அவருக்கருகில் அமர்ந்திருந்தனர். வேறு பலர் பாடிக்கொண்டே அழுதார்கள். நான் நேரங் கழித்து வந்தேன். தந்தையின் செவியில், மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். என்ன பயன்? பல தடவைகளில் முன்பெல்லாம் அவர் என்னுடைய சிறு தவறுகளை மன்னித்ததுண்டு; ஆகவே இந்தக் கடைசித் தடவையும் என்னை மன்னித்து ஒரு முறையாவது பார்ப்பாரென்று ஆவலோடு நம்பினேன். ஆனால் அவர் வாய் இறுக மூடியிருந்தது; நித்திய நித்திரையில் அவர் விழிகள் பொருந்திவிட்டன. வழக்கமாக வேளை தப்பி வரும் மகனிடத்தில், "என் மோனத்தை இப்போது கலைக்கக்கூடாது" என்று உறுதியோடு தெரிவிப்பது போல எனக்குத் தோன்றியது.

அந்த இரவு முழுதும் விழித்திருந்தோம். அவருடைய வதனம் அமைதியாக இருந்தது; உடம்பைச் சுற்றித் தோன்றிய தெய்வ ஒளிச் சூழல் இனியதாக இருந்தது. அவற்றைப் பார்த்தபோது, பாபு தம் இணையற்ற தோழனென்று சொல்லிய மரணத்துக்கு நாம் அஞ்சுவதோ அதன் பொருட்டு வருந்துவதோ அதர்மம் என்றுகூடத் தோன்றியது. பிரார்த்தனைக்குப் போனபோது அவர் போர்த்திருந்த போர்வையையும் உடைகளையும் குளிப்பாட்டும் பொருட்டுக் கழற்றிய போதுதான் சகிக்க முடியாத துக்கம் பீறிக்கொண்டுவந்தது. அவர் உடை சுருக்கமாக இருந்தாலும், எப்போதும் பரிபூர்ணமான தூய்மையை அதில் காணலாம்; அன்று பின்னும் தூய்மையாக இருந்ததென்றுதான் சொல்ல வேண்டும். பிரார்த்தனைக் களமாகிய புல் வெளியில் விழுந்தார். அங்கிருந்த சிறு சிறு புல்லின் தளங்களும் புழுதியும் அவருடைய மேற் போர்வையில் இருந்தன. அவை அலுங்காமல் இருந்தது இருந்தபடியே இருக்கும்படியாக, போர்வையை மெல்லச் சுருட்டி வைத்தோம். சுருட்டினபோது போர்வையில் வெடித்த குண்டின் கூடு மாத்திரம் இருந்தது. மார்பை

யும் தோளையும் மூடியிருந்த ஆடையில் ரத்தத்தின் பரந்த கறைகள் இருந்தன. இடையிலிருந்த கோவண ஆடையையன்றி மற்றவைகளையெல்லாம் எடுத்து விட்டோம்; 'நிர்வாணப் பக்கிரி'யாக அவர் தோன்றிய அப்போது எங்களால் சோகத்தை அடக்க முடியவில்லை. அந்த முழங்கால்கள், அந்தத் திருக்கரங்கள், வழக்கமாக உள்ள கோலத்தில் அமைந்த விரல்கள், அந்தப் பாதங்கள் - எல்லாம் இயல்பான நிலையில் இருந்தன.

அன்று காந்தியடிகள் புல்வெளியிலுள்ள பிரார்த்தனைக் களத்திற்குச் செல்ல 5-10 மணிக்கு அறையிலிருந்து புறப்பட்டார். வழக்கமாக அவருக்கருகில் இருக்கும் அன்பர்கள் பக்கத்தில் இருந்தார்கள். அபா இடப்பக்கமும் மனு வலப்பக்கத்திலும் வர அவர்கள்மேல் சார்ந்தபடியே நடந்து செல்வார். யாவரும் தோட்டத்தின் படிகளின்மேல் ஏறும்போது, தாமதமாகிவிட்டது என்று அவர் சொன்னார். ஐந்து மணி தாண்டும் வரையில் அவர் சர்தார் படேலுடன் பேசியிருந்தார். வழக்கம்போல ஒரு நிமிஷம் ஓய்வு எடுத்துக்கொள்வதுகூட இல்லாமல் உடனே புறப்பட்டார். அப்போது தான் அந்த மனிதன் எங்கேயோ இருந்துவந்து அவரை அணுகினன். மற்றவர்களைப்போல அவனும் காந்தியடிகளை நமஸ்காரம் செய்யவோ அவர் பாதத்தைத் தொட்டுப் பணியவோ வருகிறானென்று எண்ணி மனு அவனை விலகும்படி செய்ய முயன்றாள். அவன் தனியே விலகி நின்று மூன்று முறை சுட்டான். காந்தியடிகளின் மார்பில் வலப்பக்கத்தில் மேலும் கீழுமாகக் குண்டுகள் பாய்ந்தன. அவர் கீழே சாய்ந்தார்; அபாவும் சாய்ந்தாள். எப்படியோ சமாளித்துக்கொண்டு அவர் தலையைத் தன் மடியில் தாங்கிக்கொண்டாள். "ராம ராம" என்று காந்தியடிகள் சொன்னது அவர்கள் காதில் விழுந்தது. குழப்பத்தில் ஆடவரும் பெண்களும் தலையில் அடித்துக்கொண்டு கதறிக்கொண்டிருக்கையில் கடைசி மூச்சு அவரிடமிருந்து நழுவியது. மாளிகைக்குள் கொண்டு வருவதற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன்தான் இது நிகழ்ந்திருக்க வேண்டும். அப்பால் இருள் படர்ந்தது.

தந்தையாரைச் சுற்றி அன்றிரவு அந்தத் துக்கமயமான அறையில் நாங்கள் அமர்ந்திருந்தோம்; அப்போது குண்டுகளின் காயத்துக்கும் தப்பி உடம்பு பலம் பெறும் என்றும், விடிவதற்குள் உயிர்பிழைத்து விடுவாரென்றும் ஓர் அசட்டு நம்பிக்கை உண்டாயிற்று. நேரம் போய்க்கொண்டிருந்தது. அவருடைய தூக்கத்தை எந்தச் சக்தியும் கலைக்க முடியவில்லை. அப்போது, சூரியோதயமே ஆகாமலிருக்கக் கூடாதா என்ற எண்ணம் என்பால் எழுந்தது.

மலர்கள் வந்தன; கடைசி யாத்திரை செய்யும் பொருட்டு அந்தத் திருமேனியை அலங்கரிக்கத் தொடங்கினோம். மார்பை மூடவேண்டாமென்று நான் கேட்டுக்கொண்டேன். பாபுவினுடைய மார்பைவிட அழகிய மார்பு வேறு எந்த வீரனிடத்திலும் இல்லை. பிறகு அவரைச் சூழ அமர்ந்து அவருக்கு விருப்பமான தோத்திரங்களையும் மந்திரங்களையும் சொன்னோம். இரவு முழுதும் கூட்டம் கூட்டமாக மக்கள் வந்துகொண்டிருந்தார்கள். விடியற் காலையில் அவரைத் தரிசித்துச் சென்ற மக்கள் மலர்களோடு காசையும் நோட்டையும் சொரிந்தார்கள். ஹரிஜன நிதிக்காக அண்ணல் கடைசியாகச் சேகரித்த பணம் இது.

முதல் நாள்தான் பாபுவோடு சில நிமிஷநேரம் இருக்கும் அரிய தில் அரிய பாக்கியம் கிடைத்தது எனக்கு. வழக்கம்போல் 9-30 மணிக்கு நான் வந்திருந்தேன். அவர் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தார். ஆசிரமத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சீக்கிரம் வர்தாவுக்குப் போகும் வண்டியைப் பிடிக்கவேண்டும் என்று சொல்லி முடித்த சமயம் அது. நான் உள்ளே புகுந்தேன். "என்ன செய்தி?" என்று கேட்டார். நான் ஒரு சமாசாரப் பத்திரிகைக்காரன் என்ற நினைவோடு அப்படிக் கேட்பது அவர் வழக்கம்.

அவர் கேட்டபோது அவரிடம் சொல்லச் சமாசாரம் ஒன்றும் இல்லை. ஆகவே, "அரசாங்கக் கப்பல் எப்படிச் சென்றுகொண்டிருக்கிறது?" என்று நான் கேட்டேன். "சின்ன வித்தியாச மெல்லாம் பறந்து போகும். ஆனால் நான் வர்தாவிலிருந்து திரும்பும் வரையில் விஷயங்கள் முடிவு பெறுமல் காத்திருக்கலாம். அது நீண்ட நாள் ஆகாது. தேசபக்தர்கள் சேர்ந்த அரசாங்கம் இது. தேச நலனுக்கு விரோதமாக எதையும் யாரும் செய்யமாட்டார்கள். என்ன வந்தாலும் அவர்கள் இணைந்து நிற்க வேண்டும்; நிற்பார்கள். சாரமான கருத்தில் வித்தியாசம் இல்லை" என்று அவர் சொன்னார். இந்தப் போக்கிலே சம்பாஷணை நடந்தது. இன்னும் அதிகமாகத் தாமதித்திருந்தால் அந்த அகாலத்தில்கூடக் கூட்டம் சேர்ந்திருக்கும். ஆகவே விடைபெற்றுக் கொள்ள எண்ணி, "பாபூ, தூங்குகிறீர்களா?" என்றேன். "இல்லை; அவசரம் இல்லை. வேணுமானல் இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருக்கலாம்" என்றார். ஆனல் அந்த அநுமதியை மறுநாள் நான் பயன்படுத்திக் கொள்ள முடியாமற் போயிற்று!

சில நாளுக்கு முன் இரவு பேசிவிட்டு விடைபெற்றுக் கொண்ட போது, "பியாரேலாலை என்னோடு சாப்பிட அழைத்துப் போகிறேன்" என்றேன். "ஓ, செய். ஆனல் நீ என்றாவது என்னை அழைக்க வேண்டுமென்று எண்ணியது உண்டா?" என்று குலுங்கிய சிரிப்போடே கேட்டார். அது அவருக்கு இயல்பு.

நேற்று என் நெருங்கிய நண்பர் ஒருவருடைய மனைவி என்னைக் கண்டு பேச விரும்பினாள். பொது விவகாரத்தில் அவளுக்குச் சிரத்தை இல்லை. மிருதுவான ஸ்வபாவமும் தயையும் பொருந்தியவள். அவள் என்னிடம், "அந்த மனிதனைத் தூக்கிலிடக்கூடாது என்று கேட்டுக் கொள்வதற்காக உங்களிடம் வந்தேன். அவனைப் பட்டினி கிடந்து வேதனைப்பட்டுச் சாகும்படி விட வேண்டும்" என்றாள். அவளுக்கு அத்தனை கோபம். மற்றொருவர், "அவனைச் சித்திரவதை செய்யக் கூடாது; நாம் நாகரிக மனிதர்களாயிற்றே. அவன் நெஞ்சம் இந்தப் பாவச் சுமையைச் சுமந்து வருந்திக்கொண்டே அவன் வாழ்வதை நான் பார்க்கவேண்டும்" என்றார்.

இந்தச் சம்பவத்தை அறிந்து சிலர் மிட்டாய்களை உண்டு கொண்டாடினார்களென்று சொல்கிறார்கள். வார்த்தையினல் சொல்ல இயலாத விநோதம் அது. என்ன விளையும் என்ற நினைவோ வேறு நோக்கமோ அவர்களுக்கு இல்லை. அவர்களை என்ன செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்துக்குத் தெரியும். அதன் பொறுப்பிலே அவர்களை விட்டுவிட வேண்டும்.

எந்த வகையிலானாலும் பழி வாங்குவதென்பதற்கு இங்கே

இடமில்லை. அப்படிச் செய்தால் பாபு திரும்ப வந்துவிடுவாரா? ரத்தக்களரியிலே அறிவிழந்து நாம் நிற்க அவர் விரும்புவாரா? மாட்டார்.

நாம் அவரைச் சரியாகக் காப்பாற்றவில்லை என்று தோன்றலாம். பாபு இருந்த நிலையில் அவரைப் பூரணமான காவலுக்குட்படுத்த முடியுமா? 78 வருஷகாலமாகக் கடவுளையன்றி வேறு பாதுகாப்பு அவருக்கு என்ன இருந்தது? எந்தக் காலத்திலும் அவர் அபாயத்துக்கு ஆளாகும் நிலையிலேயே இருக்கவில்லையா? நம்முடைய துயரத்தினுலும் அவசர புத்தியினுலும் நம்மைப் போலவே உள்ளம் நீராயுருகும் அன்பர்களைக் கடமையைச் சரியாகச் செய்யாதவர்கள் என்று குறை கூறவேண்டாம்.

வருங்காலம் இருண்டிருக்குமென்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். வருங்காலத்தைப் பற்றி ஞானிகளுக்குத்தான் தெரியும். அதைச் சொல்ல வேறு யாரால் முடியும்? இப்போது இருள் படர்ந்திருக்கிறது என்பது வாஸ்தவம். ஆனுல் பாபு எதற்காக வாழ்ந்து உயிரை வழங்கினுரோ அந்த லட்சிய சித்திக்காக நாம் உழைத்தால் வருங்காலம் பிரகாசமாகத்தான் இருக்கவேண்டும்.

பாபு இப்போது பேரின்ப வீட்டில் இருக்கிறுர். அவருடைய பூத உடம்பை நாம் இனிப் பார்க்க முடியாது. சென்ற நான்கு மாதங்களாக ஒவ்வொரு நாளும் அவர் செய்த உபதேசங்களில் என்ன என்ன சொல்ல வேண்டுமோ அவற்றையெல்லாம் சொல்லி வழிகாட்டியிருக்கிறுர். நாம் வேணுமானுல் சண்டையிட்டுச் சீரழியலாம். ஆனுல் ஒன்றுபடும் துறையில் சிறிது முயன்றுல் கப்பிய காரிருளைக் கலைத்துக்கொண்டு ஒளி உதயமாவதைக் காணலாம்.

வரிக்கழுதை போலவா ?

ஐ. நா. ஸ்தாபனத்துக்கு இந்தியப் பிரதிநிதி கோஷ்டியின் தலைவராக வந்திருந்த விஜயலட்சுமியின் மகள் தாரா நல்ல அழகி. நியூ யார்க் நகர வீதி ஒன்றில், தாராவை ஒரு பிரிட்டிஷ் பிரதிநிதி சந்தித்தார்.

"மிஸ் பண்டிட், உங்கள் சுதேசி உடையில் நீங்கள் எவ்வளவு வசீகரமாயிருக்கிறீர்கள் !" என்று அவர் சொன்னுர்.

தாரா பிரிட்டிஷ் பிரதிநிதியின் உடையை ஒரு பார்வை பார்த்தாள். அதில் வரிவரியாய்க் கோடுகள் போட்டிருந்ததைப் பார்த்தபடி, "ஆமாம். நீங்களும் அப்படித்தான்!" என்றுள்.

—துண்டுத்தாள், ஐ. நா. சங்க வெளியீடு.

* * * *

தேனீயானது ஒரு மலருக்கோ மணத்துக்கோ வர்ணத்துக்கோ ஊறு செய்யாமல் எப்படித் தேனை மாத்திரம் பருகுகிறதோ, அப்படியே மகான்களும் உலகத்துக்குத் துன்பம் செய்யாமல் நல்லவைகளைக் கிரகிக்கிறுர்கள்.

—புத்தர்

சொல் பொருந்துமா?

கீழுள்ள வார்த்தைகளில் பொருத்தமாக உள்ளவற்றைப் பின்னே உள்ள வாக்கியங்களில் அமைத்துப் பாருங்கள் :

வார்த்தைகள்:

1. கிடையாது
2. இல்லை

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(க) கிராமமானாலும் பட்டணமானாலும் பிச்சைக்காரன் எவ்வளவு அலைந்தாலும் அரிசிப் பிச்சை......

(ங) ஆயிர வருஷங்களுக்கு முன் மிளகாய் தமிழ் நாட்டுச் சமையலில் உபயோகப்பட்ட து......

வார்த்தைகள்:

3. மறு
4. மரு

பொருத்தவேண்டிய வாக்கியங்கள் :

(ச) சந்திரனுக்கு......இருப்பது போல எவ்வளவு பெரியவரானாலும் ஒரு குறை இருக்கத்தான் இருக்கும்.

(ஞ) பூம்பொழிலில் மலரின்...

(ட) ......வும் மருக்கொழுந்தும் வாடினாலும் வாசனை வீசுகின்றன.

வார்த்தைகள்:

5. நாட்டம்
6. நோக்கம்

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(ண) ஆயிரம் தர்மம் செய்தாலும் அவனுக்கு லாபத்தின் மேல்...

(த) கடவுளைத் தொழுவதன்... நமக்கு மனம் அமைதியாக இருக்க வேண்டும் என்பதே.

வார்த்தைகள்:

7. துறத்தல்
8. துரத்தல்

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(ந) சின்னஞ் சிறுபிள்ளையை இந்த வயசிலே பள்ளிக்கூடத்துக்குத் ...மிகவும் கொடுமையான செயல்.

(ப) செய்யுவேண்டிய கடமைகளை விட்டுவிட்டு வீட்டைத்......இந்தக் காலத்துக்குச் சிறிதும் ஏற்றதன்று.

வார்த்தைகள்:

9. உறுப்பு
10. உருபு

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(ம) முப்பத்திரண்டு...ம் குறைவற அழகாக அமைந்த பேரழகன் அவன்.

(ய) வீடு பெரிதானாலும் வாசல் முதலிய உ...க்கள் அதற்கு ஏற்றபடி இல்லை.

(ர) ஆல் என்பது மூன்றும் வேற்றுமை......

(ல) உ......பு மயக்கம் என்பது இலக்கணத்தில் வருகிற விஷயம்.

வார்த்தைகள்:

11. பொறுத்தல்
12. பொருத்தல்

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(வ) ஆணுக்கு ஏற்ற பெண்ணைப் ......தி வைப்பது ஆண்டவன் செயலென்பது பொய்.

(ழ) என்னைப் பொ......த வரையில் இந்தக் காரியத்துக்கு ஒருதவியும் கிடைக்காது.

(விடை 16-ஆம் பக்கத்தில்)

வைத்தியருக்குச் சம்மானம்

டி. என். எஸ். ராகவாச்சாரி

வைத்தியர்களுக்குத்தானே வைத்தியத்தின் அருமை தெரியும்? வைத்தியர்களுக்கு ஒவ்வொரு காலத்திலும் மக்கள் வழங்கி வந்த சம்மானச் சிறப்புக்களைப்பற்றி மட்டிலும் அல்லாமல், இழைத்த விநோதக் கொடுமைகளைப் பற்றியும் ரசமாய் எடுத்துச் சொல்லும் இந்தக் கட்டுரையாளர், சென்னைச் சுகாதார இலாக்கா நோய்க்கிருமி ஆராய்ச்சி நிபுணராயிருந்தவர்.

வைத்தியர்களுக்குச் சம்மானம் கொடுக்கும் வழக்கம் 4,000 வருஷங்களுக்கு முந்தியே இருந்திருக்கிறது. 1902-ஆம் ஆண்டு சூஸா என்னும் இடத்தில் எட்டடி உயரமுள்ள ஒரு சிலாசாஸனத்தை, ஒரு பிரெஞ்சு ஆராய்ச்சிக்காரர் கண்டுபிடித்தார். அதில் விவாகரத்து முதல் நஷ்டஈடு வரைக்கும் பல பிரச்னைகளுக்கு முடிவு சொல்லப்பட்டிருக்கிறது.

பாபிலோன் ராஜ்யத்தின் ஆறுவது அரசர் ஆரமாபெல் என்பவர் ஹம்முராபி தர்மங்களை அந்தச் சாஸனத்தில் செதுக்கி வைத்திருக்கிறார். வைத்தியனுக்கு எவ்விதம் சம்மானம் கொடுக்க வேண்டும் என்ற விதிகளும் அந்தச் சாஸனத்தில் அடங்கியிருக்கின்றன.

ஓர் எலும்பு நழுவியதைக் குணப்படுத்த (1) ஒரு பணக்காரன் 5 வெள்ளி ஷெகலும் (2) நடுத்தர வகுப்பினன் 3 வெள்ளி ஷெகலும் (3) அடிமைக்காக அவனுடைய எஜமான் 2 வெள்ளி ஷெகலும் கட்டணம் செலுத்த வேண்டும் என்று அந்த அரசன் சொல்லுகிறான். ஒரு வெள்ளி ஷெகல் ஒன்றரை ரூபாய்க்குச் சமம். அந்தக் காலத்தில் பணத்துக்கிருந்த மதிப்பைக் கொண்டே இந்தக் கட்டண விகிதங்களைக் கவனிக்க வேண்டும். அப்போது பத்து வெள்ளி ஷெகல்தான் சாதாரணமாய் ஒரு தொழிலாளிக்குக் கிடைத்து வந்த வருஷ வருமானம். 5 ஷெகல் என்பது ஒரு தொழிலாளியின் அரை வருஷ வருமானமாகும். தற்காலத்தில் பணத்துக்குள்ள மதிப்பைக் கொண்டு பார்த்தால், இந்த 5 ஷெகல் என்பது நூறு ரூபாய்க்குச் சமமாகும். ஓர் எலும்பு நழுவியதைக் குணப்படுத்த இந்தக் காலத்தில் நூறு ரூபாய் சம்மானம் என்பது அதிகம் அல்லவா?

நம்பவே முடியாத மிகப் பெரும் சம்மானத்தை யாராவது சில சமயம் வைத்தியருக்கு அளித்த செய்திகளை இக்காலத்தில் அபூர்வமாகக் கேள்விப்படுகிறோம். ஆர்கோஸ் ராஜ்யத்தின் அரசன் ப்ரோடியஸ் என்பவன் மெலாம்பஸ் என்ற வைத்தியருக்கு அளித்த சம்மானத்துக்கு முன் இந்தச் சம்மானமெல்லாம் மகா அற்பமாகும். அந்த அரசனுக்கு இரண்டு குமாரிகள். அவர்களுக்குப் பித்துப்

காப்பிரைட்: பீப்பிள்ஸ் ஹெல்த் (ஆங்கிலம்: ஜனவரி '48), லாயிட் ரோட், சென்னை.

பிடித்துவிட்டது. இந்த ராஜ குமாரிகள் இருவரும் தங்களைப் பசு மாடுகள் என்று நினைத்து மயங்கிக் காட்டிலே திரியத் தொடங்கினர்கள். இந்த வியாதி ஒரு தொத்து நோயாக ஊரிலுள்ள மற்றப் பெண்களையும் பீடித்துப் பரவியது. அவர்களும் இப்படியே வனவாசம் செய்யக் கிளம்பிவிட்டார்கள். மெலாம்பஸ் என்ற வைத்தியரை அரசர் வரவழைத்தார். அவர் இந்த ராஜகுமாரிகளுக்கு 'ஹெல்லபோர்' என்ற பச்சிலை மருந்தைக் கொடுத்தார். அது இன்று பூச்சிகளைக் கொல்ல உபயோகப் படுகிறது. அந்தக் காலத்தில் இதைப் பைத்தியத்துக்கு மருந்தாக எண்ணியிருந்தார்கள். ராஜகுமாரிகளுக்கு இந்த மருந்தைக் கொடுத்து, அவர்களை ஓட ஓடத் துரத்தும்படி சில வாலிபர்களையும் ஏவி விட்டார் வைத்தியர். ராஜகுமாரிகள் ஓடி ஓடிக் கடைசியிலே களைத்து விழுந்தார்கள். அப்புறம் ஓர் ஊற்றுநீரில் ராஜகுமாரிகளுக்கு ஸ்நானம் செய்துவைத்தார்கள். நோய் குணமாயிற்று. இதற்குச் சம்மானமாக அரசன் தன் ராஜ்யத்தில் மூன்றில் ஒரு பாகத்தையும் ராஜகுமாரிகளில் ஒருத்தியையும் வைத்தியருக்குக் கொடுக்க முன் வந்தான். ஆனால் வைத்தியரோ, அரசனின் ராஜ்யத்தில் மூன்றில் இரு பாகங்களையும் இரண்டு ராஜகுமாரிகளையுமே சம்மானமாகக் கேட்டார். அரசனும் மறுக்கவில்லை; அப்படியே கொடுத்தான். மெலாம்பஸ் இந்தச் சம்மானத்தைத் தாமும் தம் தம்பியுமாகப் பங்கிட்டுக்கொண்டார்.

கிறிஸ்துவுக்குப் பிந்திய இடைக் காலத்தில் இதாலியிலும் பெண்களுக்கு இம்மாதிரி ஒரு நாட்டியப் பைத்தியம் உண்டாயிற்று. டாரண்டெல்லாஸ் என்பவர் அதற்கென்றே பிரத்தியேகமாகச் சில சாகித்தியங்களை இயற்றி, அந்தச் சங்கீதத்தின் மூலம் பெண்களின் பைத்தியத்தைக் குணப்படுத்தினராம்.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் அரசாண்ட டேரியஸ் என்ற பிரபல பாரசீக மன்னனுக்குக் கணுக்கால் சுளுக்கிக்கொண்டது. அரசனுக்கு இராத் தூக்கமில்லை. செய்து கொண்ட வைத்தியமெல்லாம் சுளுக்கை மோசமாக்கி விட்டது. பல கிரேக்கர்களை டேரியஸ் சிறைப் படுத்திக்கொண்டு வந்திருந்தான். அந்தக் கைதிகளில் புகழ்பெற்ற ஒரு வைத்தியன் இருக்கிறான் என்று அரசனிடம் யாரோ சொன்னர்கள். கைகளிலே விலங்கும் கந்தைத் துணியுமாய் அந்தக் கைதியை அரசனின் முன்பு அழைத்து வந்தார்கள். டெமொஸீட்ஸ் என்று அவனுக்குப் பெயர். அவன் ஹிதமான தைலங்களைத் தடவி, கைகளால் சுகமாகப் பிடித்துவிட்டு, அரசனின் சுளுக்கைக் குணப்படுத்தினன். வலி குறைந்தது; வீக்கம் வடிந்தது. அரசன் மகிழ்ச்சியடைந்தான். கைதியின் இரும்பு விலங்கைக் கழற்றி விட்டான். அதற்குப் பதிலாக, மதிப்பரிய நவரத்தினங்கள் பதித்த சொர்ண விலங்கை அவன் கையிலே மாட்டி விட்டான்!

ரோமர்களுக்கு வைத்தியம் தெரிய வெகு காலத்துக்கு முன்பே, பழங் காலக் கிரேக்கர்கள் சாஸ்திரீயமான வைத்தியக் கலையை அறிந்திருந்தார்கள். அவர்கள் ரோமாபுரிக்குள்ளும் சென்று தங்கள் வைத்தியத் தொழிலை நடத்தத் தொடங்கினர்கள். கிறிஸ்து பிறக்க 200-வருஷங்களுக்கு முன்பு இது நடந்தது. இந்தக் கிரேக்கர்களின் வைத்தியத்தை வீர ரோமர்கள் பெரி

தும் எதிர்த்தார்கள். வியாதிகளைக் குணப்படுத்த, மதச் சடங்குகளையே ரோமர்கள் அந்தக் காலத்தில் நம்பியிருந்தார்கள். இந்த இருபதாம் நூற்றூண்டிலுங்கூடச் சிலர் நம் நாட்டில் வியாதிகளை மகமாயி, மகாகாளி, மாரியம்மன் என்று நம்பிக்கொண் டிருக்கிறார்கள் அல்லவா? இதே போலத்தான் ரோமர்களும் அப்போது, ஒவ்வொரு வியாதிக்கும் ஓர் அதிதேவதை இருப்பதாக எண்ணியிருந்தார்கள். சொறி சிரங்குக்குக்கூட ஒரு தேவதை உண்டென்று அவர்கள் நம்பிச் சடங்கு புரிந்தார்கள். வியாதி குணமாக வைத்தியனுக்கு அவர்கள் கட்டணம் செலுத்துவதில்லை. நம் பாட்டிமார்கள் மாதிரி, சாமிக்குப் பற்பல வேண்டுதல்களைத் தம்மிச்சையாக அவர்கள் செய்துகொள்ளுவார்கள். வியாதி இருக்கிறவரையில் சாமிக்குப் பிரமாதமான காணிக்கைகளைச் செலுத்துவதாக வேண்டுதல்கள் நடக்கும். வியாதி குணமானதும், அற்பக் காணிக்கையே செலுத்துவார்கள். ஆள் தீர்ந்து விட்டாலோ அல்லது வியாதியால் சொற்ப அங்கவீனம் நேர்ந்தாலோ சாமிக்கு அதுவும் கிடைக்காது. இதெல்லாம் அவரவர் இஷ்டம். ஆனால் கிரேக்க நாட்டிலிருந்து ரோமுக்கு வந்த வைத்தியர்கள், தாங்கள் செய்யும் சிகிச்சைக்கு ஊதியமாகப் பணம் வசூலிக்க ஆரம்பித்தார்கள். இதனால் சிகிச்சையின் மதிப்பு உயர்ந்துவிட்டது. பணத்தைக் கொடுத்து அடையும் எதுவும் மதிப்புள்ளதாகத் தானே இருக்கும்? பல கிரேக்க வைத்தியர்கள் வெகு சீக்கிரத்தில் பிரபுக்களாகிவிட்டார்கள்.

அமெரிக்க நாடுகளில் மத்திய நூற்றூண்டுகளில் வைத்தியர்களுடைய ஊதியம் மிகவும் அதிகமாய் இருந்து வந்தது. சாதாரணமாக டாக்டர் இரண்டு தரம் வந்து பார்ப்பதற்கு 10 சதம். இந்தத் தொகை ஒரு சாதாரணத் தொழிலாளியின் தினசரி ஊதியமாகும். அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் முதலில் தம்முடன் அழைத்துச் சென்ற வைத்தியனுக்கு மொத்தம் 40 டாலர்கள் (ரூ. 120) சம்மானம் கொடுத்தார்; அதாவது நாள் ஒன்றுக்கு எட்டணுச் சம்பளம். ஐரோப்பாவில் ஆதிகாலத்தில் ஒரு வைத்தியர் ரண சிகிச்சை செய்வதென்றால், ஆபத்துக்குத் துணிய வேண்டும். நோயாளி குணமாகாவிட்டால், ஜனங்கள் வைத்தியனுடைய கை காலையோ தலையையோ வாங்கி விடுவார்கள். கி. பி. 500-ஆம் வருஷத்தில், பர்கண்டி அரசனின் மனைவியை இரண்டு சர்ஜன்களால் குணப்படுத்த முடியவில்லை. அரசன் அந்த இரண்டு சர்ஜன்களையும் தன் மனைவியின் சமாதிக்கு மேலேயே கொண்டுபோய் நிறுத்திச் சிரச்சேதம் செய்துவிட்டான். ஒரு பொஹீமிய இளவரசன் குருடன். அவனுடைய குருட்டுத்தனத்தைச் சொஸ்தப்படுத்த முடியாத தோஷத்துக்காக,1337-இல் புகழ் வாய்ந்த ஒரு ரண வைத்தியனை ஓடர் நதியில் தூக்கி எறிந்துவிட்டார்கள். 1464-இல் ஒரு ஹங்கேரிய அரசன் தனக்கேற்பட்ட அம்புக் காயத்தைச் சொஸ்தப்படுத்துபவருக்கு வெகுமதியும், சொஸ்தப்படுத்த முன் வந்து தவறுவோருக்குத் தூக்குமரமும் கிடைக்கும் என்று பிரகடனம் விடுத்தான்.

ஐரோப்பாவின் மத குருக்கள்கூட இப்படிப்பட்ட நிபந்தனைகளை விதித்தார்கள். ஜான் என்ற 12-ஆவது போப் தீராத கொடிய வியாதியால் கஷ்டப்பட்டார். தம் வியாதியைக் குணப்படுத்த வந்த வைத்திய

ஞல் அது முடியாமற் போகவே, அவர் அவன் தோலை உரித்துவிடச் செய்தார். போப்பைக் காப்பாற்றத் தவறிய இன்னொரு சர்ஜனை, போப் இறந்தவுடன் அவருடைய நண்பர்கள் உயிரோடு வைத்துக் கொளுத்தி விட்டார்கள்.

சொஸ்தமாகும் போலிருந்தால் தான் வைத்தியம் செய்ய அந்தக் காலத்தில் வைத்தியர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஓர் ஆங்கில வைத்தியன் 14-ஆம் நூற்ருண்டில் ஒரு பிரபுவுக்கு ஒரு சிறு ஆபரேஷனைச் செய்து வெற்றி அடைந்தான். அந்த வைத்தியனுக்கு ரொக்கமாக முப்பது கினியும் அந்தப் பிரபு உயிரோடு இருந்த ஒவ்வொரு வருஷமும் மூன்று கினியும் ஒரு கம்பளிச் சட்டையும் சம்மானம் கிடைத்தன. பண மதிப்பு இப்போதைப்போல் நாற்பது மடங்காக இருந்த காலம் அது என்பதை இங்கே ஞாபகம் வைக்கவேண்டும்.

இந்தக் காலத்திலும் நாம் சில பிரமாதமான சம்மானங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். 18-ஆம் நூற்ருண்டின் இறுதியில் ருஷ்ய தேசத்து அரசி ஜாரிணு காதரின் என்பவள் தனக்கும் தன் பிள்ளைக்கும் பெரியம்மை வராமல் தடுத்துக்கொள்வதற்காக ஒரு டாக்டரிடம் அம்மை குத்திக்கொண்டாள். இதற்குச் சம்மானமாக, 30 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம், டாக்டரின் ஆயுள் உள்ள வரையில் ஒன்றரை லட்ச ரூபாய் வருஷ மான்யம், பேரன் பட்டம் இந்த மூன்றையும் டாக்டருக்கு அரசி வழங்கினுள்.

இந்தியாவில் ஒவ்வொரு ஸம்ஸ்தானத்துக்கும் பழங்காலம் முதலே ஆஸ்தான வைத்தியர்கள் இருந்து வந்தார்கள். அவர்களுக்கு நல்ல சம்மானமும் மரியாதையும் கிடைத்து வந்தன. அந்தக் காலத்தில் கிராமங்களிலே கிராம வைத்தியர்களுக்கு ஒவ்வொரு குடும்பமும் வருஷ முடிவில் பண்டமாக வருஷ வர்த்தனை கொடுத்து வருவது வழக்கம்.

சீனுவில் குடும்ப வைத்தியர்களுக்கு வருஷ வர்த்தனையை நான்கு தவணைகளாகக் கொடுப்பார்கள். குடும்பத்தில் யாருக்கும் வியாதி வராமல் இருந்தால்தான் டாக்டருக்கு முழுச் சம்மானமும் கிடைக்கும். யாருக்காவது வியாதி வந்துவிட்டால் டாக்டருடைய சம்மானமும் அதற்குத் தகுந்தாற் போலக் குறைந்துவிடும்.

நம் நாட்டிலும் சில உயர் வகுப்பினர் குடும்ப வைத்தியர்களை அமர்த்திக் கொள்கிருர்கள். இவர்கள் அடிக்கடியோ அல்லது தினசரியோ வாடிக்கைக் குடும்பத்தார்களை வந்து பார்த்துவிட்டுப் போவார்கள். இதுதான் வியாதியைத் தடுப்பதற்குச் சிறந்த முறையாகும். தேர்ந்த டாக்டர்களின் யோசனையை முன்னெச்சரிக்கையாகக் கேட்டு நடந்துகொள்வதனுல், பணம் மிச்சமாகும்; வேதனையும் உயிர்ச் சேதமும் குறையும்.

பொருந்தும் சொல்

[12-ஆம் பக்கத்தில் உள்ள கேள்விக்கு விடை]

1—க	5—ண	9—ம, ய.
2—ஙு	6—த	10—ர, ல.
3—ச	7—ப	11—ழ
4—ஞ, ட	8—ந	12—வ

நமக்கு வேண்டிய தொழில்கள்

டாக்டர் என். என். கோட்போலே

தொழில் துறையில் முன்னேறிய நாடுகளில் இன்று ஜெர்மனி, அமெரிக்கா, ருஷ்யா, ஜப்பான், இங்கிலாந்து ஆகிய நாடுகள் முதன்மையானவை. விஞ்ஞான முறையில் ஆராய்ச்சிகள் செய்து செயல் திறமையை உண்டாக்கிய நாடு ஜெர்மனி ஒன்றுதான். முதல் உலகப் போரில் நான்கு வருஷங்களிலும், இரண்டாவது உலகப் போரில் ஆறு வருஷங்களிலும் ஆகப் பத்து வருஷங்களுக்குள் ஜெர்மனியில் ஏற்பட்ட தொழில் முன்னேற்றம், மற்ற நாடுகளின் ஐம்பது வருஷ முன்னேற்றத்தைவிட மேம்பட்டது. இந்த யுத்தம் முடிந்த பிறகு அமெரிக்காவும் பிரான்ஸும் இங்கிலாந்தும் ருஷ்யாவும் தம்முடைய பிரதிநிதிகளை ஜெர்மனிக்கு அனுப்பி வருகின்றன. அந்தப் பிரதிநிதிகளிலே பலர், "சென்ற எழு ஆண்டுகளாக ஜெர்மனி மற்ற எந்த நாட்டையும் விட ஐம்பது ஆண்டுகள் முன்

கட்டுரையின் ஆசிரியர் ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று நீண்ட காலம் இருந்து, அங்கு நடக்கும் குடிசைத் தொழில்களையெல்லாம் ஆழமாக ஆராய்ச்சி புரிந்து வந்திருப்பவர். அவற்றின் நுணுக்கங்களையெல்லாம் அறிந்தவர். நம் நாட்டுக்குத் தேவையான தொழில்கள் யாவை என்பதையும், அவற்றைப் பெருக்க எத்தகைய சாதனங்களை வளர்க்க வேண்டும் என்பதையும் இங்கே தெளிவாக எடுத்துரைக்கிறார்.



வியாபார வளர்ச்சிக்கு மின்சார வசதி மிகவும் தேவை.

நோக்கிப் போயிருக்கிறது" என்று எழுதியிருக்கிறார்கள்.

போருக்கு முன்பு ஜெர்மனியிலே ரப்பர், எண்ணெய், வெண்ணெய், கம்பளம், கிளிஸரின், தோல், பட்டு, கொழுப்பு, பெட்ரோல், வெடிகுண்டு ஆகிய இவ்வளவையும் செயற்கை முறையிலே உண்டாக்கினார்கள். அவ்வளவென்ன, ரத்தத்தைக்கூடச் செயற்கை முறையில் படைத்தார்கள். தினசரி வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் செயற்கையாக உண்டாக்கி, அந்தப் பலத்தினால் உலகம் முழுவதிலும் ஐந்து வருஷ காலம் ஆதிக்கம் செலுத்தினார்கள். "ஜெர்மனியிலிருந்து ஒரணுக் கத்தி வாங்கினாற்கூட அதில் இன்று வரையில் கிடைத்துள்ள விஞ்ஞான அறிவு முழுவதையும் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம்" என்று ஓர் அமெரிக்க விஞ்ஞானப் பத்திரிகை எழுதியது.

அமெரிக்காவிலும் புதிய விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடக்கின்றன. ஆயினும் அவர்கள் பெரும்பாலும் ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து

காப்பிரைட்: கிர்லோஸ்கர் (மராட்டி: டிசம்பர் '47), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

சரக்குகளைக் கொண்டுவந்து அவற்றைப் பெரிய அளவில் ஏராளமாகத் தம் நாட்டிலே உண்டாக்கனார்கள். 1923-இல் யுத்த நஷ்ட ஈட்டுக்காக ஜெர்மனி அமெரிக்காவுக்கு இஸட் ஆர் 3 என்ற ஆகாயக கப்பலைக் கொடுத்தது. ஹைட்ரஜன் வாயு நிரம்பிய இந்த ஆகாயக் கப்பலை உண்டாக்கிய டாக்டர் ஹேக்னர் என்பவர் தாமே நியூ யார்க்குக்குச் சென்று இந்த ஆகாயக் கப்பல்களை அமெரிக்கரிடம் ஒப்படைத்தார். பெர்லின் தெருக்கள் வழியாக இவை அமெரிக்காவுக்குப் பறந்துபோவதை லட்சக் கணக்கான ஜெர்மன் மக்கள் பார்த்து மனம் புழுங்கினார்கள். அதற்குப் பிறகு அமெரிக்கர்கள் இதைவிட நான்கு மடங்கு பெரிய ஆகாயக் கப்பலைக் கட்டி, அதில் ஹைட்ரஜனுக்குப் பதிலாக ஹீலியம் என்ற வாயுவை நிரப்பினார்கள். ஹைட்ரஜன் வெடிக்கும் பொருள்; ஆதலால் ஹீலியத்தை உபயோகிப்பது பாதுகாப்பு அளிப்பது. ஜெர்மனியில் வேண்டிய அளவுக்கு ஹீலியம் கிடைப்பதாக இல்லை; தன்னிடமுள்ள இந்தப் பொருளை ஜெர்மனிக்குக் கொடுக்க அமெரிக்கா தயாராக இல்லை. மொத்தத்தில், வெளிநாட்டுச் சரக்கைவிடப் பெரியதாகவும் உயர்ந்ததாகவும் தன் சரக்கு இருக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் நோக்கம்.



குடிசைத் தொழிலை வளர்க்க 'கான்' வேண்டும்.

'மிகப் பெரியது, மிக உயர்ந்தது' என்பது அமெரிக்காவின் நோக்கமென்றால், 'மிகச் சிறியது, மிக உயர்ந்தது' என்பது ஜப்பானின் நோக்கம். எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும், அதைப்பற்றி அடிமுதல் நுனிவரையில் எல்லாத் தகவல்களையும் நுணுக்கமாக ஆராய்ந்து, மிகவும் சொற்பமான முதல் போட்டு, அந்தத் தொழிலைச் சிறு அளவில் வெற்றிகரமாக நடத்தும் திறமையில் ஜப்பானியருக்கு இணையானவர்கள் இன்றுவரைக்கும் உலகிலேயே யாரும் இல்லை. தொழிலுக்கு முக்கியமான தேவைகளாகிய மின்சார சப்ளை, காஸ் சப்ளை, போக்குவரவுச் சாதனம் ஆகிய மூன்றையும் ஜப்பானிய சர்க்கார் தங்கள் வசம் வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த மூன்றையும் தேசிய மயமாக்கி மிகக் குறைந்த செலவில் இவற்றை அரசாங்கத்தார் மக்களுக்கு வழங்கினார்கள். 1868-இலிருந்தே நாட்டில் சட்டாயப் படிப்பை ஏற்படுத்தி, படிக்கத் தெரியாத ஆணோ பெண்ணோ பார்ந்துக்குக்கூடக் கிடைக்காதபடி செய்து விட்டார்கள். தொழிற் போட்டியில் ஜெர்மனியும் ஜப்பானும் முன்னணியில் நின்றதன் ரகசியம் இதுதான்.

ருஷ்யாவைச் சுற்றி ஓர் எஃகுத் திரையைப் பரப்பியிருப்பதனால் அந்த நாட்டின் தொழில் முன்னேற்றத்தைப்பற்றி உலகுக்கு அதிகமாகத் தெரியவழியில்லை. பல தொழில்கள் மிகப் பெரிய அளவில் அங்கே நடக்கின்றன; ஆயினும் இவற்றில் ருஷ்

யர்கள் புதிதாகத் தாமே ஆராய்ந்து நடத்தும் அம்சம் எவ்வளவு, ஜெர் மனியிலிருந்து அவர்கள் கைக் கொண்ட அம்சம் எவ்வளவு என்ப தைக் கண்டுபிடிப்பது இன்னமும் சிரமமாக இருக்கிறது.

இங்கிலாந்திலோ பிரான்ஸிலோ சொந்தத் தொழில் என்பது சொற் பந்தான். இங்கிலாந்தில் நடக்கும் மிகப் பெரிய தொழில் அரசியல்! அதன் வலுவினால் வெளிநாடுகளில் அது தன் வியாபாரத்தைப் பரப்பி யது. ஜெர்மனியிலிருந்தோ அமெ ரிக்காவிலிருந்தோ மொத்தமாகச் சரக்குகளை வரவழைத்து, 'இங்கி லாந்தில் செய்தது' என்று முத்திரை போட்டு இந்தியாவிலே விற்கும் வியாபாரத்தை அது பல துறை களில் நடத்திவந்திருக்கிறது.

உலகில் முக்கியமான பல நாடு கள் தொழில் முன்னேற்றம் அடைந்த வரலாறு இது. இனி நம் நாட்டில் தொழில் முன்னேற்றத் துக்கு வழி என்ன, சிறு தொழில் களை வெற்றிகரமாக நடத்துவது எப் படி என்பதைக் கவனிப்போம்.

இந்தியாவில் மிகவும் பெருத்த தொழில் வேளாண்மை. நம் நாட் டில் நூற்றுக்கு எழுபது பேர் பயிர்த் தொழிலைக் கொண்டு வாழ்கிறார்கள். கடந்த நூறு ஆண்டுகளாக நம் நாட்டு மூலப் பொருள்களை நாம் வெளிநாடு களுக்கு அனுப்பிவந்திருக்கிறோம். அதனால் பூமியில் பத்து அங்குல ஆழத்துக்கு வேண்டிய வளத்தை நாம் இழந்துவிட்டோம். இழந்த இந்த வளத்தை உண்டாக்குவதற் குத் தேவையான எருவைப் பூமிக் குப் போட நம்மால் முடியவில்லை. பசுமாடுகளின் சாணத்தையும் நாம் வரட்டியாக்கி எரித்துவிடுகிறோம். இதனால் விளைவு மிகவும் குறைந்து போயிற்று. இயற்கையும் செயற் கையுமான எருக்களைக் கொண்டு



தொழிலுக்கு உதவப் போக்குவரவுச் சாதனம் அவசியம்.

போய் வயல்களில் கொட்டினால் தான் தானிய விளைவு மிகுதியாகும். சர்க்கார் தமது புதிய திட்டத்தில் வருஷந்தோறும் ஐந்து லட்சம் டன் அம்மோனியம் ஸல்பேட் உண் டாக்குவதற்குத்தான் ஏற்பாடு செய் திருக்கிறார்கள். குறைந்த பட்சம் இதைவிடப் பத்து மடங்கு எரு வாவது இன்று நாட்டுக்கு அவசிய மாகத் தேவை. விஞ்ஞான முறை யில் பெருத்த அளவில் எருவை உண்டாக்கினாலொழிய, நமக்கு விமோசனம் ஏற்படாது.

ரெயில்வே எஞ்சின்களும், மோட் டார் லாரிகளும், கப்பல்களும் நமக்கு நிறைய வேண்டும். ஜெர் மனியிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற கிரப் தொழிற்சாலையைப் போலவோ, ஜப்பானிலுள்ள மித் ஸுபிசி-மித்ஸுயீ தொழிற்சாலை யைப் போலவோ பெரிய தொழிற் சாலைகளை நாம் இந்தியாவில் நிறுவ வேண்டும். டாடா, வால்சந்த் போன்றவர்கள் இந்திய சர்க்கா ரோடு பல ஆண்டுகளாகப் போராடி வந்தும், இதுவரையில் இத்தகைய தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடிய வில்லை. அந்நிய அரசாங்கம் இதற் குத் தடையாக இருந்தது. இந்த வியாபாரிகளே ஜப்பானைப்போன்ற நாட்டில் இருந்தார்களானால், மோட்டார்வண்டிகளையும் கப்பல் களையும் சொந்த நாட்டில் உண் டாக்குவதோடு வெளிநாடுகளுக்கும் அனுப்பியிருக்கக் கூடும்.

ரசாயனத்தில் 'ஹெவி கெமிகல்ஸ்' என்று சொல்லப்படும் ஸல்ப்யூரிக் ஆஸிட், ஸோடா கார்பொனேட், காஸ்டிக் ஸோடா முதலிய பொருள்களை ஏராளமாக உண்டாக்குவதற்குப் பெரிய தொழிற்சாலைகள் தேவை. இதற்குப் பெருத்த முதல் மட்டுமல்லாமல், சர்க்கார் உதவியும் பூர்ணமாக வேண்டும். இங்கிலாந்திலுள்ள 'இம்பீரியல் கெமிகல் இண்டஸ்டிரீஸ்' என்ற ஸ்தாபனத்தின் மாதிரியில், சுதந்தர இந்தியாவிலும் ஒரு பெரிய ஸ்தாபனத்தை நிறுவுவது நல்லது.

மின்சாரத்தை உண்டாக்கும் தொழிற்சாலைகள், துணி ஆலைகள், பட்டுத் தொழில் முதலியவற்றைப் பெருத்த அளவில் நடத்த வேண்டும்.

குடிசைத் தொழில்களைப் பொறுத்தவரையில் நாம் உதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடிய நாடு ஜப்பான் ஒன்றுதான்.

எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் வாழும் நாட்டிலே தொழில்கள் வளர முடியாது. ஜப்பானிலும் ஜெர்மனியிலும் 99½ சதவிகிதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருப்பதனால் எந்தச் சீர்திருத்தத்தையும் விரைவில் கொண்டுவர முடிகிறது.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மின்சார சக்தி ஏராளமாகவும் மலிவாகவும் கிடைக்கவேண்டும். ஜப்பானில் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரைக்கும் எங்கும் காலணா அல்லது அரையணா யூனிட் வீதம் மின்சார சக்தி கிடைக்கிறது.

முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலும் தண்ணீர்க் குழாய்களைப்போலவே காஸ் நிரம்பிய குழாய்களை வைத்து, கோல் காஸ் மலிவாகக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். கண்ணாடி வளையல்களின் முனைகளை ஒட்டவைக்கவும், டேபிள் கிளாஸ், அளக்கும் பாத்திரம், திரவமானி, உஷ்ணமானி முதலிய ரசாயனக் கருவிகள் செய்யவும் காஸ் நிறைய வேண்டும். மின்சாரமும் காஸும் நிறையக் கிடைக்கும் நாடுகளில் சமையலறையிலே எப்போதும் வழங்கும் விஞ்ஞானச் சொற்களை, நம் சர்வகலாசாலைகளிலுள்ள ரசாயனப் பரிசோதனைக் கூடங்களில் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரங்கூட நாம் வழங்குவதில்லை.

வியாபாரங்கள் வளர, போக்குவரவுச் சாதனங்கள் யதேஷ்டமாக வேண்டும். ஜப்பானில் ஒஸாகா நகரில் சாக்கடைத் தண்ணீர் முழுவதையும் ஒரு கால்வாயில் கொண்டுவிட்டு, அதில் சிறு படகுகளை ஓட்டுகிறார்கள். நம்மிடம் கங்கை, யமுனை போன்ற பெரிய நதிகள் இருந்தும் அவற்றை நாம் போக்குவரவுக்கு ஏற்ற அளவு பயன்படுத்துவதில்லை. இதே கங்கை ஐரோப்பாவில் இருந்தால், கல்கத்தாவிலிருந்து கான்பூர் வரையில் வியாபாரக் கப்பல்கள் மட்டுமன்றிச் சண்டைக் கப்பல்கள் கூட ஓடும்.

நம் ரெயில்வேயைப்பற்றி ஒன்றும் சொல்லவே வேண்டாம்! சுரங்கத்தில் கரியின் விலை ஒரு டன்னுக்கு நாலு ரூபாய். அங்கிருந்து முந்நூறு மைலிலுள்ள காசிக்கு அதைக் கொண்டுபோகச் செலவு பதினாறு ரூபாய்!

தீப்பெட்டி, டென்ஸில், கடிகாரம், கண்ணாடிச் சாமான்கள் முதலியவற்றை ஆக்கும் தொழில்களை யந்திரங்களைக் கொண்டு மிகவும் மலிவாக வெளிநாடுகளில் குடிசைகளிலே செய்கிறார்கள்.

வியாபார வளர்ச்சிக்கு டெலிபோன்கள் மிகவும் தேவை. விலை மாறுதல்கள், போக்குவரத்து விவ

ரங்கள் முதலியவற்றை அறிய அவை பயன்படுகின்றன. 1937-38-இல் ஜப்பானில் 70 சதவிகிதம் பேர் டெலிபோன் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

குடிசைகளில் வாழ்ந்து கொண்டே சிறு தொழில்களைச் செய்யக் கற்பிக்கும் ஆயிரக்கணக்கான தொழிற் பள்ளிகளை நமது நாட்டில் நிறுவவேண்டும். கட்டாய ஆரம்பக் கல்வியும், தொழிற் கல்வியும், மின்சார சக்தியும், காஸும், போக்குவரவுச் சாதனங்களும் நம் மக்களுக்கு மலிவாகவும் போதுமான அளவுக்கும் கிடைத்துவிட்டால் நம் கிராமங்களிலே வாழும் 70 சதவிகிதம் மக்களுக்குத் தொழில் தந்து ஏராளமான பண்டங்களை விளைவிக்க முடியும். சும்மாப் பொழுது போக்குவதைவிடச் சர்க்காவில் நூல் நூற்பது நல்லதுதான். ஆனால் இந்தக் காலத்தில் தினசரி வாழ்வுக்குத் தேவையான பண்டங்களை நாமே நமது நாட்டில் உண்டாக்கிக் கொள்வது அவசியம். பெருத்த தொழில்களைப்போலவே சின்னஞ்சிறு தொழில்களும் முன்னேற இடம் இருக்கிறது. இந்தத் தொழில்களுக்கு வேண்டிய யந்திரங்களைத் தேசிய சர்க்கார் செய்து கொடுப்பதோடு, எல்லாத் தொழில்களும் அதன் மேற்பார்வையில் நடக்கவேண்டும். அப்பொழுது இங்குள்ள எல்லா மனிதர்களின் முழுச் சக்தியையும் பயன்படுத்திக்கொண்டு இந்த நாடு தொழில்முறையில் மகத்தான வளர்ச்சியைப் பெற முடியும்.

விளாம்பழத்தின் சக்தி

விளாம்பழம் எலும்புக்குப் பலம் தந்து பித்தத்தை நீக்கி உடம்புக்குப் பலம் கொடுக்கும். இதில் பொடாஷ், லைம், இரும்புச் சத்து இந்த மூன்றும் அடங்கியிருக்கின்றன.

ரத்தம் இல்லாதவர்கள், பாண்டுரோகிகள், பலம் குறைந்தவர்கள், பித்த தேகிகள் இவர்கள் எல்லோரும் இதை உண்டால், நல்ல குணத்தைக் காணலாம். கர்ப்பிணிகள் மசக்கை காணும் சமயத்தில் இதை உண்டால், பழம்போல் முற்றிய ஆரோக்கியமான குழந்தைகளை அவர்கள் பெறுவார்கள். பழுத்த விளாம்பழத்தில் இருக்கும் ஒரே ஒரு விதையே மிகுந்த சத்துடையது.

விளாம்பழமும் வெல்லமுமாகக் கலந்து பிசைந்து சாப்பிடும் முறை நம்மவருக்குப் புதியதல்ல.

மிளகாய் வற்றல், பெருங்காயம், உளுத்தம் பருப்பு, இவற்றை வறுத்து, உப்புச் சேர்த்து விளாம்பழத்தை வைத்துத் துவையலாக அரைத்தும் உண்ணலாம்.

நன்ருகப் பழுத்த நான்கு விளாம்பழங்களின் விழுதை எடுத்து, படி வெந்நீரில் அகன்ற வாயுடைய ஈயப் பாத்திரத்தில் கலந்துகொள்ளலாம். அது ஆறினபின் சர்க்கரை கலந்து ஷர்பத்தாகச் செய்துகொண்டு மூன்று மணிக்கு ஒரு முறை குடித்தால், நாள்பட்ட பேதி நின்றுவிடும். இதில் லவங்கப் பட்டையும் சேர்த்துக்கொள்ளலாம்.

விளாங்காய் ஓடுகளை உலர்த்திப் பொடிசெய்து வைத்துக் கொண்டு உள்ளுக்குச் சாப்பிட்டால் எல்லாவித விஷங்களும் நீங்கிவிடும்.

—கிருஷலட்சுமி.

சுத்தமான பழக்கங்களைக் குழந்தைக்கு எப்படிப் பழக்கிவைப்பது? எந்தக் காலத்தில்? தாய் இதை அறியவேண்டும்.

குழந்தையின் பழக்கம்

டோராதி ஸ்டில்லிங்ஸ்

"என் மகள் பத்துமாதக் குழந்தையாக இருக்கும்போதே வெளியே போய் நீர்கழிப்பாள். நான் இதுபற்றிப் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் அவளுக்கு இன்று ஒன்றரை வயது ஆகிவிட்டது. இப்போது அவள் தன் பாவாடையை நனைத்துக் கொண்டுவிடுகிறாள். இதற்கு என்ன செய்வது?" என்று ஒரு தாய் அங்கலாய்த்துக் கொள்கிறாள்.

"என் மகனுக்கு மூன்று வயது ஆகிறது. இன்னும் அவன் ராத்திரியில் படுக்கையை நனைத்துவிடுகிறானே" என்று வருந்துகிறாள் மற்றொரு தாய்.

இயற்கை உபாதைகளை மறைவிடத்தில் போய்க் கழிக்கும் பழக்கத்தைக் குழந்தைக்கு உண்டாக்குவது அவசியந்தான். ஆனால் ஏற்ற பருவம் வந்த பிறகே இதை அதற்கு உண்டாக்க வேண்டும். அந்தப் பருவம் வரும் முன்பே அவசரப்பட்டு வற்புறுத்தி இந்தப் பழக்கத்தைக் குழந்தைக்கு உண்டாக்கினால், வீண் தொல்லைகள்தாம் நேரும்; பயன் ஏற்படாது.

குழந்தைக்கு ஒவ்வொரு பழக்கம் உண்டாவதற்கும் ஒவ்வொரு பருவம் உண்டு. அந்த அந்தப் பருவம் வந்த பிறகு, தாய் சற்று உதவி செய்தால் போதும். ஒரு தொல்லையும் இல்லாமல் அதற்கு அந்த அந்தப் பழக்கம் தானாகவே வந்துவிடும். இப்படியில்லாமல், உரிய பருவம் வருவதற்கு முன்பு எந்தப் பழக்கத்தைக் குழந்தைக்கு ஏற்படுத்த முயன்றாலும், குறிப்பிட்ட பழக்கமும் சரியாக உண்டாகாது; மேற்கொண்டு தீங்கும் விளையும். வற்புறுத்தி ஒரு பழக்கத்தை உண்டாக்க முயல்வதால், குழந்தைக்குச் சிடுசிடுப்பு, வீண் பிடிவாதம், பெற்றோர்மீது வெறுப்பு முதலிய பல மனக் கோளாறுகள் ஏற்பட்டுவிடும். இதனால் பிற்காலத்தில் குழந்தையின் வாழ்க்கையே கெட்டுவிடும்.

இயற்கை உபாதைகளை மறைவிடம் சென்று கழிக்கும் பழக்கத்தைக் குழந்தைக்கு உண்டாக்க என்ன என்ன செய்யவேண்டும்? எப்போது?

சாதாரணமாக, குழந்தைகளுக்கு இரண்டு வயதாகுமுன் இந்தப் பழக்கம் வராது. சில குழந்தைகளுக்கு நாலு வயது வரையிலுங்கூட இது வருவதில்லை.

மற்றப் பெரிய குழந்தைகள் மறைவிடத்துக்குப் போய் இயற்கை உபாதைகளைத் தீர்த்துக் கொள்வதை, ஒரு வயது முதலே குழந்தை கவனிக்கும்படி செய்யவேண்டும். தாய் இப்படிச் செய்துகொண்டே வந்தால், கொஞ்சம் கொஞ்சமாக, 'நாமும் இயற்கை உபாதைகளை மறைவிடத்துக்குச் சென்று கழிக்க வேண்டும்' என்ற நினைப்பு, சிறு குழந்தைக்கு வளர்ந்துகொண்டே வரும். பிறகு குழந்தைக்குப் பேச்சுத் திறமை வரும். அப்போது அது தானும்

காப்பிரைட்: பேரண்ட்ஸ் மகஸின் (ஆங்கிலம்: டிசம்பர் '47), 52, வாண்டர்பில்ட் அவென்யூ, நியூ யார்க்.

மறைவிடத்துக்குப் போய் இயற்கை உபாதைகளைக் கழிக்கவேண்டும் என்று தாயாரிடம் சொல்லி, அங்கே போகத் தாயாரின் உதவியை நாடும். இந்தப் பேச்சுத் திறமை ஏற்படுவதற்கு முன்பே மலஜலங்களைச் சற்று நேரம் அடக்கிக் கொள்ளும் சக்தி குழந்தைக்கு வந்திருக்கும். இந்த நினைப்பு, அடக்கும் சக்தி, தன் தேவையைப் பிறரிடம் சொல்லும் பேச்சுத் திறமை இவை மூன்றும் குழந்தைக்கு எப்போது பூர்ணமாக ஏற்படுகின்றனவோ அப்போது தான் இந்தப் பழக்கத்தைக் குழந்தைக்கு உண்டாக்க ஏற்ற பருவம்.

இப்போது தாய் இந்தப் பழக்கத்தைக் குழந்தைக்குப் பழக்கி வைக்கத் தொடங்கினால், இரண்டொரு வாரத்துக்குள்ளேயே, தானே வெளியே போய்வரும் பழக்கத்தைக் குழந்தை பழகிவிடும். இரவில் படுக்கையை நனைப்பது, பகலில் தூங்கும்போது படுக்கையை நனைப்பது, இந்தச் செயல்களும் இரண்டொரு வாரங்களில் தாமாகவே நின்றுவிடும்.

'என் குழந்தை வெகு சீக்கிரமே ஒழுங்காக வெளியே போகப் பழகிவிட்டான்' என்று பெருமை பேச ஆசைப்பட்டு, பருவமல்லாத பருவத்தில் குழந்தையை வற்புறுத்துவது தான் குழந்தைக்குப் பற்பல மனக் கோளாறுகளையும், மலச்சிக்கல் போன்ற உடற் கோளாறுகளையும் உண்டாக்கி விடுகிறது. இப்படித் தவறு செய்வதால் குழந்தைப் பருவத்தில் ஏற்படும் கோளாறுகள் சில சமயம் அந்தக் குழந்தையின் வாழ்க்கையையே பாதிக்கும் நிரந்தரக் கோளாறுகள் ஆகிவிடுகின்றன. அதுமட்டும் அல்ல; இப்படி வற்புறுத்துவதால், தாயிடம் வெறுப்பு, சிடுசிடுப்பு, பிடிவாதம் ஆகியவை ஏற்படுவதோடு, வேறு சில கோளாறுகளும் குழந்தையிடம் தோன்றிவிடும். குழந்தை திடீரென்று பேச்சில் திக்கத் தொடங்கிவிடும்; சரியாகச் சாப்பிடாது; இதுவரையிலும் இருட்டைக் கண்டு பயப்படாத குழந்தை இப்போது இருட்டைக் கண்டு பயப்படத் தொடங்கிவிடும். நாம் வற்புறுத்திப் பழக்க முயன்ற பழக்கமும் பிடிபடாது. கொஞ்ச நாள் பிடிபட்டது போலத் தோன்றும். ஆனால் குழந்தை மறுபடியும் பாவாடை, துணி, படுக்கை இவற்றை நனைக்க ஆரம்பித்துவிடும். குழந்தைக்கு ஏழு எட்டு வயது ஆனபிறகுகூட இந்தப் பழக்கம் பிடிபடாது.

"இந்தப் பருவம் ஏற்படும் வரையில் காத்திருந்தால், எவ்வளவு துணிகளைத் தோய்க்கவேண்டியிருக்கிறது?" என்கிறார்கள் சில தாய்மார். இன்னும் சிலர், "படுக்கை, பாய் எல்லாம் பாழாய்ப்போகின்றனவே" என்கிறார்கள்.

துணிகளைத் தோய்க்கப் பயந்துகொண்டு, அவசரப் பட்டு வற்புறுத்தினால்மட்டும் பலன் கிடைத்துவிடுகிறதா! இல்லையே! குழந்தையின் மனமும் உடலுமே அல்லவா கெட்டுவிடுகின்றன? இப்படித் தம் குழந்தைகள் கெடுவதைத் தாய்மார்கள் விரும்புவார்களா? பாய் படுக்கை கெடாமல் இருக்க மெழுகு துணியையோ ரப்பர்த் துணியையோ உபயோகித்தால் போகிறது.

ஆரம்பத்தில் வற்புறுத்தியது காரணமாகச் சில குழந்தைகள் எட்டு ஒன்பது வயது வரையிலுங்கூட இந்தப் பழக்கத்தைப் பிடித்துக் கொள்வதில்லை. இப்படிப்பட்ட குழந்தைகளிடம் பெற்றோர் வெகு ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இவற்றைத் தனித் தனியே கவனித்து ஒவ்வொன்றுக்

கும் ஏற்ற முறை எது என்று தெரிந்தே திருத்தவேண்டும். எல்லா வற்றுக்கும் பொதுவான முறை ஒன்றும் இல்லை.

இந்தக் குழந்தைகள் தங்கள் தப்புப் பழக்கத்தைத் தாங்களாகவே திருத்திக் கொள்வதற்கு ஏற்ற முறையில் இவற்றை நடத்தவேண்டும்; மிரட்டக் கூடாது, தண்டிக்கவும் கூடாது. இவற்றிடம் பிடிவாதமும் எதிர்ப்பும் இருக்கத்தான் இருக்கும். அதையெல்லாம் பொறுத்துக் கொள்ளவேண்டும். இவற்றைக்கேலி செய்து பலர் முன்னிலையில் அவமானப்படுத்துவது மிகவும் தவறு. இந்தக் குழந்தைகள் இந்தப் பழக்கத்தைக் கற்றுக்கொள்வதில் சிறிது சிரத்தை காட்டினாலும், அதைப் பாராட்டவேண்டும். யாராவது வைத்தியர்களின் ஆலோசனையைக் கேட்க நேர்ந்தால், அந்த வைத்தியர்களின் முன்னிலையிலும் இந்தக் குழந்தைகளைக் கேவலமாக ஒன்றும் பேசக் கூடாது. தாய்மார், பதற்றமும் ஆத்திரமும் சிடுசிடுப்பும் இல்லாமல் இருப்பது அவசியம்.

குழந்தையிடம் உங்களுக்கு உண்மையான கரிசனம் இருக்கிறது என்று குழந்தை தெரிந்துகொள்ளும் படி நடந்துகொள்ளுங்கள். தானே எல்லாக் கோளாறும் சரியாகிவிடும். குழந்தை இந்தப் பழக்கத்தைப் பிடித்துக்கொண்டால்தான் அன்பு காட்டுவது, இல்லாவிட்டால் சிடுசிடுப்பது என்பது வேண்டாம். அது இந்தப் பழக்கத்தைக் கற்றுக்கொண்டாலும் சரி, கற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, குழந்தையினிடம் அன்புமட்டும் உண்மையாகவும் ஒரே மாதிரியாகவும் இருக்கட்டும். தானே குழந்தை சரியாகிவிடும். கோளாறெல்லாம் பறந்துவிடும்; பழக்கமும் தானே வந்துவிடும்.

எது சரி?

(1) **பெரியவாச்சான் பிள்ளை:** (அ) திருமலை நாயக்கர் காலத்திலிருந்த அதிகாரி (ஆ) 11-ஆம் நூற்றாண்டில் இருந்த புலவர் (இ) திவ்யப்பிரபந்தத்துக்கு வியாக்கியானம் எழுதியவர் (ஈ) சத்தியாக்கிரகவீரர்.

(2) **விரிச்சி:** (அ) ஒருவகைப் பூ (ஆ) மலையாளத்தில் உள்ள ஓர் ஊர் (இ) ஒரு தமிழ் நூல் (ஈ) ஒருவகை நிமித்தம்.

(3) **குன்றுதோறாடல்:** (அ) முருகக்கடவுள் படைவீடுகளில் ஒன்று (ஆ) ஒருவகைக் கூத்து (இ) குன்றத்தைச் சார்ந்த இடம் (ஈ) மலைத்தொடர்.

(4) **சச்சபுடம்:** (அ) அப்பளத்தில் ஒரு வகை (ஆ) ஒரு வகைத் தாளம் (இ) பொன்னைத் தீயில் பல முறை உருக்குதல் (ஈ) ஒரு வகை யோகம்.

(5) **துடமுக்கு:** (அ) மனிதர்களின் மூக்குருவங்களில் ஒன்று (ஆ) மேல் கரையில் உள்ள முனை (இ) கும்பகோணம் (ஈ) குடத்தின் வாய்.

(6) **கஞ்சங்குல்லை:** (அ) கஞ்சா (ஆ) கஞ்சம் ஜில்லாவில் உள்ள ஒரு பரந்தவெளி (இ) துளசியில் ஒரு வகை (ஈ) லோபியின் வீடு.

(7) **கிளிச் சிறை:** (அ) கிளிக்கூடு (ஆ) விந்தியமலைப் பகுதி (இ) ஒரு வகைக் கிளிஞ்சில் (ஈ) ஒரு வகைப் பொன்.

இதுதான் சரி

1. இ. 2. ஈ. 3. அ. 4. ஆ.
5. இ. 6. அ. 7. ஈ.

மின்சார மீன்

கிரிஸ்டாபர் டபிள்யூ கோட்ஸ்

நியூ யார்க் நகரின் பழைய மீன் காட்சிச் சாலைக்கு ஒரு நாள் போனேன். அங்கே நாலடி நீள முள்ள ஈல் என்ற விலாங்கு மீன் ஒரு சிறு குளத்தில் மந்தமாக அங்கும் இங்கும் நீந்திக்கொண்டிருந்தது. அதன் கூட்டுக்கு வெளியே தொங்கிய அட்டையைப் பார்த்தேன்: "இது மின்சார விலாங்கு மீன். இது தன்னிடமிருந்து உண்டாகும் மின்சாரத்தைப் பாய்ச்சி ஒரு பெரிய குதிரையைக் கூட அடித்துக் கீழே தள்ளிவிடும்" என்று அந்த அட்டையில் எழுதியிருந்தது. "என்னடா இது! நாலடி நீளமுள்ள இந்த மீனாவது, ஒரு குதிரையை அடித்துத் தள்ளவாவது! அதுவும் மின்சார சக்தியால் அடித்துத் தள்ளுமாமே! ஒரு மீன் எப்படி மின்சாரத்தைப் படைக்கும்? அப்படியே இந்த விலாங்கு மீன் மின்சாரத்தைப் படைத்தாலும் அந்த மின்சார சக்தி தண்ணீரில் பரவாதா? இந்த மீனையே அந்தச் சக்தி கொன்றுவிடாதா?" இப்படியெல்லாம் பல சந்தேகங்கள் என் மனத்தில் தோன்றின. இது 1929-ஆம் வருஷத்தில் நடந்த சங்கதி.

இன்று விஞ்ஞானத்தினால் பல அபூர்வ மின்சார அதிசயங்களை மனிதன் செய்கிறான். ஆனால், இயற்கையிலே பல கோடி வருஷங்களாக மின்சார விந்தைகளைப் புரிந்துவரும் ஒரு மீன் இருக்கிறது. அதை ஆராய்ந்திருக்கிறார் இந்தக் கட்டுரையாளர். இவர் நியூ யார்க் மீன் காட்சிச்சாலையின் அதிபதியாக இன்று பதவி வகிக்கிறார்.

இந்தச் சந்தேகங்களை நான் தெளிந்துகொள்ள, சில வருஷங்களுக்கு முன்னால் எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. இப்போது நானே அந்த மீன் காட்சிச்சாலை உத்தியோகஸ்தர்களில் ஒருவனாகப் பதவி பெற்றேன். உடனே ஒரு சுருள் மின்சாரக் கம்பி, சில மின்சார பல்புகள், ஒரு வலை முதலியவற்றைக் கட்டிச் சுருட்டிக்கொண்டு மின்சார விலாங்கு மீனின் மின்சார ஆற்றலை ஆராய்ச்சி புரியத் தொடங்கினேன். ஆரம்பத்திலேயே, அதாவது மீனை வலைபோட்டுப் பிடித்துச் சுருட்ட முயன்றபோதே

மூலம்: ஸபின்ஸ் டைஜஸ்ட் (ஆங்கிலம்: ஜனவரி '48), சிககாகோ 11, ஐக்கிய அமெரிக்கா.

எனக்கு ஒரு நல்ல மின்சார அடி கிடைத்தது. தடாரென்று கீழே விழுவதற்கு இருந்தேன். "உண்மை தான்! இந்தச் சிறிய மீனிடம் உண்டாகும் மின்சார சக்தி நிச்சயமாக ஒரு பெரிய குதிரையைக்கூட அடித்துத் தள்ளக்கூடியதுதான் இந்த மீன்கள் உலகில் பல கோடி வருஷங்களாகவே இருந்துகொண்டு எவ்வளவோ மின்சார விந்தைகளைச் செய்து வருகின்றன! மனிதன் மின்சாரத்தைக் கனவுகூடக் காணாத காலம் முதலே இருந்துவரும் உயிருள்ள டைனமோக்கள் இவை!

இந்த அநுபவத்துக்குப் பிறகு, சற்று ஜாக்கிரதையாகவே இந்த மின்சார மீனோடு நான் பழகத் தொடங்கினேன். மின்சாரக் கம்பி ஒன்றின் ஒரு முனையில் சுருக்குப் போட்டு மீனின் தலைப்பாகத்தில் சுருக்கை வீசி லாகவமாக இழுத்துப் பிடித்துக் கொண்டேன். ஜாக்கிரதையாகவே இருந்தேன். ஆனால் கம்பியில் மின்சாரம் பாயாமல் மூடியிருந்த பகுதியையே பிடித்துக் கொண்டேன். இது போலவே இன்னொரு கம்பியில் சுருக்குப் போட்டு மின்சார மீனின் வாலில் மாட்டி அந்தக் கம்பியையும் இழுத்துப் பிடித்துக்கொண்டேன். இப்போது இந்த இரண்டு மின்சாரக் கம்பிகளுக்கும் உள்ளே உள்ள தாமிரக் கம்பிகளையும் ஒரு மின்சாரப் பல்பில் இழுத்துப் பொருத்தினால் பல்பு எரியவேண்டும் அல்லவா? அப்படியே செய்து பார்த்தேன். ஏமாற்றந்தான்! பல்பு எரியவில்லை. போகட்டும். பல்புக்குள்ளே லேசான சூடாவது ஏறியதா? அதுவும் இல்லை!

பிறகு ஜாக்கிரதையாக இரண்டு கம்பிகளையும் என் விரலிலே இணைத்து, 'ஷாக்' அடிக்கிறதா என்று பார்த்தேன். ஒரு 'ஷாக்'கையும் காணோம். ஒரு குச்சியால் அந்த விலாங்கு மீனை லேசாகக் குத்திவிட்டேன். அந்தக் கணத்தில் லேசான ஒரு மின்சார ஷாக் என் விரல்களில் அடித்தது! ஆனால், பல்பு மட்டும் எரியவில்லை. 'இது என்ன வகையான மின்சாரம்' என்றே எனக்குப் புரியவில்லை!

எனக்கு ஊக்கம் குறைந்துவிட்டது. விலாங்கு மீனிடம் தோன்றுவது மின்சாரந்தான் என்று நிரூபித்தாலொழிய, பெரிய விஞ்ஞானி எவரும் எனக்கு இந்த ஆராய்ச்சியில் துணையாக வரமாட்டார். வால்டா மீட்டர், கால்வனோ மீட்டர் போன்ற மின்சார ஓட்ட அளவுக் கருவிகளை உபயோகித்துப் பார்த்தும் பயன் இல்லை.

மீண்டும் சனிக்கிழமை உச்சி வேளையில் இந்தச் சோதனைக்காக ஒரு சிறு நியான் விளக்கை உபயோகித்தேன். சோதனைக் களம் எங்கும் ஒரே ஜலம். எங்கே பார்த்தாலும் மின்சாரக் கம்பிகள். மின்சார விலாங்கு முரட்டுத்தனம் செய்தது.

திடீரென்று என்னைப் பலமான மின்சாரம் தாக்கியது. நான் பல அடி உயரம் மேலே எகிறி விழுந்தேன். என் நியான் விளக்கு ஆரஞ்சு வர்ண ஒளியுடன் பளபளத்தது. உண்மையில் விளக்குப் பளபளத்ததா, அல்லது இது எனக்கு ஏற்பட்ட தாக்குதலால் என் மனத்தில் எழுந்த பிரமையா என்று புரியவில்லை. மறுபடியும் கைக்கு ரப்பர் உறை போட்டுக்கொண்டு மீனைக் கிண்டிவிட்டேன். விளக்கு மறுபடியும் பளபளத்தது!

சாதாரண மின்சார பல்பு எரிவதற்கு முன் சிறிது சூடு பிடிக்க வேண்டும். பொதுவாகக் கடையில்

விற்கும் பல்புகளில் சூடு பிடிக்க ஒரு ஸெகண்டில் ஐம்பதில் ஒரு பங்கு நேரம் வேண்டும். மின்சார மீனிடமிருந்து வரும் மின்சாரம் வெகு சீக்கிரம் தோன்றி மறைந்து விடுவதால், இந்தச் சூடு பிடிக்கும் நேரம் சாதாரண பல்புக்குக் கிடைப் பதில்லை. சாதாரண பல்பு எரியாத காரணம் இதுவே என்பதை இப் போதுதான் உணர்ந்தேன். நியான் விளக்குக்கு இந்தச் சூடு வேண்டாம். ஒரு நியான் விளக்கைப் பளபளக்கச் செய்ய எண்பது வோல்ட் மின்சார மாவது குறைந்த பட்சம் வேண்டும்.

மின்சார மீனில் வேறொரு வகை இருக்கிறது. அது கடையில் விற் கும் விலாங்கு மீனைப்போல அழ காக இருப்பதில்லை. கடல் விலாங் கைவிடக் கொஞ்சம் தடியாக இருக் கும். சுமார் நாலடி நீளமும் ஓரடி சுற்றளவும் இருக்கும். பழுப்பு நிற மாக இருக்கும். தொண்டையும் மோவாய்க்கட்டையும் மட்டும் சிவந் திருக்கும். சில சமயம் இந்த உறுப்பு கள் மஞ்சள் கலந்த பச்சை நிறமாக இருப்பதுமுண்டு. தோல் சுருங்கி இருக்கும். காதுகளைப் போல் இரண்டு செதில்கள் மீனின் தலைமீது நீட்டிக்கொண் டிருக்கும். அந்தச் செதில்களின் அடிப்பாகத்தில் தலை நீங்கிய மீதிப்பகுதியில் இன்னும் ஒரு செதிள் இருக்கும். அந்தச் செதிளின் உதவியால் இந்த விலாங்கு எப்படி வேண்டுமானாலும் தண்ணீரில் நீந்த முடியும்.

இந்த மின்சார விலாங்குகளின் பிறப்பு வளர்ப்பைப்பற்றி இது வரைக்கும் ஒன்றுமே தெரியவில்லை. இவை முட்டையிடுகின்றனவா, குட்டி போடுகின்றனவா என்பதே நிச்சயமாகத் தெரியவில்லை. எழெட்டு அங்குலம் வளர்ந்த மின் சார விலாங்குகள் தாயை விட்டுத் தனியாக வசிக்கத் தொடங்கு கின்றன. இந்தக் குட்டி விலாங்கு களால் அதிக மின்சாரத்தைப் படைக்க முடியும். பெரிய விலாங்கு களிடமிருந்து ஒரு ஸெண்டிமீட்டர் நீளத்துக்கு எட்டு அல்லது பத்து வோல்ட் மின்சாரந்தான் உண்டா கும். ஆனல் குட்டி விலாங்குகளோ ஒரு ஸெண்டிமீட்டர் நீளத்துக்குச் சுமார் முப்பது வோல்ட் மின்சாரம் வரைக்கும் படைத்துவிடுகின்றன. ஒரு குட்டி விலாங்கு இவ்வளவு மின்சாரமாவது படைக்கும் ஆற் றல் இருந்தால்தான் அது தனியே வாழ முடியும்.

இந்த ஆராய்ச்சியில் எனக்கு உதவி செய்ய எவ்வளவோ விஞ்ஞா னிகளைக் கேட்டுப் பார்த்தேன். பல னில்லை. கடைசியில் நியூ யார்க் சர்வ கலாசாலையின் பௌதிகப் பேராசிரி யர் டாக்டர் ரிச்சர்ட் டி. காக்ஸ் என்பவர் எனக்கு உதவி செய்ய முன்வந்தார்.

புதிதாகக் கண்டுபிடித்த ‘கதோட் ரே ஆஸிலோகிராப்’ என்ற மின்சார ஓட்ட அளவுக் கருவி ஒன்றை அவர் கொண்டு வந்தார். இதன் மூலமாக இந்த விலாங்கு மீனின் மின்சார சக்தியை அளக்க முடிந்தது. 500 வோல்ட் அள வுள்ள 40 வாட் மின்சார சக்தியை மின்சார விலாங்கு தண்ணீரில் வெளி விடுகிறது என்று அவரும் நானும் கண்டுபிடித்தோம். இந்த மின்சார சக்தி ஒரு பெரிய குதிரையை அடித் துத் தள்ளப் போதுமானது! இந்த மீனின் மின்சார வீச்சு ஒரு செகண் டில் 500 - இல் ஒரு பகுதி நேரந் தான் நிற்கும். ஆனல், ஒரு செகண் டுக்கு 400 முறை இது இப்படி மின்சாரத்தை வீச முடியும்.

இந்த மீனின் உடம்பில் முக்கிய மான உறுப்புகளெல்லாம் தலையி

லேயே அடங்கிவிடுகின்றன. உடம்பின் நீளத்தில் ஐந்தில் ஒரு பகுதியே தலை. மற்ற நான்கு பகுதியும் ஒருவகை மின்சாரச் சதையால் அமைந்திருக்கிறது. அதில் தேன்கூடு போலப் பல மின்சார 'ஸெல்'கள் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு ஸெல்லும் பத்தில் ஒரு வோல்ட் மின்சார சக்தியைப் படைக்கக் கூடியது. இவ்வளவு ஸெல்களிலும் உண்டாகும் சக்தியை ஒன்றாக இணைத்து, எப்படி இந்த மீன் பலமான மின்சார சக்தியை வீசுகிறது என்பது மட்டும் இன்னமும் புரியாத ரகசியமாகவே இருக்கிறது. வெளியிலிருந்து வரும் மின்சார சக்தியையும் இந்த விலாங்குகள் உணர்ந்து விடுகின்றன. பதினன்கு மின்சார விலாங்குகள் இருந்த ஒரு சிறு குளத்தில், ஒரு விலாங்கு இரை பிடிப்பதற்காகத் தன் மின்சாரத்தை வீசியது. உடனே மற்றப் பதின்மூன்று மீன்களும் அந்த மின்சார வீச்சை உணர்ந்து, முதல் மீன் இருந்த இடத்துக்கே ஓடிவிட்டன. எங்கேயிருந்து மின்சார ஓட்டம் கிளம்புகிறது என்பதையும் இவை நிச்சயமாக அறிந்து விடுகின்றன.

மின்சார விலாங்குகள் அங்குமிங்கும் நகரும்போது, சக்தி குறைந்த சுமார் 50 வோல்ட் மின்சாரத்தை ஸெகண்டுக்கு ஐம்பது வீச்சு வீதம் வீசிக் கொண்டே போகின்றன. எதிரிகளைத் தடுப்பதற்காகவே இவை இப்படிச் செய்கின்றனவோ என்று முதலில் எண்ணினேம். ஆனல், இந்த மின்சார வீச்சுகளுக்கு வேருேர் உபயோகமும் இருக்கிறதென்பதைப் பின்னல் அறிந்தோம்.

இந்த விலாங்குகளுக்குள்ள மின்சார சக்தியால் இவற்றின் கண்களில் ஒரு தோல் படலம் படர்ந்து இவை குருடாகி விடுகின்றன. தங்களுடைய மின்சார வீச்சினுல் தான் இந்த விலாங்கு மீன்கள் திசைகளையும் ஆகாரத்தையும் அறிந்து கொள்ளுகின்றன. இவற்றின் உடம்பிலிருந்து வீசும் மின்சாரம் சுற்றுப் பொருள்களில் சென்று தாக்கிப் பிரதிபலிப்பதைக் கொண்டே இவை அந்தப் பொருள்கள் இருக்கும் திசை, உருவம் ஆகியவற்றை நிச்சயமாக அறிந்துகொள்ளுகின்றன. இந்த விலாங்குகளின் தலையில் சில சிறு குழிகள் இருக்கின்றன. இவற்றுக்கும் மின்சார வீச்சுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்க வேண்டுமென்று நானும் காக்ஸூம் நினைத்தோம். மின்சாரத்தை வெளிவிடாமல் தடுக்கும் ஒருவித அரக்கை அந்தக் குழிகளில் பூசி மூடிவிட்டோம். உடனே இந்த விலாங்குகள் இரையைக் கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறின. அப்போது ஆகாரத்தை இவற்றின் வாயில் வைத்தால்தான் இவற்ருல் தின்ன முடிந்தது. இந்த அரக்குப் பூச்சை நீக்கியவுடன் சுற்றுப் புறத்திலுள்ள ஆகாரத்தை விலாங்குகள் சுலபமாகக் கண்டுபிடித்துக் கொண்டன. விலாங்குகளின் இந்த 'ராடார்' ஞான திருஷ்டி ஓர் ஆச்சரியமான அமைப்பாகும்.

இந்தச் சிறு மின்சார வீச்சு விலாங்குகளின் வால் பகுதியிலிருந்து கிளம்பிப் பரவுகிறது. ஏதாவது ஒரு திட வஸ்துவை அந்த மின்சாரம் தாக்கினுல் அது பிரதிபலித்துத் திரும்பி வருகிறது. அப்படிப் பிரதிபலித்துத் திரும்பி வரும் மின்சாரம் விலாங்குகளின் தலையிலிருக்கும் குழிகளைத் தாக்குகிறது. உடனே விலாங்குகள் தங்கள் தலையை அந்தப் பொருள்

இருக்கும் பக்கம் திருப்பிக்கொண்டு மறுபடியும் மின்சாரத்தை வீசுகின்றன. இந்த முறை பொருளைத் தாக்கித் திரும்பும் மின்சாரம் ஒரே சமயத்தில் விலாங்குகளின் இடது புறமும் வலது புறமும் வந்து சேருகின்றன. இந்த அடையாளத்தைக் கொண்டு விலாங்குகள் பொருளை நோக்கி நேரே பாய்கின்றன.

மின்சார வேகமும் ஒளி வேகமும் ஒன்றே: ஸெகண்டுக்கு 1,86,000 மைல். என்றாலும் தங்களுடைய வேகம், மின்சாரம் போய்த் திரும்ப வேண்டிய வேகம், பொருள் நகரும் வேகம் இவற்றை எல்லாம் கணக்கெடுத்துக் கண்ட எஞ்சினீயரைப் போல் பொருள் இருக்குமிடத்தை மின்சார விலாங்குகள் அறிந்து கொள்வது பெரிய ஆச்சரியமாக இருக்கிறது.

எவ்வளவு பலமாய் இந்த விலாங்குகள் மின்சாரத்தை வீசினாலும், இருபது நிமிஷ நேரம் தொடர்ந்து வீச முடியும். அப்படி வீசிய பிறகு, ஐந்து நிமிஷ ஓய்வு இருந்தால் போதும்; பழையபடி மின்சாரம் வீசக்கூடிய சக்தி இவற்றுக்கு மீண்டும் வந்துவிடுகிறது.

மின்சார பாட்டரி செய்யும் ஒரு பெரிய கம்பெனி முதலாளி, மின்சார ஓட்டம்பற்றிய சில நுணுக்கங்களைக் கண்டுபிடிப்பதற்காக, விஞ்ஞானிகளைக் கொண்டு இந்த விலாங்குகளை ஆராய்ந்து வருகிறார். "இந்த விலாங்கு மீன்களைப்போல் திறமையாக வேலை செய்யும் பாட்டரிகளை நாம் என்றாவது சிருஷ்டிக்க முடியுமா?" என்று அந்த விஞ்ஞானிகளில் ஒருவர் என்னிடம் ஒரு நாள் ஏக்கத்தோடு கேட்டார்.



வெளியிலே ஆயிரம் பேரை ஆட்டிவைக்கும் வீரர்; வீட்டிலே?

—கொறவஞ்சி

கூடு மாறிய சாமியார்

போதாயன கவி

பாம்பு கடித்து மாண்ட ஒரு பெண்ணின் கூட்டுக்குள்ளே ஒரு சாமியார் புகுந்துவிட்டார். இதனால் சில தமாஷ்கள் நடக்கின்றன. இப்படி ஒரு கற்பனை செய்திருக்கிறார் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த போதாயன கவி. சம்ஸ்கிருதத்தில் அவர் இயற்றியுள்ள 'பகவதஜ்ஜுகீயம்' என்ற ஹாஸ்ய நாடகத்தில் வரும் ஒரு காட்சி இது.

(ஒரு பௌத்த சந்நியாசி ஒரு மூடச் சிஷ்யனைத் திருத்த மிகவும் பாடுபடுகிறார். நடுவழியில் இருவரும் ஒரு தோட்டத்தில் நுழைகிறார்கள். அங்கே வசந்தசேனை என்னும் தாசி தன் தோழியோடு வந்து பாடிக்கொண்டிருக்கிறாள். யமதூதன் பாம்பாக வந்து அவளைக் கடித்து அவள் உயிரை வாங்குகிறான். வசந்தசேனையைப் பார்த்தது முதல் சிஷ்யனின் மனம் அவள் மீது சென்றுவிட்டது. அவள் இறந்தவுடன் அவளுக்கு அருகில் சென்று வருத்தப்படுகிறான்.)

சந்நியாசி: (சிஷ்யனை நெருங்கி) மகனே, வா; வேதாத்தியயனம் செய்.

சிஷ்யன்: போதும் போதும் வேதாத்தியயனம். இந்த அநாதைப் பெண்ணுக்குச் சிகிச்சை செய்யும்.

சந்: உனக்கு வேதம் பிடிக்காவிட்டால், யோகம் கற்றுக்கொடுக்கிறேன்.

சிஷ்: உமது யோகமும் நீரும் பாழாய்ப் போக!

சந்: (தமக்குள்) ஐயோ பாவம்! எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யவேண்டாம் என்பது இவனுக்குத் தெரியவில்லை. சந்நியாசியாகிய நான் யோகசக்தியைக் காட்டுவது பொருத்தம் ஆகாததுதான். என்றாலும் சிஷ்யனை அநுக்கிரகிப்பதற்காக அதைக் காட்டுவது தவறல்ல. ஆகையால், யோக சக்தியால் இந்தத் தாசியின் உடலில் நான் புகுந்துகொண்டு, இவனுக்கு யோகத்தில் நம்பிக்கை உண்டாக்குகிறேன். (தம் சரீரத்தை விட்டுத் தாசியின் சரீரத்தில் சந்நியாசி புகுந்துகொள்கிறார்.)

வசந்தசேனை: (எழுந்து சிஷ்யனைப் பார்த்து) சாண்டில்யா, சாண்டில்யா!

சிஷ்: (சந்தோஷத்துடன்) அடேடே! இவளுக்கு உயிர் வந்துவிட்டதே. பெண்ணே, நான் இதோ இருக்கிறேன்.

வச: கையை அலம்பாமல் என்னைத் தொடாதே.

சிஷ்: அப்பாடா! இவள் மிகவும் சுத்தம் பாராட்டுகிறாளே!

வச: மகனே, வா இப்படி. உனக்கு வேதம் ஓதுகிறேன்.

சிஷ்: தாசியிடம் வந்தாலும் வேதந்தானா? இதைவிட நான் குருவினிடமே போகிறேன். (சந்நியாசி இருந்த இடத்துக்குச் சென்று, அவரது உடல் கீழே கிடப்பதைக் கண்டு) ஹா! இவர் இறந்துவிட்டாரே! இதென்ன? பல விஷயங்களையும் அறிந்த மகான்கள்கூட இப்படி இறந்து போகிறார்களே!

(வசந்தசேனையின் தாயும் மற்றொரு சேடியும் வருகிறார்கள்.)

சேடி: (வசந்தசேனை உயிர் பெற்றிருப்பதைப் பார்த்து) அம்மா, அழாதீர்கள். சின்னம்மா சொஸ்தமாயிருக்கிறார்கள்.

தாய்: சொஸ்தமாயிருக்கிறாளா? (கிட்டச் சென்று தடவிப் பார்க்கிறாள்.)

வச: ஏ கிழவி, என்னைத் தொடாதே.

தாய்: ஐயோ! இதென்ன? விஷம் தலைக்கேறிவிட்டதோ? சேடி, சீக்கிரம் போ. வைத்தியனை அழைத்து வா.

(வசந்தசேனையின் காதலன் ராமிளகன் தோன்றி, வசந்தசேனையின் சேலை நுனியைப் பிடிக்கிறான்.)

வச: அடே, மோக வெறியனே, என் சேலையை விடு.

ராமி: (தாசியின் தாயைப் பார்த்து) அம்மா, இதென்ன?

தாய்: பாம்பு கடித்த மயக்கத்தால் அவள் இப்படிச் சம்பந்தமில்லாமல் உளறுகிறாள்.

(யமதூதன் வருகிறான்)

யமதூதன்: நான் கொல்லவேண்டியது இந்த வசந்தசேனையை அல்ல. மற்றொரு வசந்தசேனை இருக்கிறாள். அவளைத்தான் கொல்லவேண்டுமென்று யமன் எனக்கு உத்தரவிட்டிருக்கிறார். ஆகவே தாசியின் உடலை உறவினர் எரிப்பதற்குள் இந்த உயிரை அதில் நுழைத்துவிடுகிறேன். (வந்து பார்க்கிறான்) அடேடே! இவள் எழுந்து விட்டாளே! இவளுடைய உயிர் என் கையில் அல்லவோ இருக்கிறது! எப்படி எழுந்தாள்? (சுற்றிலும் பார்க்கிறான்) பேஷ்! விஷயம் விளங்கிவிட்டது. இந்த யோகி விளையாடுகிறார். விளையாடட்டும். அவர் உடலில் நான் இந்த வசந்தசேனையின் உயிரை வைத்துவிட்டுப் போகிறேன். சற்று நேரம் கழித்து வந்து நிலைமையைச் சரி செய்துவிடுகிறேன். (அப்படியே செய்துவிட்டுப் போகிறான்.)

சந்: (எழுந்திருக்கிறார்)

சிஷ்: பலே! குரு பிழைத்துவிட்டாரே. கஷ்டப்பட வேண்டியவர் ஏன் சாகிறார்? சாகமாட்டார்.

சந்: ராமிளகா, என்னை வந்து கட்டிக்கொள்ளேன்.

சிஷ்: (கோபமாக) இதோ இந்த மரத்தைக் கட்டிக்கொள்ளும்.

சந்: ராமிளகா, கள் குடிப்போம் வா.

சிஷ்: விஷத்தைக் குடியும்.

(விஷவைத்தியன் வருகிறான்.)

வைத்தியன்: (கிட்ட வந்து) எட்டு மாத்திரைகளும், மற்ற மருந்துகளும் கொண்டு வந்திருக்கிறேன்.

வச: முட்டாள் வைத்தியனே, வீண் ஆடம்பரம் செய்யாதே. பிராணிகளுக்கு யமன் ஒருவன் உண்டு என்பதுகூட உனக்குத் தெரியாது. எந்தப் பாம்பு கடித்து இறந்தாள்? எங்கே, சொல்லு பார்ப்போம்!

(வைத்தியன் விழிக்கிறான்.)

சந்: கடித்த பாம்பைக் கண்டுபிடிக்கும் சாஸ்திரமாவது உனக்குத் தெரியுமா?

வைத்: தெரியும்; சொல்கிறேன் கேள்:—வாதிகா: பைத்திக்காச் சைவ ச்லே ச்லே- ஐயோ புஸ்தகம்! புஸ்தகத்தைக் காணோமே!

சிஷ்: நல்ல வைத்தியன். படித்ததெல்லாவற்றையும் ஒரே நிமிஷத்தில் மறந்துவிட்டான்.

வைத்: அம்மா, நினைவு வந்துவிட்டது. சொல்கிறேன் கேள்: வாதிகா: பைத்திகாச்சைவ ச்லேஷ்மிகாச்ச மஹாவிஷா: த்ரீணி சர்ப்பா பவந்த்யேதே சதுர்த்தோ நோபபத்யதே. ('வாதம் பித்தம் கபம் இவை சம்பந்தமான கொடிய விஷப் பாம்புகள் மூன்று வகை; நான்காவது வகை இல்லை' என்று பொருள்.)

வச: த்ரீணி சர்ப்பா: என்பது தவறு. த்ரய: சர்ப்பா: என்று சொல்ல வேண்டும். த்ரீணி என்பது நபும்சகலிங்கம்.

வைத்: ஒருவேளை இலக்கண சர்ப்பம் கடித்திருக்கலாம்.

வச: விஷ வேகங்கள் எத்தனை?

வைத்: எனக்குத் தெரியாது; உமக்கு நமஸ்காரம். போய் வருகிறேன்.

(யமதூதன் வருகிறான்.)

யம: (வசந்தசேனையிடம் சென்று, அவள் காதிலே) ஸ்வாமி, இந்தச் சரீரத்தை விட்டுத் தங்கள் சரீரத்துக்குப் போய்விடுங்கள்.

வச: அப்படியே செய்கிறேன்.

(கீழே விழுகிறாள்.)

(யமதூதன் அந்தச் சரீரத்தில் வசந்தசேனையின் உயிரை வைத்து விட்டுப் போகிறான்.)

(வசந்தசேனை உயிர் பெற்றுத் தாய், தோழி, காதலன் இவர்களோடு போகிறாள். சிஷ்யனும் சந்நியாசியும் மறுபுறமாய்ப் போகிறார்கள்.)

மூன்றாவது தலைமுறையா!

ஈரான் ஒன்றுதான் உலகத்திலேயே ஷியா முஸ்லிம் ராஜ்யம். அதற்கு இந்தியாவின் முதல் ஸ்தானிகராகச் சென்றிருக்கும் ஸையத் அலி ஜஹீரும் ஒரு ஷியா முஸ்லிம்.

இவருடைய தந்தை ஸர் வஜீர் ஹாஸனுக்கு எழுபது வயதாயிருக்கையில், அலாஹாபாதில் ஒரு நாள் ஒரு நாட்டிய மண்டபத்துக்குச் சென்று நாட்டியமாடினார். அடுத்த நாள் ஸையத் அலி ஜஹீர் அதே இடத்துக்குப் போய் நாட்டியமாடினார். மூன்றாவது நாள் ஜஹீரின் மகன் அதே இடத்துக்குப் போய் நாட்டியமாடினார்.

அங்கே வாடிக்கையாக வரும் ஒரு குறும்புக்காரர், "ஓஹோ! இன்றைக்கு மூன்றாவது தலைமுறை ஆடும் நாளா!" என்று தமாஷ் செய்தார்.

—'பி' (ஓரியெண்ட்)

கூடப் படித்தவர்

தேவகோட்டையில் வன்றொண்டச் செட்டியார் என்ற புலவர் ஒருவர் இருந்தார். அவர் சாதுரியமாகப் பேசுவதில் வல்லவர். அவர் தம்முடன் படித்த நமசிவாய தேசிகர் என்ற ஒருவரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார். தேசிகர் திருவாவடுதுறை மடத்தில் சின்னப் பட்டம் வகித்தவர். இருவரும் ஒன்றாகப் படித்ததைப்பற்றிப் பேச்சு வந்தது. செட்டியார், "நான் கூடப் படித்தாலும் குறையப் படித்தவன் சாமி" என்றார்.

மகாநாடு என்றாலே வெகு உத்சாகந்தான். ஆனால், அதை நடத்தும் காரியதரிசியைக் கேட்டால் தெரியும் அந்தத் தொல்லை.

மகாநாட்டுத் தலைவலி

★

எங்கெங்கும் சில சமயம் மகாநாடுகள் கூடுகின்றன. அப்போது எந்த வண்டியில் தொங்கினாலும், எந்த ஹோட்டலில் சாப்பிடப் போனாலும், எந்தப் பந்தல் அருகில் நெருங்கினாலும் மகாநாட்டைப் பற்றிய பேச்சாகவே இருக்கும். எங்கெங்கும் விருந்து, சங்கீதம் முதலியவைபற்றி வாதம் நடக்கும். எல்லோர் காதுகளிலும் பிரசங்கங்களின் ஒலி அலைத்துக்கொண்டிருக்கும். யார் வாயைத் திறந்தாலும் பிரசங்கங்களைப்பற்றி எதிர்ப்பு அல்லது ஆதரவு கிளம்பும். எந்தப் பத்திரிகையைப் பிரித்தாலும், இவை பற்றிய செய்திகளும் விவரங்களும் திருத்தங்களும் மிளிரும்.

மகாநாடு நடத்தச் சேரும் பணம், அதைச் சேர்க்கச் சிலர் படும் பாடு, பிறகு ஏற்படும் மனஸ்தாபம், அதன் மேல் கிளம்பும் அபிப்பிராய பேதம், சண்டை - இவற்றை எல்லாம் நினைத்தால்... இந்த மகாநாடு என்ற சங்கதியைக் கிளப்பிவிட்டானே ஒரு மகாநுபாவன், அவனைக் கொளுத்துகிற வெயிலில் நாள் முழுவதும் நிறுத்திவைக்க வேண்டும் என்று தான் தோன்றும்.

மகாநாட்டைக் கூட்டுவதற்கு முன்பு, ஒரு வரவேற்புக் கமிட்டி அமைப்பது மெத்த அவசியம். அதில் அங்கத்தினராய் அமர்ந்து கொள்ளப் பெரியோர்களை எவ்வளவு தான் மன்றாடினாலும், போதிய அளவு பெரியோர்கள் அதற்கு இசையமாட்டார்கள். "உங்களை நம்பித்தான் இந்த மகாநாட்டைப் போன வருஷமே இந்த ஊருக்கு அழைத்துவிட்டோம். இந்த வருஷம் இதை எப்படியாவது நடத்திவிட்டால், இனி நாங்கள் இந்த ஜோலிக்குப் போகவில்லை" என்று உறுதி கூறினால், சில பெரிய மனிதர்கள், "இந்தப் பயல்களுக்குத் தலையில் என்னதான் இருக்கோ! நாம் தப்பித்துக்கொள்ள வழியில்லை" என்று நொந்துகொண்டே, வரவேற்புக் கமிட்டியில் அமர இசைவார்கள்.

பணக்காரரிடமிருந்து நல்ல தொகை வசூலாக வேண்டுமானால், அவர்களுக்கு ஏதாவது வரும்படி வரச் செய்யும் மந்திரிகளையோ தந்திரிகளையோ தலைவராகப் பொறுக்கி எடுக்கவேண்டும். அப்படிச் செய்தும் கடைசி நிமிஷத்தில் 'வேலைத் தொந்தரவு' காரணமாக அந்த மந்திரி அல்லது தந்திரி தாம் வர இயலாது என்று ஒரு தந்தி தட்டிவிட்டால் ஒரே ஏமாற்றந்தான்.

சந்தாத் தொகைகளைத் திரட்டும் காலத்திலேயே காரியதரிசி அவர்களுக்கும் கூட்டுக் காரியதரிசி அவர்களுக்கும் தகராறு ஆரம்பமாகிவிடும். தலைவரின் ஊர்வலத்துக்கு மோட்டார்வண்டி

காப்பிரைட்: கொறவஞ்சி (கன்னடம்: ஜனவரி '48), பளேபேட், பெங்களூர் ஸிட்டி.

போதுமா, இரட்டை மாட்டு வண்டி வேண்டுமா? கொடி ஏற்றுவதற்குத் தலைவருடன் வரும் எவளாவது ஒரு பெண்மணி போதுமா, அல்லது வேறொருத்தியை அழைக்கலாமா? கடவுள் வணக்கம் பாட உன் பெண் மாத்திரம் போதுமா, என் பெண்ணும் என் பாடக்கூடாது? பெரிய மனிதர்களின் வீட்டுக்குப் போகும்போது என்னைக் கூப்பிடாமல் நீ மாத்திரம் தனியாகப் போய் விட்டாயே; நான் வந்திருந்தால் வந்த கௌரவத்தில் பாதியைப் பிடுங்கிக் கொள்வேனா? - இந்த மாதிரி பல சர்ச்சைகள் அவர்களிடையே நடக்கும். மகாநாட்டுக்கு மூன்று நாட்கள் இருக்கும்போது, கூட்டுக் காரியதரிசி தமது பதவியை ராஜீநாமாச் செய்துவிடுவார். பிறகு, நண்பர்களின் கட்டாயத்துக்கு இணங்கி, ராஜீநாமாவை வாபஸ் பெறுவார். ஆனாலும் ஜுரம் என்று பொய் சொல்லிப் படுக்கையில் படுத்தபடி, "இந்த அசடு இருக்கே, இது இந்த மகாநாட்டை நான் இல்லாமல் எப்படி நடத்துகிறது, பார்க்கிறேன்" என்று கூச்சலிடுவார்.

மேலும் ஊரில் பரவும் வம்பு தும்பு, பரஸ்பர தூஷணை, சண்டை ஆகியவற்றால் பந்தல் எழுப்புவது கஷ்டமாகும். மேளகாரர்கள் வேறு ஊரில் ஊத ஒப்புக்கொண்டிருப்பார்கள். கியாஸ் விளக்குக்கு எண்ணெய் கிடைக்காது. ரேஷன் ஆபீஸர் முகத்தைத் திருப்பிக்கொண்டு விடுவார். தொண்டர்களுக்குக் காபி போதாது. மாலைகளுக்கு அட்வான்ஸ் வேண்டியிருக்கும். ஒலி பெருக்கியின் வாடகை இரண்டு மடங்காகும். காரியதரிசியின் பாடு அதோகதிதான். 'மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகைகளுக்குத் தகவல் கொடுக்கலாமா?' என்று யோசித்துக் கொண்டே இருக்கையில், மகாநாட்டுக்கு விசேஷப் பத்திரிகை நிருபர்கள் வந்து சேர்ந்துவிடுவார்கள்.

அவர்களை ஊருக்கு அழைத்துக் கூட்டம் கூட்டமாக அங்கே கொஞ்சம் இங்கே கொஞ்சமாக வராந்தாக்களிலும் சத்திரம் சாவடிகளிலும் அமர்த்திவிடத் தொண்டர்களின் தலைவனைக் காரியதரிசி வேண்டிக்கொள்ளவேண்டும். தலைவன் ஊதும் ஊதல் - சமைக்க, பரிமாற, வெந்நீர் கொடுக்க, விளக்கேற்ற, நாற்காலி மாற்ற எல்லாவற்றிற்கும் ஒரே ஊதல்தான். பையன்கள் அடிக்கும் கூத்தோ தாங்க முடியாது.

தலைவரின் ஊர்வலம் விமரிசையாகத் தெருக்களில் வராவிட்டால், மகாநாட்டுக்குப் பொதுமக்கள் வரவே மாட்டார்கள். சர்க்கஸ் கம்பெனிக்காரர்கள் தங்கள் காட்டு மிருகங்களைத் தெருக்களில் வரிசையாக நடத்திக் குழந்தைகளின் மனசை ஆகர்ஷிப்பதுபோல், மகாநாட்டுத் தலைவரையும் அவருடன் வந்திருக்கும் இன்னும் சில பேரையும், ஊர்க்காரர்கள் பார்வையிட வசதியாக ஊர்வலம் நடத்த வேண்டும்.

மறுநாள் மகாநாட்டின் முதற் கூட்டம் நடக்கும். மேடையிலுள்ள ஆசனங்களுக்குப் போட்டி நிகழும். இனாம் டிக்கட்காரர்கள் அவசரப்படுவார்கள். சின்னக் குழந்தைகளின் அழுகுரல் கேட்கும். வரவேற்புத் தலைவர், படத் திறப்பாளர், கொடியேற்றுபவர், கண்காட்சித் திறப்பாளர், சங்கத் தலைவர், போஷகர், சபாநாயகர் இவர்கள் எல்லாரும் அதிகாலையில் எழுந்து, காலைக்கடன்களை முடித்து, நல்ல உடைகளை அணிந்து, மீசையை முறுக்கிக்கொண்டு மகாநாட்டுப் பந்தலில் பிரவேசிப்பதற்கு ஒன்பது மணியாவது ஆகும். அவர்

கள் எல்லோரும் நின்று பிரசங்க மாரி பொழிவார்கள். பிரதிநிதிகளோ முதல் நாள் பிரயாணம், அலைச்சல், பட்டினி இவற்றால் வாடியிருப்பார்கள். ஒரே களைப்பு, சோம்பல், கோபம் இவையே அவர்களிடம் தென்படும். அவர்களுக்குத் தேவை பிரசங்கங்கள் அல்ல; நல்ல சாப்பாடு, சூடான காபி இவையே. சில 'சம்பந்தி'களுக்கு - அவர்தாம் பிரதிநிதிகள் - கோதுமைச் சாதம் வேண்டும். வெந்நீர் சூடாக இருக்கவில்லை; உறைப்பு அதிகம்; காபிக்குச் சர்க்கரை போதாது; அரிசியில் கல்; பாலில் ஜலம் - இந்தமாதிரி அபவாதங்கள் கிளம்பும். இந்தக் குறைகளைக் கண்டிக்க நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும். சில பிரதிநிதிகள் கூட்டத்திலிருந்து வெளியேறி, தெருவிலிருந்தபடியே கூக்குரல் போடுவதும் உண்டு.

ஒலிபெருக்கி ஒரு முறை வேலை நிறுத்தம் செய்யும். பழுதுபார்க்கப்படும். அது மறு முறையும் வேலைநிறுத்தம் செய்யவே, தலைவர் தமது பிரசங்கத்தைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு, மீதியை அச்சிலே படித்துக்கொள்ளலாம் என்று சொல்லிப் பிரசங்கத்தை முடித்து விடுவார். தலைவர் பிரசங்கந்தான் இப்படியென்றால், நாடகம், நடனம், சங்கீதம் முதலியவையும் அவ்வளவு நன்றாக இருக்கமாட்டா. உள்ளூர் வித்வான்கள் வெளியூர் வித்வான்களைப் பரிகசிப்பார்கள். மேடையின் உயரத்தைப்பற்றி நாட்டிய கோஷ்டியார் குறை கூறுவார்கள். இதற்கு நடுவிலே, காலஞ் சென்ற பெரியோர்களுக்காக வருத்தம் தெரிவிக்கும் தீர்மானங்கள் வரும். மேலும், தங்கள் வகுப்பினருக்கோ அல்லது தங்களைச் சேர்ந்தவர்களுக்கோ பட்டங்கள் அல்லது பதவிகள் வந்ததற்கு, மகாநாட்டினர் தங்கள் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்வார்கள்.

மாலையில் பிரதிநிதிகளுக்கும் தொண்டர்களுக்கும் ஏதாவது சண்டை ஏற்பட்டு நிலைமை மோசமாவதும் உண்டு. அநேகர் ஊரைப் பார்வையிட வெளியே சென்றிருப்பார்கள். சிலர் படுக்கையில் படுத்து இருமல், தும்மல், ஜுரம் முதலிய வியாதிகள் காரணமாக மருந்து, கஷாயம் முதலியவற்றை விழுங்கிக்கொண்டிருப்பார்கள். வேறு சிலர் வட்டமாக உட்கார்ந்து சீட்டாடிக்கொண்டிருப்பார்கள். காரியதரிசி எப்படியோ போதிய ஆட்களை வைத்துக்கொண்டு தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குள், போதும், போதும் என்றாகிவிடும். கடைசியில் அவர் எவரையும் மறக்காமல் எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூற வேண்டும். இருநூறு தடவையாவது சங்கத்தின் சார்பாகவும், மகாநாட்டின் சார்பாகவும், வரவேற்புக் கமிட்டியின் சார்பாகவும், வேலைத்தொந்தரவு காரணமாக ஏற்கனவே புறப்பட்டுப் போய்விட்ட தலைவர் சார்பாகவும் காரியதரிசி அடுக்கடுக்காக வந்தனங்களைச் செலுத்துவார். கைகளைக் கொட்டிக் கொட்டிச் சபையோரின் கைகளெல்லாம் சிவந்துவிடும்.

பிறகு காரியதரிசி ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று, பிரதிநிதிகளை வழியனுப்ப வேண்டும். வீடு திரும்பிக் கணக்குப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்து, "போதும்! போதும்! இந்த அசட்டுத்தனம் ஜன்ம ஜன்மத்துக்கும் வேண்டாம்" என்று அவர் பெருமூச்சு விடுவார்.

இரவில் காரியதரிசிக்கு 104 டிகிரி காய்ச்சல் அடிப்பது நிச்சயம். அப்போதுதான் வெளியே தோன்றுவார் கூட்டுக் காரியதரிசி.

நகைச்சித்திரம்



கச்சேரி அதிகாரி: (திரும்பிப் பார்க்காமலே) "அப்பாடா! நாலு நாழிகையாகக் காற்று வராமெ என்ன தொல்லேயாயிருந்தது! ரிபே ராயிடுச்சா? பேஷ்! காற்று ரொம்ப நல்லா வருது. இனிமேல், நீ போக லாம்."

—வஸந்த்.

"அழகா இருக்கே! எப்போடி போட்டே இந்த ஸ்வெட்டர்?"

"தீவாளிக்குத் துணி கொடுத் தானே இல்லேயோ? அப்போ விலே பின்னுண்டு போட்டேன். கியூசன்ன இல்லே?"

—கொறவஞ்சி.



"அடாடா! இதுதான சங்கதி! ராத்திரி முழுக்க என்னடா தூக் கம் வரல்லேயேன்னு பார்த்தேன். இப்பத்தான் விஷயம் தெரியுது. நம்ம யோகாசனத்திலே ஓர் ஆணி யில்லே போயிடுச்சு!"

—ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம்ஸ்.

"அடியே! நான் திரும்பிவருகிற வேளைக்குச் சரியா வாசற்படியிலே வெந்நீரும் சொம்பும் தயாரா வச்சிரு. நான் இன்னிக்கு எங்கே போறேன், தெரியுமோ? ஹரிஜனங்களுக்குத் தலைமை வகிச்சு, அவாளைக் கோயிலுக்குள்ளே கொண்டுபோய் விட்டுட்டு வரப்போறேன். திரும்பி வந்ததும் ஸ்நானம்பண்ண எல்லாம் தயாரா இருக்கணும்."

—ஆனந்தவாணி.



"என்னடா ராமு பாக்கறே?"

"ஒண்ணுமில்லேடா! நம்ம தலைவர்களுக்குக் கழுத்தை இப்படிக் கடவுள் படைக்கக்கூடாதா, நிறைய நிறைய மாலை போடலாமேன்னு தான் பார்க்கறேன்!"

—கொறவஞ்சி

இவன்: உனக்கு வெகு நாளாய் ஒரு பரிசு கொடுக்கணுமின்னு எண்ணியிருந்தேன். இந்தா, வாங்கிக்கொள்...

அவள்: அது சரி. ஆனல் அப்புறம் ஆகட்டும்; நடுத்தெருவிலே வேண்டாமே.

—மனோஹர்.

கடவுளை வணங்கியவரை இன்று கொல்கிறான் ஒரு வெறியன். அன்று நடந்ததும் இப்படித்தானே?

டி. எம். அமீர்

மார்தட்டும் பண்டிகை

★

முஸ்லிம்களுக்கு 'மொகரம்' என்பது வருஷப் பிறப்பு தினம். ஆனால், இதைச் சந்தோஷ நாளாக அவர்கள் கொண்டாடுவதில்லை. இது ஜனவரிப் பண்டிகையைப் போன்றது அல்ல; ஹிந்துக்களின் வருஷப் பிறப்பைப் போன்றதும் அல்ல. இஸ்லாம் சரித்திரத்திலேயே மிகவும் துக்கமான சம்பவங்கள் நிகழ்ந்த தினம் மொகரம். அது சத்தியம், சாந்தி, சமத்துவம், அன்பு இவற்றுக்காகப் புண்ணிய புருஷர்கள் போராடி, உயிர் நீத்த நன்னாள்; குருக்ஷேத்திரப் போரை ஒத்த பெரும் போர் நிகழ்ந்த நாள்; சகோதர அன்புக்காகத் தன் தலையைக் கொடுத்த வீரனின் நினைவு நாள். சத்தியத்தையும் அன்பையும் மக்கள் வளர்க்க வேண்டுமென்பது இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கை. இதை உணராதவனுடைய வாழ்வு வீண் என்பதை நன்றாகச் சுட்டிக் காட்டுகிறது மொகரம். ஹஜரத் முகம்மத் அவர்களுக்குப் பிறகு வாழ்ந்த கலீபாக்களின் அரசாங்கத்தை ராம ராஜ்யத்துக்கு ஒப்பிட்டு, அவர்கள் உண்மையான தேவதூதர்கள் என்கிறார் மகாத்மா காந்தி. இந்தச் சம்பவங்கள் எல்லாம் அரேபிய தேசத்தில் நடந்தவை.

அரேபியாவில் முக்கியமான வம்சங்கள் மூன்று: முதலாவது வம்சத்துக்கு, 'பனி ஹாஷம்' என்று பெயர். இந்த வம்சத்தினர் சிறந்த வீரர், பண்டிதர், ஞானிகள். இரண்டாவது வம்சத்துக்கு, 'பனி மக்ஜூம்' என்று பெயர். இந்த வம்சத்தினருக்குப் பதவி மோகமும் ஆசையும் அதிகம். இவர்கள் அதிகாரப் பித்துப் பிடித்தவர். மூன்றாவது 'பனி உமையா' என்ற வம்சம். இந்த வம்சத்தினர் அரசாங்க நிர்வாகத்தில் நிபுணர்கள், சிறந்த வீரர்கள். ஆனால் மதஸ்தாபனங்களில் இருந்த பொருளற்ற மூடக் கொள்கைகளை இவர்கள் உத்சாகப்படுத்தி வளர்த்து வந்தார்கள். பதவி வகிப்பதில் தங்களுக்குச் சமமானவர் வேறு எவருமே இல்லை என்பது இவர்களின் எண்ணம். மதத்தின் உண்மையான தத்துவங்களை எடுத்துச் சொல்லி, சத்தியத்துடன் சமத்துவத்தை வளர்த்து வந்த 'ஹஜரத் முகம்மத்' வம்சத்தினரை இவர்கள் வெறுத்தார்கள். அவர்களுக்கு இவர்கள் அளவில்லாத துன்பங்களையும் இழைத்தார்கள். இதையெல்லாம் மீறிக் கிளம்பியது 'இஸ்லாம்'.

ஹஜரத் முகம்மதைப் பின்பற்றி வந்த அவருடைய மாப்பிள்ளை ஹஜரத் அலி என்பவர் மிகவும் உயர்ந்த

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம், 14—12—'47),
20—ஏ, லால்பாக் ரோட், பெங்களூர்.

நோக்கமுடையவர். இவரைப் 'பனி உமையா' வம்சத்தார் தீர்த்துவிடுவதென்று தீர்மானித்துவிட்டார்கள். ஹஜரத் அலிக்குப் பிறகு அவருடைய மகன் ஹஜரத் ஹசன் என்பவர் கலீபா பட்டத்தைப் பெற்ருர். அவர் 'பனி உமையா' வம்சத்தைச் சேர்ந்த ஒருவனுக்குப் பட்டத்தைக் கட்டிவிட்டார். 'பனி உமையா'வின் கட்சி பலத்தது. புதிய கலீபாவோ முரடன்; சத்தியத்தில் நம்பிக்கை இல்லாதவன். ஹஜரத் முகம்மதின் வம்சத்தாருக்கு இவன் எல்லேயில்லாத் துன்பங்களேக் கொடுத்து வந்தான். குடிதண்ணீரில் விஷத்தைக் கலந்து முக்கியமானவர்களேக் கொன்ருன். கலீபாவின் சகோதரன் இதை எதிர்த்தான். இந்தச் சமயத்தில் குபா என்னும் இடத்திலிருந்து ஜனங்கள் ஓடிவந்து ஹஜரத் ஹுசேனிடம் முறையிட்டார்கள். தங்களுடைய சேனேக்குத் தலைமை வகித்துத் தங்களேக் காப்பாற்ற வேண்டுமென்று அழுதார்கள். ஹுசேன் இதை நம்பிஞர். ஜனங்களேக் காப்பாற்ற எண்ணங்கொண்டார். யூபிரடீஸ் என்ற நதிக்கரையில் கூடாரம் அடித்தார். தம் நண்பர்களேயும் பந்துக்களேயும் கூடவே அழைத்து வந்தார். நடந்திருக்கும் சூழ்ச்சியை அவர் அறியவில்லே. இவர்களேச் சுற்றிலும் எதிரிகள் முற்றுகை போட்டுவிட்டார்கள். சொட்டுத் தண்ணீர் கிடைக்காமல் இவர்கள் எல்லோரும் தவித்து வாடிஞர்கள். சமீபத்தில் மணம் புரிந்துகொண்டவன் ஹுசேனின் அருமை மகன் ஹஜரத் காஸிம். எதிரிகளின் கோட்டைகளே எதிர்த்துப் போரிட்டு அபிமன்யுவைப் போல் அவன் வீரசொர்க்கம் புகுந்தான். எல்லோரும் கொலேயுண்டு மாண்டார்கள். ஹஜரத் ஹுசேன் படுகாயமடைந்து விழுந்தார்.

சமயம் பார்த்து ஹுசேனின் தலேயையும் அவரைச் சேர்ந்த மற்றவர்களின் தலேகளேயும் வெட்டிக் கொண்டு வருவோருக்கு ஏராளமான பூமியும் சம்மானமும் கிடைக்குமென்று கலீபா அறிக்கை விடுத்தான். ஆசைகொண்ட இரண்டு படைத்தலேவர்கள், ஹுசேனின் கூடாரத்துக்குள் நுழைந்தார்கள். தம்மை அவர்கள் கொல்ல வந்ததைக் குறித்து ஹுசேன் வருத்தம் கொள்ளவில்லே. "நண்பர்களே, இது நல்ல நாள்; வெள்ளிக்கிழமை. ஆண்டவனுக்குப் பிரியமான நாள். நமாஜ் செய்யும் வேளே வந்துவிட்டது. எனது கடைசி நமாஜை முடித்துக்கொள்கிறேன். பிறகு என் தலேயை வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள்" என்ருர் ஹுசேன். கடவுளுக்கு வணங்கிய தலேயை வெட்டிஞர்கள் வீரர்கள்! ரத்த வெள்ளம் பெருக்கிஞர்கள். முண்டங்களே உதைத்துத் தள்ளிஞர்கள். ஹஜரத் ஹுசேனின் மனேவியார் பார்க்கும்படி, அவரது தலேயை நீண்ட கொம்புகளின் உச்சியில் கட்டி ஊர்வலமாக எடுத்துச் சென்ருர்கள். இது முஸ்லிம்களின் குருக்ஷேத்திரப் போர். தர்மத்துக்கும் அன்புக்கும் போராடிய இந்த மகா புருஷர்களேக் குறித்தது தான் மொகரம். இது களியாட்டம் ஆடும் ஒரு பண்டிகை அல்ல; மகான்கள் மக்களுக்காகத் தங்கள் உயிரைச் சமர்ப்பித்த சங்கடமான சம்பவம் இந்த மொகரம். இதை எல்லாம் நினேக்கும்போது, மக்களின் உள்ளம் கொதிக்கும். சத்தியத்துக்காகவும் சாந்திக்காகவுந்தான் இன்று தினம் முஸ்லிம்கள் மார் தட்டுகிருர்கள். அன்புக்காகத் தன்னேயே தியாகம் செய்ய முன் வருவதுதான் இஸ்லாம் தர்மம். இதுதான் மாரடிக்கும் பண்டிகை என்பது.

மொகரத்தை முஸ்லிம் மக்கள் பல வகையாக அநுஷ்டித்து வருகிறார்கள். நம் நாட்டில் இதை ஹிந்து மக்களும் சேர்ந்து அநுஷ்டிக்கிறார்கள். குவாலியர் சம்ஸ்தானத்திலும் மற்றும் சில சம்ஸ்தானங்களிலும் மொகரம் பண்டிகையை மிகவும் விமரிசையாகவும் ஆடம்பரமாகவும் நடத்துகிறார்கள். பம்பாய் மாகாணத்தில் இதைக் கொண்டாடும் சிலரை ஹுசேனிப் பிராமணர் என்றுகூடச் சொல்லுகிறார்கள்.

ஷியா என்னும் முஸ்லிம் வகுப்பினர் மொகரத்தை ஒரு விரதமாகக் கொண்டாடுகிறார்கள். துக்கம் நிறைந்த இந்தச் சம்பவங்களைப் பற்றிக் கவிதைகளும் கட்டுரைகளும் இயற்றுகிறார்கள். பெரிய சபைகள் கூடி இவற்றைப் படிப்பதில் அவர்களுக்கு மிகுந்த ஆவல். துக்கத்தை ஆற்றிக்கொண்டு தர்மத்தைக் காக்க வேண்டுமென்பதே இதன் நோக்கம். ஆண் பெண் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருமே இந்த விரதத்தை அநுஷ்டிக்கிறார்கள். விரதம் அநுஷ்டிப்பவர் தங்கள் கையில் ஒரு சரடு கட்டிக்கொள்ளுவார்கள். அந்தச் சரட்டுக்கு 'ஆண்ட்' என்று பெயர். அது பச்சைச் சாயமும் சிவப்புச் சாயமும் தோய்ந்து வர்ணமேறியிருக்கும். 'ஹசன்' என்று சொல்லப்படும் நூல் பச்சையாக இருக்கும். அது புண்ணிய புருஷர்களை விஷம் வைத்துக் கொன்றதைக் குறிக்கிறது. சிவப்புச் சாய நூல் ஹுசேனின் மதஸ்தாபனத்தைக் குறிக்கிறது. மொகரம் கொண்டாட்டத்தின்போது புலிவேஷம் கட்டி ஆடுவது வழக்கம். புலி தங்களுடைய ஆத்மாவை ரட்சிக்கிறது என்பது கருத்து. இதைத் தவிர, கரடி வேஷம், மல்யுத்தம், கத்திச் சண்டை முதலிய எவ்வளவோ நடிப்புகள் உண்டு.

அல்லாவின் மண்டபத்தைத் தஜாயா, ஆணவா, தாபூத் என்று சொல்லுவார்கள். இதைப் பல விதமான காகிதங்களால் சிங்காரம் செய்து, காக்கைப் பொன்னாலும் ஜரிகையாலும் மிகவும் நேர்த்தியாக அலங்காரம் செய்வார்கள். இது ஹசன் ஹுசேனின் கோரியை ஒத்திருக்கும்.

மொகரத்தில் தின்பண்டங்கள், சர்க்கரை, பானகம் முதலியவற்றை எடுத்து வந்து அல்லாவுக்கு நிவேதனம் செய்வார்கள். பிரார்த்தனைகளும் செலுத்துவார்கள். சில பெண்கள் தீக்குளியும் குளிப்பார்கள். குழந்தைகள் அங்கப் பிரதட்சிணம் செய்யும். மொகரத்தின் கடைசி நாளில் அலங்காரங்கள் வெகு விமரிசையாக இருக்கும்.

ஊர்வலத்தைப் பஞ்சா, தாபூத் என்று சொல்லுவார்கள். விமானங்கள் ஜோடித்து ஊர்வலம் வரும்போது, மக்கள் வாசனைப் பொருள்களையும் நாணயங்களையும் வாரி இறைப்பார்கள். குழந்தைகளைத் தேர்க்காலில் போட்டு வேண்டிக் கொள்ளுவார்கள். உண்மையான தர்மத்தைக் காக்க வேண்டுமானால், சத்தியம், அன்பு, இவற்றோடு தியாகமும் வேண்டும் என்பதே இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கை.

***

தான் சொன்ன விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கிறான் மூடன். தான் சொல்லப்போகிற விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கிறான் அறிவாளி.

படிப்பில் தோற்ற பேரறிஞர்

'ஓமேகா'

பாலியத்திலே மண்டுவாய்த் தோன்றிய பலர் வாழ்க்கையிலே பேரறிஞர்களாய்த் திகழ்ந்திருக்கிருர்கள். இதன் காரணம் என்ன? அவர்களை வளர்த்த முறை, படிப்பித்த முறைகளின்மீது குற்றமா? அவர்கள்மீது குற்றமா? அல்லது இயற்கை விசித்திரமா? அது எதுவானாலும், நிகழ்ந்த உண்மை இதுதான்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற பெருமக்களிலே சிலர் இளம் பிராயத்தில் சாமான்யமானவர்களாகவே இருந்திருக்கிருர்கள். நெப்போலியனின் ஜாதகத்தையும் கிளேவின் ஜாதகத்தையும் அவர்களின் இளம் பருவத்திலே பார்த்துவிட்டு, "இவர்கள் பெரிய படைத்தலைவர்களாக விளங்குவார்கள்" என்று யாராவது ஜோசியன் சொல்லியிருந்தால், முகஸ்துதிக்காக அப்படிச் சொல்கிருன் என்றே அவர்களின் பெற்ருேர் நினைத்திருப்பார்கள். நெப்போலியன் வகுப்பில் 42 - ஆம் பையனுக இருந்தார். ஆனுல் அவருக்கு முன் நின்ற 41 பேர்வழிகளைப்பற்றி ஒன்றுமே உலகத்துக்குத் தெரியாது. இந்தியாவில் தம் பெருமையை நிலைநாட்டிய கிளைவ், பள்ளிக்கூடத்தில் ஒரு மண்டு. வாத்தியார்களுக்கு அவர் உருப்படுவாரென்ற நம்பிக்கையே இல்லை. ஒன்றைவிட்டு ஒன்ருகப் பல பள்ளிக்கூடங்களில் அவரைப் போட்டார்கள்; அவருக்கு எங்கேயாவது கொஞ்சம் படிப்பு வரட்டுமென்று அவர்கள் நினைத்தார்கள். அவர் புத்தகத்தின் பக்கத்திலே போனல் தானே?

ஸர் ஐஸக் நியூடன் பாடம் படிக்கிறதே இல்லை. வகுப்புக் கடைசியில் அவருக்கு அடுத்தபடி ஒரே பையன்தான் இருந்தான். பூகோளத்தில் அடுத்தடுத்துக் 'கோட்' அடித்தவர் நியூடன். அவர் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருந்தபோது தம் அறைக்கதவில் இரண்டு துவாரங்கள் செய்து வைத்திருப்பாராம். ஒன்று பெரிது; அதன் வழியே ஒரு பெரிய பூனை நுழைந்து வரும். மற்ருென்று சிறிது; அதன் வழியே ஒரு சிறிய பூனை நுழைந்து வரும். இந்த மண்டுப் பையன்தான் உலகத்தில் இயற்கைத்தத்துவத்தை உணர்ந்த பேரறிஞன் ஆனுன்.

பெரிய பெரிய புலவர்களைக் கொஞ்சம் கவனிப்போம். ஷேக்ஸ்பியர் பள்ளிக்கூடத்துக்குப் போன படலம் மிகவும் சுருக்கமானது. லத்தீனே கிரீக்கோ அவருக்குத் தெரியாது. ஒரு மானைப் பிடித்த குற்றத்துக்கு உடந்தையாக இருந்தார். அதனுல் பயந்து தம் ஊரைவிட்டு லண்டனுக்கு ஓடிவிட்டார்.

கோல்டுஸ்மித் வகுப்பில் நாலு பேர் கண்ணில் படும்படி இருக்கவில்லை. அழுக்கு உடை அணிந்திருப்பார்; பராக்குப் பார்த்துக் கொண்டே இருப்பார். புத்தகங்க

காப்பிரைட்: இந்தியன் ரிவ்யூ (ஆங்கிலம்: பிப்ரவரி '48),
8, சுங்குராம செட்டி தெரு, ஜி. டி. சென்னை.

ளைப் படிப்பதில் அதிகக் கவனம் செலுத்தமாட்டார். ஊர் சுற்றுவதும் தோழர்களோடு கொம்மாளமடிப்பதுமே அவருக்குப் பிரியம். ஹாஸ்டலின் விதிகளை மீறி ஒரு முறை அவர் தம் அறையில் ஆடல்பாடலுக்கு ஏற்பாடு செய்தார். அது கண்டு வாத்தியார் அவர் கன்னத்தைப் பதம் பார்த்தார். ரோசத்தால், காலேஜுக்கு அவர் முழுக்குப் போட்டுவிட்டார். காலேஜில் இருக்கிறபோதே கோல்டுஸ்மித்துக்குச் செய்யுள் இயற்றத் தெரியும். அவற்றைப் பிச்சைக்காரர்களிடம் காலணா அரையணாவுக்கு விற்றுவிடுவார். நடுராத்திரியில் நாடோடிப் பிச்சைக்காரர்கள் பாடும் பாடல்களைக் கேட்பதற்காக அறையிலிருந்து மெதுவாக அவர் நழுவிவிடுவார்.

ஸ்விப்ட் என்பவர் இங்கிலீஷ் வசனகர்த்தாக்களில் சிறப்புற்றவர். டப்ளின் யூனிவர்ஸிடியில் இங்கிலீஷில் 'ப்ளக்' ஆனவர். பரீட்சையில் தேர்ச்சி பெற முடியாமல் 'விசேஷத் தயை' யினால் பட்டம் பெற்றார்.

ஷெல்லி என்னும் கவிஞர் பள்ளிக்கூடத்து வாழ்க்கையில் மண்டு. அவரைப் பார்த்தால் பெண்ணைப்போல இருக்கும். ஈடன் பள்ளியிலிருந்த பிள்ளைகள் அவர்மேலே மண்ணை எறிந்து பரிகாசம் செய்வார்கள். 'வெறியன் ஷெல்லி' என்று ஆக்ஸ்போர்டில் அவருக்குப் பேர் கிடைத்தது; அங்கிருந்து அவரைத் தள்ளிவிட்டார்கள்.

தாமஸ் சாட்டர்டன் என்ற கவிஞரை மக்கு என்றுதான் ஜனங்கள் நினைத்தார்கள். ஐஸக் பாரோ என்பவர் இளமையில் மகா மோசமாக இருந்தார். உலகத்துக் குழந்தைகளில் யாரையாவது கடவுள் எடுத்துக்கொள்வதாக இருந்தால் தங்கள் மகனைக் கொடுக்கத் தயாராக இருந்தார்களாம் ஐஸக் பாரோவின் பெற்றோர்கள்.

ஸ்காட் சிரமப்பட்டுப் படித்தவர்; ஆனால் கெட்டிக்காரர் அல்ல. ஒரு சமயம் வாத்தியார் கோபமூண்டு, "இதுவரைக்கும் இவன் முட்டாளாக இருந்தான்; இனி மேலும் முட்டாளாகவே இருப்பான்" என்று சொன்னாராம். ஆனால் அவர் இயற்றிய நூல்கள் சுறுசுறுப்பும் கற்பனையும் நிறைந்த உள்ளத்தின் விளைவுகளாக இருக்கின்றன.

மிகப் பெரிய பிரசங்கி என்ற பாராட்டைப் பெற்ற ஷெரிடனைத் திருத்தமுடியாத மண்டு என்று வாத்தியார்கள் சொல்லிவிட்டார்களாம். ஸ்காட்லந்து தேசத்துக் கவிஞராகிய பர்ன்ஸ் பள்ளிக்கூடத்தில் மட்டியாக இருந்தவர். ஒவ்வொருவரும் ஜியார்ஜ் எலியட் நூல்களில் ஒன்றையாவது வாசித்திருப்பார்கள். ஆனால் அவளை வாத்தியார் மந்தமதி என்று சொன்னதோடு வீட்டில் வேலைகள் செய்யத்தான் அவள் லாயக்கு என்றும் சொல்லிவிட்டாராம்.

எமர்ஸனுக்குச் சாதாரணமான கணக்குக்கூடப் போட வராது. அவருக்கு மறதி அதிகம். தம்முடைய நெடுநாள் நண்பராகிய லாங்பெல்லோ மரணம் அடைந்தபோது எமர்ஸன் உருக்கமாக ஒரு பிரசங்கம் செய்தார். முடிவில், "நாம் இன்று அடக்கம் செய்யப்போகும் மனிதர் சிறந்த புருஷர். அவர் பேர் - அவர் பேர - மறந்து போச்சு" என்று கூறி நிறுத்திவிட்டார்!

அனடோல் பிரான்ஸ் என்ற நவீனகால எழுத்தாளர் பரீட்சை

யில் தேர்ச்சி பெறுவதே கஷ்டம். பி. ஏ. பரீட்சையில் படுதோல்வி!

விஞ்ஞானப் பெரியோர்களைப் பார்க்கலாம். நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்த ஜேம்ஸ் வாட் பள்ளிக் கூடத்தில் கேலிக்கு இடமாக இருந்தார். அவருடைய அத்தை அவரை வைதாள். "என்னடா சுத்தச் சோம்பேறியாக இருக்கிறாயே. புத்தகத்தை எடுத்துப் படி; அல்லது ஏதாவது உபயோகமான காரியத்தைக் கவனி. நானும் ஒரு மணியாகப் பார்த்துக்கொண் டிருக்கிறேன். கெட்டில் மூடியை எடுக்கிறாய்; மறுபடியும் மூடுகிறாய். கிண்ணத்தை எடுக்கிறாய்; வெள்ளிக் கரண்டியை எடுக்கிறாய்; ஆவி மேலே பிடிக்கிறாய். நீர்த்துளி சொட்டுவதைப் பிரமாதமாகக் கணக்குப் பண்ணுகிறாய். உன்னைப்போலச் சோம்பேறியை உலகத்திலே பார்த்ததில்லை" என்றாளாம். ஜேம்ஸ் வாட்டின் அந்தப் பைத்தியக்கார விளையாட்டிலிருந்துதான் நீராவி யந்திரம் உற்பத்தியாகப் போகிறதென்று அந்த அப்பாவி அத்தைக்கு என்ன தெரியும்?

தாமஸ் ஆல்வா எடிஸன் தமக்குச் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் மறந்துவிடுவார். அவருடைய ஸ்தானம் வகுப்பில் எப்போதும் கடைசிதான். டாக்டர்கள் அவருக்கு ஏதோ மூளைக்கோளாறு என்று சொன்னார்கள். விஞ்ஞான சம்பந்தமான செய்திகள் அவருக்கு எவ்வளவு சிறப்பாய் ஞாபகத்தில் இருந்தன என்பது பிற்காலத்தில் தெரிய வந்தது.

மகாமேதையாகிய ஐன்ஸ்டீன் ஒரு காலத்தில் பள்ளிக்கூடத்தில் மக்காக இருந்தார். அவர் உருப்படுவாரென்று வாத்தியார் எண்ணவேயில்லை. ஐன்ஸ்டீன் மிகவும் கஷ்டத்தோடு பேசக் கற்றுக்கொண்டார். இப்போதோ அவருடைய 'ரேலெடிவிடி' என்ற சித்தாந்தத்தை விளக்க 900 புத்தகங்கள் வந்திருக்கின்றன; ஆனாலும் பன்னிரண்டு பேர்களே தமது சித்தாந்தத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று அவர் சொல்கிறார்.

இங்கிலாந்தின் ஆபத்தான வேளையில் அதை ரட்சித்தவர் என்று சரித்திரத்தில் இடம்பெறத் தக்க வின்ஸ்டன் சர்ச்சில் பள்ளிக்கூடத்தில் கெட்டிக்காரர் அல்ல. முதல் பாரத்தில் பல வருஷங்கள் தங்கிவிடும் பெருமையில் அவரை வென்றவர் யாரும் இல்லை; அந்தப் பாரத்தில் அவ்வளவு காலமும் கடைசி இடத்தைத்தான் அவர் வகித்தார்.

இப்போதுள்ள இந்தியத் தலைவர்களில் பள்ளிக்கூடத்தில் பரிசுபெற்றவர்கள் அதிகப் பேர் இல்லை. காந்தி சாமான்யமான மாணுக்கர்; வல்லபபாய் படேலுக்குப் பரிசு ஏதாவது கிடைத்ததா என்பது சந்தேகத்துக்குரிய விஷயம். பத்திரிகைக்காரர்களில் பழம்புலியாகிய ஸர் ஸி. ஒய். சிந்தாமணி இண்டர்மீடியட் பரீட்சையைத் தாண்டவே முடியாமற் போயிற்று. அந்த மனிதரே ஐக்கிய மாகாண அரசாங்கத்தில் கல்வி மந்திரியாக இருந்து நன்றாக நிர்வாகம் செய்தவர்!

இப்படி எத்தனையோ உதாரணங்கள். ஆனால் பள்ளிக்கூடத்திலோ காலேஜுகளிலோ பரிசு வாங்குபவர்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுவது அருமையாகவே காணப்படுகிறது.



காந்தி

சாபர்மதிக் காட்சிகள்: மகாத்மா காந்தியின் சாபர்மதி ஆசிரமத்தில் வசிக்கும் அதிருஷ்டம் எனக்குக் கிடைத்தபோது, அங்கே சுமார் 130 பேர் இருந்தார்கள். இருபது, இருபத்தைந்து வகையான ஜாதி யார்.

ஒருநாள் மாலை 5-30 மணிக்குச் சாப்பாடு முடிந்தது. சாபர்மதி மைதான மணலில் சில பையன்கள் விளையாடிக்கொண் டிருக்கிறார்கள். ஒரு பையனின் கையில் எட்டணுக் காசு அகப்பட்டது. "இதோ ஓர் எட்டணுக் காசு கிடந்தது. சொந்தக்காரன் கேட்டு வாங்கிக்கொள்ள லாம்" என்று அவன் கத்தினன். "என்னிடம் காசே கிடையாது. அது என் காசாக இருக்க முடியாது" என்றான் ஒருவன். "என் பனியனில் ஜேபியே கிடையாது. அது என் காசாக இருக்கமுடியாது" என்றான் இன்னொருவன். மூன்றாவது பையனோ, "ஷர்ட்டும் பனியனும் போட்டுக்கொண் டிருக்கிற பசங்கள் பட்டும் கவலை. எனக்கென்ன வந்தது?" என்றான்.

இதோ ஒரு குச்சி கிடக்கிறது. அதிலே ஒரு துளை. துளையிலே ஒரு கயிற்றைக் கோத்திருக்கிறார்கள். இது என்ன குச்சி? பாம்புகளை ஹிம்சிக்காமல் பிடித்து அதோ எட்டியுள்ள முள் புதர்களில் கொண்டு போய் விட்டுவிடுவதற்காக உள்ள கண்ணிக் குச்சியே இது.

—'கே' (ஸ்வதந்த்ரா)

* * *

யார் தந்திரம் மேல்? "மில் முதலாளிகளுடைய தந்திரங்களைக் கண்டு ஏமாறுகிறீர்கள்!" என்று ஓர் அட்டை சொல்கிறது. இப்படிச் சொல்லுவது போதாது. "யாருடைய தந்திரங்களைக் கண்டும் ஏமாறுதீர்கள்; சர்வ ஜாக்கிரதையாக இருங்கள்" என்றே நான் சொல்வேன். இந்த எச்சரிக்கை உங்களுக்கு மட்டும் அல்ல, எனக்கும் சகல ஊழியர்களுக்குமே இருக்க வேண்டியதாகும்.

—காந்திஜி (ஹரிஜன்)

* * *

காந்தியின் அதிதேவதை: கில்பர்ட் மர்ரே, பி.வி. லயான், மைக்கேல் சாட்லர், பாலியல் கலாசாலை மாஸ்டர் ஆகிய பிரபல அறிஞர்கள் காந்திஜியை மூன்றுமணி நேரம் சரமாரியாய்க் கேள்வி கேட்டார்கள். அதை நான் பார்த்துக்கொண் டிருந்தேன். காந்தி ஒரு விநாடிகூடக் கலங்கவில்லை; தயங்காமல் பதில் சொன்னார். அப்போதுதான் எனக்கு ஒன்று உறுதியாயிற்று. சாக்ரடீசுக்குப் பிறகு, இவர் மாதிரி பரிபூர்ணத் தன்னடக்கமும் அமைதியும் உள்ள மனிதர் வேறு யாருமே

வாழ்வும் வாக்கும்

நினைப்பதைச் சொல்லுவார், சொல்லுவதைச் செய்கையில் காட்டுவார் காந்திஜி. அவர் வாழ்வு நமக்கு வழிகாட்டி. அவர் சொல் நமக்கு அமுதம்.

உலகில் பிறந்ததில்லை என்று எனக்கு உறுதியாயிற்று. சாக்ர டீசைப்போல, இவருக்கும் ஓர் அதிதேவதை இருக்கிறது. அந்த அதிதேவதை பேசும்போது, வாதத்தைக் கண்டோ, அபாயத்தைக் கண்டோ, காந்தி அஞ்சுவதில்லை. "காந்தி, உங்கள் அபிப்பிராயம் தவருயும் இருக்கலாம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?" என்று மிக்க ஏக்கத்தோடு விண்ட்ஸே கேட்டது இன்னமும் என் காதை விட்டு அகலவில்லை. இல்லை, அது சாத்தியமென்றே காந்திக்குத் தோன்றவில்லை. காந்தியின் அதிதேவதை பேசும்போது, மரணம் என்ற காலசர்ப்பம் மகாத்மாவின் முகத்திலே தன் விஷப்பற்களைப் பதித்தாலும் சரியே, ஒரு சர்வகலாசாலை நிபுணர்கள் அத்தனை பேருமே வந்து வாதமிட்டாலும் சரியே; மகாத்மா அசையமாட்டார்.

—பிரபல ஆசிரியர் எட்வர்ட் தாம்ஸன்

* *

புனிதமான பாதரட்சைகள்: தென்னுப்பிரிக்காவில் காந்திஜியை ஸ்மட்ஸ் சிறையிலே போட்டார். தம் புத்தகசாலையிலிருந்து சில புஸ்தகங்களைப் பொறுக்கியெடுத்து, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கைதி காந்திஜிக்கு ஸ்மட்ஸ் மிக்க சிரத்தையோடு அனுப்பிவந்தார். காந்திஜி வாரத்துக்கு வாரம் ஜோடி ஜோடியாகச் சிறையில் பாதரட்சைகள் தயாரித்துக்கொண்டிருந்தார். தாம் விடுதலையடைந்தபோது, காந்திஜி ஸ்மட்ஸைப் பேட்டி கண்டார். அப்போது தாம் சிறையில் தயாரித்த ஒரு ஜோடி பாதரட்சையை ஸ்மட்ஸுக்குப் பரிசளித்தார். ஸ்மட்ஸ் சொல்லுகிருர்: "நான் சிறையில் தள்ளிய அந்த மனிதனின் தாராள குணத்தை முதல்முதலில் கண்டுகொண்டவன் நானே. அவர் கொடுத்த பரிசு பாதரட்சைதான். என்றாலும், அதில் என் காலை வைக்க எனக்குத் துணிவு வரவேயில்லை. தாராள குணம், அன்பு இந்த இரண்டுக்கும் சின்னமாய் விளங்கியது அந்தப் பாதரட்சை. அதை வெகுகாலம் வரையில் ஒரு ஞாபகச் சின்னமாகவே வைத்திருந்தேன். பின்னுல்தான், மிகவும் விசேஷக் கொண்டாட்ட நாட்களில் மட்டும் அதை அணிந்துகொள்ளத் தொடங்கினேன்.

—வி. கிருஷ்ணராவ் (ஸ்வதந்த்ரா)

* *

தன்மதிப்புள்ள மனிதனுக்கு இரும்பு விலங்கானுலென்ன, தங்க விலங்கானுலென்ன; இரண்டுமே பிடிக்காது. கொடுமை உலோகத்தில் இல்லை; விலங்கிலேதான் இருக்கிறது.

—காந்திஜி (யங் இந்தியா)

குயவர்களே வசிக்காத ஓர் ஊர் ஒரிஸ்ஸாவில் உண்டு. அதன் வரலாறு ஒரு விசித்திரம்.

கதை சொல்லும் குளம்

கோப்பூரு வேங்கடானந்த ராகவராவ்

விசாகபட்டணத்தை ஒட்டிய சில பிரதேசங்களை இப்போது ஒரிஸ்ஸாவில் சேர்த்திருக்கிறார்கள். அந்தப் பிரதேசங்களுக்குள் ஒன்றில் அதிசயக் கதை சொல்லும் மடு ஒன்று இருக்கிறது.

மீன் மடு என்று அதற்குப் பெயர். பாடுவா தாலுக்காவில் நண்டு மலையைச் சார்ந்த 'பாடேரு' என்னும் கிராமம் இருக்கிறது. அதற்கு ஆறு மைல் தூரத்தில் தென் மேற்கே 'மடம்' என்னும் ஒரு சிறிய ஊர் இருக்கிறது. இதற்குப் பக்கத்திலே தான் அந்த மீன் மடு இருக்கிறது. இங்கே பாயும் ஆற்றின் மேல் பிரமாண்டமான பாறைகள் பாய் விரித்தாற்போல் பரவிக் கிடக்கின்றன. பாறைகளுக்கு அடியில் ஆறு துளைத்துக்கொண்டு ஓடுகிறது. நூறு கஜ தூரத்துக்கு மேலாகவே ஆற்றின் பிரவாகம் அந்தர் வாஹினியாக (கண்ணுக்குத் தெரியாமல் உள்ளேயே) ஓடுகிறது. இப்படிச் சுமார் அரை பர்லாங் தூரம் பூமிக்குள்ளே ஓடிய ஆறு மறுபடியும் பூமிக்கு வெளியே வந்து பாய்கிறது.

ஆறு வெளியே பாயும் இடத்தில் தான் மீன் மடு இருக்கிறது. இந்த மடுவில் ஏராளமான மீன்கள் வசிக்கின்றன. குட்டி மீன்கள், நடுத்தர மீன்கள், பெரிய மீன்கள் ஆகிய பல வகை மீன்கள் குலுகுலுவென்று இங்குமங்கும் ஓடும்.

இந்த மீன்கள் புதிய ஆட்களைக் கண்டு மருண்டு ஓடுவதில்லை. யாராவது கையை நீட்டினால், நீட்டிய கைகளுக்குள் முழு நம்பிக்கையுடனும் சந்தோஷத்துடனும் அவை வந்து புகுந்துகொள்ளுகின்றன. கையால் தடவிக்கொடுத்தால், அப்பப்பா! கண்கள் மூலமாக மீன்கள் தம் சந்தோஷத்தை எவ்வளவு அழகாகத் தெரிவிக்கின்றன! அருகில் இருக்கும் ஜமீன் வம்சத்தார் இந்த மீன்களைப் பூஜிக்கிறார்கள். அவர்கள் தங்களை மச்ச குலத்தினர் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஜமீன் உத்தரவுப்படி ஜனங்கள் எல்லோரும் இந்த மீன்களை அன்புடன் காப்பாற்றுகிறார்கள்; துன்புறுத்துவதில்லை. வருஷந்தோறும் இங்கே இது சம்பந்தமாக உற்சவங்களும் நடக்கின்றன.

ஒரு காலத்தில் ஒரு வியாபாரி இந்த மடுக்கரையில் தங்கியிருந்தான். ஆசையுடன் தன் பக்கத்தில் வந்த மீன்களைப் பிடித்து இரண்டாம் பேர் அறியாமல் கொன்று சமைத்து அவன் தின்றுவிட்டான். நம்பிக்கை மோசம் செய்த அந்த வியாபாரியை மீன் அரசன் சபித்தான். தான் ஓட்டி வந்த எருதுகளுடன் நின்ற நிலையில் அந்த வியாபாரி கல்லாய்ச் சமைந்தான். இப்படிக் கல்லாக மாறிய வியாபாரியையும் எருதுகளையும் இன்றும் அந்த ஆற்று மடுக்கரையில் பார்க்கலாம்.

காப்பிரைட்: ஆந்திரப் பத்திரிகை (தெலுங்கு: 28-1-'48),
தம்பு செட்டி தெரு, சென்னை.

இந்த விஷயத்தை அந்தப் பிராந்தியத்தில் போலீஸ் ஸூபரிண்டெண்டாக உத்தியோகம் வகித்த ஜே. ஏ. ஸாண்டல் துரை எழுதியிருக்கிறார். கெஜட்டீரில் அது வெளியாகியிருக்கிறது.

அதே கெஜட்டீரில் பாலகொண்டா தாலுக்காவைச் சேர்ந்த விரிபுரம் கிராமத்தைப் பற்றிய விவகாரத்தில் கீழ்க்கண்ட தகவல்கள் காண்கின்றன.

விஜயநகரத்துக்கு வடக்கே இருபத்துநாலு மைல் தூரத்தில் பொந்தூர் என்னும் ரெயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. இந்த ஊர் மெல்லிய கதர் நூலுக்குப் பெயர் பெற்றது. பொந்தூருக்கு நாலு மைல் தூரத்தில் விரிபுரம் இருக்கிறது. விரி என்றால் லட்சுமி என்று அர்த்தம். இந்த விரிபுரத்தில் மிகப் பெரிய குளம் ஒன்று இருக்கிறது. இதைப் பற்றி அதிசயமான ஒரு கதை உண்டு.

விரிபுரத்தில் இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். ஒருத்தியின் பெயர் பெரிய கஞ்சம்மா. மற்றொருத்தியின் பெயர் சின்னக் கஞ்சம்மா. இருவரும் அழகிய தாசிகள். அவர்கள் தங்கள் இளமையில் பலரை வலை வீசிப் பிடித்து அளவில்லாமல் பணம் சேர்த்துவிட்டார்கள். பிறகு தங்கள் குலத்தொழில் நிந்திக்கத் தகுந்ததென்று உணர்ந்து பச்சாத்தாபம் அடைந்தார்கள்.

அந்தப் பிராந்தியம் முழுவதும் வானம் பார்த்த சீமைதான். ஒரு பெரிய குளம் வெட்டித் தண்ணீரைத் தேக்கினால், சுற்றுப் புறத்திலுள்ள பல ஆயிரம் ஏகர் நிலத்தை உழுதுபயிர் செய்ய வசதியாயிருக்குமென்று அவர்களுக்குத் தோன்றியது.

உடனே குளம் வெட்டினார்கள்; குளக்கரையை இரண்டு மைல் நீளம் உயர்த்தினார்கள். ஆனால் அதென்ன பாவமோ, ஒவ்வொரு வருஷமும் குளக்கரை உடைத்துக்கொள்ளும். தேக்கியிருந்த அத்தனை தண்ணீரும் வெளியே பெருகிவிடும். குளத்தில் ஒரு சொட்டு ஜலம் இருப்பதில்லை. குளம் மேடிட்டுவிடும். இதே வழக்கமாய்ப் போயிற்று. "ஊரார் பிழைக்கட்டும் என்ற தரும சிந்தையுடன் அவர்கள் குளம் வெட்டியும் அது பலிக்காமல் கெடுக்கும் இது யார் செய்யும் உபத்திரவம்?" என்று ஜனங்கள் அங்கலாய்த்தார்கள். அந்தச் சகோதரிகளும், "சாம்பலில் செய்த ஆகுதி போல் நாம் செய்த முயற்சியெல்லாம் வீணாகின்றனவே" என்று வருந்தினார்கள்.

அப்போது சில கிழவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொன்னார்கள். "இந்தக் குளம் நரபலி கேட்கிறது. நரபலி கொடுத்தாலொழிய இந்தச் சங்கடம் தீராது. உடைப்பில் இருவர் உட்கார்ந்துகொண்டு தங்கள் மீது மண்ணைக் கொட்டச் சொல்லித் தாங்கள் உயிருடன் சமாதியாகத் துணிய வேண்டும். இப்படி நரபலி கொடுத்தால் குளக்கரை உடைத்துக்கொள்ளாது; இறுகிவிடும். குளம் நீர் நிறைந்து பயிர் பச்சை செழிக்கும்; ஜனங்கள் சௌக்கியமுற்று வாழ்வார்கள்" என்றார்கள்.

இந்த உபாயத்தைக் கேட்ட சகோதரிகள் இருவரும் வெகு நேரம் யோசித்தார்கள். "குளம் பலி கேட்கிறதென்றால் துணிந்து உயிரைவிட யார் முன்வருவார்கள்? நாம் பிறரை ஏன் துன்புறுத்த வேண்டும்? கோபுரம் கட்டியபின், சிகரத்தை விட்டுவிடுவோமா? நாம் இவ்வளவு காலம் வாழ்ந்தோம்; நீர்க்குமிழிபோன்ற நம் வாழ்வை நம்பிக்

குளத்தை வற்றவிடுவதா? என்றைக்கும் சாவு உண்டு. படுக்கையில் நோயால் அழுகிச் சாவதைவிடப் பல ஜனங்களுக்கும் உபயோகமாகும்படி நம் இருவருடைய உயிரையுமே ஈசுவரார்ப்பணம் செய்வது மேல்'' என்று தீர்மானித்தார்கள்.

முகம் சுளிக்காமல் கல்யாணத்துக்குப் போகிறவர்களைப் போல், பகவந்நாம பஜனை செய்துகொண்டு இந்தச் சகோதரிகள் இருவரும் உடைப்பில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். மேளதாள சப்தம் வானை எட்டியது. நிச்சலமான மனத்துடன் அந்தச் சகோதரிகள் தங்கள் உயிரையே ஈசுவரார்ப்பணம் செய்தார்கள். அபிஷேகம் செய்வது போலக் கொத்தர்கள் மண்ணைக் கொட்டிக்கொண்டே இருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களின் உடல்களை மறைத்துக்கொண்டே வந்த மண் கடைசியில் அவர்கள் தலைகளையும் மூடிவிட்டது. கரைக் கட்டும் பூர்த்தியாயிற்று.

இந்தத் தியாகத்துக்கு முன் ஜடப் பொருளும் பலம் இழந்தது. அன்று முதல் இன்றுவரையில் குளம் உடைப்பெடுப்பதில்லை. கரும்பு போல் ருசியுள்ள தண்ணீர் சமுத்திரம் போல் குளத்திலே அலை மோதுகிறது. அதைக் கொண்டு பல்லாயிரம் உயிர்கள் வாழ்கின்றன.

இந்தச் சகோதரிகள் தங்களுடைய உன்னதத் தியாகத்தின் பலனாகப் புண்ணிய மூர்த்திகளாய்த் தேவதைகளாக மாறிவிட்டார்கள் என்று ஜனங்கள் நம்பினார்கள். உலகவாழ்வை நீத்த பின்பும் அந்த ஊர் ஜனங்களிடம் இந்தச் சகோதரிகளுக்கு மாறாத அன்பு இருந்தது. ஏழைகளாயிருப்பவர்களின் வீட்டில் ஏதாவது விசேஷம் நடந்தால், இந்தச் சகோதரிகளைப் பூஜித்து, 'எங்களுக்கு இன்ன நகை நட்டுகள், அல்லது இன்ன சாமான்கள் வேண்டும்' என்று திரிகரண சுத்தியாய் வேண்டிக்கொண்டால் அவர்களுக்கு உடனே அவை கிடைத்துவிடுமாம். கல்யாணம் நடந்து இரண்டு வாரங்கள் வரையில் அவற்றை வைத்துக்கொண்டிருந்துவிட்டுப் பக்தியுடனும் நன்றியுடனும் சகோதரிகளிடம் சமர்ப்பித்துவிட்டால், அவை மாயமாக மறைந்துவிடுமாம். உலகில் நாகரிகம் அதிகரிக்க அதிகரிக்க நம்பிக்கையும் பக்தியும் நசித்து வருகின்றன.

விரிபுரத்தில் ஒரு குயவன் இருந்தான். அவனுடைய பிள்ளைகளுக்குக் கல்யாணம். வேண்டிய நகை நட்டுகளை இந்தச் சகோதரிகளிடம் அவன் இரவல் வாங்கிக்கொண்டான். கல்யாணம் விமரிசையாக நடந்து முடிந்தது. அடுத்துவந்த பண்டிகைகளும் முடிந்தன.

நகைகள் குயவன் கையில் அகப்பட்டுக்கொண்டிருந்தன. அவனுக்கு அவற்றைத் திருப்பிக் கொடுக்க இஷ்டம் இல்லை. ''சந்தையில் அடித்ததற்குச் சாட்சி யார்? இந்த நகைகளை யாரோ எனக்குக் கொடுத்ததாகச் சாட்சி உண்டா? இவற்றை நான் ஏன் திருப்பிக் கொடுக்க வேண்டும்? நானே வைத்துக் கொள்கிறேன். நடப்பதைப் பார்ப்போம்'' என்று பேராசை தூண்ட நகைகளை அவன் தன்னிடமே வைத்துக்கொண்டான்.

இந்த ஈடற்ற துரோகச் செயலைக் கண்ட தேவதைகளுக்குக் கோபம் மூண்டது. குயவனுக்குச் சாபம் கொடுத்தார்கள். குயவன் கல்லாக மாறிவிட்டான். இதைக் கண்டு அந்த ஊரிலுள்ள மற்றக் குயவர்கள் எல்லோரும் நடுங்கிப் பக்கத்துக் கிராமங்களுக்கு ஓடிவிட்டார்கள். அன்றுமுதல் இந்த ஊரில் குயவர்கள் வசிப்பதே இல்லையாம்!

மந்திரத்தில் மாங்காய் விழாது என்றே நாம் நினைப்போம். ஆனால் அப்படியும் ஓர் அதிசயம் நடக்கிறதாம்.

மழையை நிறுத்தும் மந்திரம்

★

“நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. ‘லாமாக்களின் நடனத்தைப் பார்க்க வாருங்கள்’ என்று மகாராஜா எங்களை அழைத்தார். இந்த லாமா நடனம் வெட்ட வெளியில்தான் நடக்கும். ‘இப்படி மழை பெய்கிறதே! லாமாக்கள் அழகிய பகட்டான உடை அணிந்திருக்கிறார்களே; அது நனைந்து போய்விடாதா?’ என்று நான் மகாராஜாவைக் கேட்டேன். ‘அப்படி ஒன்றும் நேராது. லாமாக்கள் மந்திரத்தால் மழையைத் தடுத்துவிடுவார்கள்!’ என்று வெகு சாதாரணமாய்ச் சொன்னார் மகாராஜா. நாங்கள் மழைக்குப் பாதுகாப்பான ரெயின் கோட்டுகளைப் போட்டுக்கொண்டோம்; குடைகளையும் பிடித்துக்கொண்டோம். மழையில் நனையாமல் இருப்பதற்காக இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்துகொண்டு கிளம்பினோம். என்ன ஆச்சரியம்! லாமா நடனம் நடக்க வேண்டிய அரண்மனை முற்றத்தை நாங்கள் அடைந்தபோது, அங்கே மழையே பெய்யவில்லை! யாருக்கும் புரியாத ஏதோ ஓர் அபூர்வ சக்தியால் இந்த லாமாக்கள் பஞ்ச பூதங்களையே ஆட்டிவைக்கிறார்கள் என்று தோன்றுகிறது” என்று ‘வாய்ஸ் ஆப் மிஸ்டிக் இந்தியா’ (மர்ம சக்தி வாய்ந்த இந்தியாவின் குரல்) என்ற புஸ்தகத்தில் அலெஸ் எலிஜபெத் டிரேகாட் என்ற ஓர் ஆங்கிலப் பெண்மணி எழுதியிருக்கிறாள்.

விஞ்ஞானிகளுக்கு இந்தச் செய்தி பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், இது உண்மை என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதே மாதிரி சில அற்புதங்களை வங்காளத்திலும், மலையாளத்திலும் இன்னமும் சிலர் செய்துவருகிறார்கள். ஆனால் இவற்றின் ரகசியம் மட்டிலும் இன்று வரையில் விஞ்ஞானிகளுக்குப் புரியவில்லை.

லாமாக்கள் திபேத்தில் வாழும் புத்த குருமார்கள் மந்திரங்களை உச்சரித்துப் பெரிய புயல்களையும் ஆலங்கட்டி மழைகளையுங்கூட இவர்கள் நிறுத்திவிடுகிறார்கள்; அல்லது அவற்றின் உக்கிரத்தைக் குறைத்துவிடுகிறார்கள்.

மழையை நிறுத்தப் போகும் லாமா, தம் கையில் ஒரு கொம்பை எடுத்துச் செல்லுகிறார். அந்தக் கொம்பின் மேலே பல யந்திரங்கள் பொறித்திருக்கும். கொம்புக்குள் தங்கம், வெள்ளி, இரும்பு முதலிய பல உலோகப் பொடிகளும் கொஞ்சம் கடுகும் இருக்கும். நல்ல

காப்பிரைட்: அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் (ஆங்கிலம்: மார்ச் ’48), சேஷாத்திரிபுரம், பெங்களூர்.

ஆலங்கட்டி மழை பெய்யும்போது லாமா இந்தக் கொம்பை எடுத்துக் கொண்டு வெளியே போய் மழையில் நிற்கிறார். ஆலங்கட்டி எந்தப் புறமிருந்து வீசுகிறதோ அந்தப் புறமாகத் திரும்பி நின்றுகொண்டு கடுகைத் தூவிவிட்டு மந்திரத்தை முணுமுணுக்கிறார்.

லாமாக்களின் மந்திர சக்தியால் ஆலங்கட்டிகள் பெய்யாமல் அடியோடு நின்றுவிடுகின்றன; அல்லது சிதறுண்டு போகின்றன. இப்படிச் செய்வதால் பயிர் பச்சைகள் அழியாமல் மிஞ்சுகின்றன. தோட்டங்களையும் வயல்களையும் ஆலங்கட்டி மழை அழிக்காமல் காக்க, லாமாக்கள் இன்னோர் உபாயத்தையும் கையாளுகிறார்கள். அந்தத் தோட்டங்களை அல்லது வயல்களைச் சுற்றி நாலு மூலைகளிலும் மந்திரம் ஜபித்த துணிக் கொடிகளை நட்டுவைக்கிறார்கள். இப்படிப் பாதுகாக்கப்பெற்ற தோட்டங்களோ வயல்களோ மழையால் அழிவதில்லை.

லாமாக்கள் உபயோகிக்கும் இந்த மந்திரக் கொம்பின் நிறம் வெள்ளையும் கறுப்பும் கலந்திருக்கும். கொம்பின் நடுவிலே ஓர் ஆமை உருவம் பொறித்திருக்கும். அந்த ஆமையின் உடம்பில் ஒரு வட்டம் போட்டிருக்கும். அந்த வட்டத்தை ஒன்பது அறைகளாகப் பிரித்திருக்கிறார்கள். பின்வரும் எண்கள் இந்த ஒன்பது அறைகளிலும் பொறித்திருக்கும்: மேல்வரிசை மூன்று அறைகள் 4-9-2; நடுவரிசை மூன்று அறைகள் 3-5-7; கடைசி வரிசை மூன்று அறைகள் 8-1-6. ஆமையின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு தேள் உருவங்கள் பொறித்திருக்கும். தேள்களுக்கும் ஆமைக்கும் இடையிலே உள்ள பகுதிகளில் திபேத் மலை மேலுள்ள கோயில் உருவங்கள் பொறித்திருக்கும். கொம்பின் அகன்ற வாயருகே ஒரு பாம்பு கொம்பைச் சுற்றிக்கொண்டிருப்பது போல் பொறித்திருக்கும். கொம்பின் இந்த வாயை ஒரு பித்தளை மூடியால் மூடியிருப்பார்கள். இந்த மூடியின்மேல் குறுக்கும் நெடுக்குமாக இரண்டு வஜ்ராயுதங்கள் பொறித்திருக்கும். கொம்பின் நுனியில் உள்ள சிறு துவாரத்தை ஒரு தக்கை போட்டு அடைத்திருப்பார்கள். கொம்பை உபயோகிக்கும்போது இந்தத் தக்கையை எடுத்துவிடுவார்கள்.

ஆலங்கட்டிப் புயல் சில நாட்களில் ஏற்படக் கூடும் என்ற அறிகுறிகள் தென்பட்டால், உடனே லாமா மந்திர சாஸ்திரத்திலிருந்து மந்திரத்தைப் படிக்கத் தொடங்கிவிடுவார். படிக்குமுன் அவர் உபவாசம் இருக்கவேண்டும்; சதா கடவுள் தியானம் செய்ய வேண்டும்; ஸ்தோத்திரமும் செய்ய வேண்டும். இப்படி ஒன்றரை நாள் விரதம் இருந்த பிறகு, மந்திரத்தை லாமா கொம்பின் குறுகிய வாய் வழியே உச்சரித்து உருவேற்றுவார்.

இப்போது மழையை நிறுத்தும் சக்தி இந்தக் கொம்புக்கு வந்துவிடுகிறது. பெரு மழை வந்தவுடன் இந்தக் கொம்பை எடுத்துக்கொண்டு வெளியே சென்று நின்றுகொண்டு, மேலே குறிப்பிட்டபடி லாமா மந்திர உச்சாடனம் செய்து, பெரும் புயலை அடக்கிவிடுவார்.

ருஷ்யா என்றால் புதுமை, அங்கே யாவும் தலைகீழ் என்று சிலர் நினைக்கிறார்கள். அங்கே குடும்ப வாழ்க்கை எவ்வளவு அழகாய் நடக்கிறது பாருங்கள்.

ருஷ்யாவில் குடும்ப வாழ்க்கை

பத்மினி ஸேன்குப்த

ருஷ்யாவில் உள்ள குடும்ப நிலையைப்பற்றி நாம் என்ன என்னவோ கேள்விப்படுகிறோம். அங்கே குடும்பமென்பதே இல்லையென்றும், விவாகரத்து விநோதமாக இருக்குமென்றும், குடும்பப் பிணைப்பென்பது மருந்துக்கும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். நான் படித்தறிந்ததோ வேறுவிதமாக இருக்கிறது.

'முற்போக்கு உள்ளம் படைத்த ஒவ்வொரு பெண்மணியும் தாய்மையைத் தன் கடமையாகக் கருத வேண்டும்; நன்றாக வளர்ந்த குழந்தைகள் நாட்டின் சுபிட்சத்துக்கு இன்றியமையாதவர்கள்' என்று லெனின் சொல்லியிருக்கிறார். சென்ற முப்பது வருஷகாலமாக ஸோவியத் அரசாங்கத்தில் குடும்ப சம்பந்தமாகத் தோன்றிய சட்டங்கள் பல உண்டு. தாய்க்கும் குழந்தைக்கும் இயன்ற உதவியெல்லாம் செய்வதற்கும், குடும்பப் பாசத்தை அதிகப்படுத்துவதற்கும், குடும்ப வாழ்க்கைக்குச் சாதகமான நிலைமையை உண்டாக்குவதற்கும் அவை துணையாக இருக்கின்றன. கல்யாண விஷயத்தில் சிறுபிள்ளைத்தனமாகப் பொறுப்பற்ற மாதிரியில் நடப்பதையும், பெற்றோருக்குரிய கடமையினின்றும் வழுவுவதையும் அவை தடுக்கின்றன. ஸோவியத் ருஷ்யாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் முக்கியமான வித்தியாசம் ஒன்று உண்டு. ருஷ்யாவில் குடும்பமென்பது கணவன் மனைவிக்குள் அடங்கும் தனி விஷயமென்று அங்கே கருதுவதில்லை. அது சமுதாய சம்பந்தமான பெரிய கடமைகளோடு தொடர்புடையது. குடும்ப பலம் ராஜ்யத்துக்கே பலத்தைத் தருவது.

குடும்பச் சொத்து, குழந்தைகள் ஆகியவற்றில் கணவனுக்கும் மனைவிக்கும் சம உரிமை உண்டு. ஆரம்பம் முதலே பெண்கள் வளர்ச்சி பெற்று வருகிறார்கள். அதனால் தேக பலத்திலும் மனோ பலத்திலும் ஆண்களோடு பெண்களும் உடன் நின்று பல வகையிலும் வாழ்க்கைப் பொறுப்புக்களை வகிக்கும் திறமை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆண்களோடு சரிநிகர் சமானமாக நின்று வேலைசெய்யும் உரிமை அவர்களுக்கு உண்டு. ஊதியம், இளைப்பாறும் வசதி, ஓய்வு, இன்ஷ்யூரன்ஸ், கல்வி என்ற விஷயங்களில் சம உரிமை இருக்கிறது. பிரசவ காலத்துக்கு முன்னும் பின்னும் முழுச் சம்பளத்துடன் லீவு கிடைக்கும். பிரசவ ஆஸ்பத்திரிகளும், குழந்தை வளர்ப்பு இடங்களும், சிறுவர் பள்ளிக்கூடங்களும் அங்கே ஏராளமாக இருக்கின்றன.

காப்பிரைட்: ஓரியெண்ட் (ஆங்கிலம்: 8-2-'48),
93-ஏ, தரம்தோலா தெரு, கல்கத்தா.

கல்யாணமென்பது சொந்த சௌகரியத்துக்காகவோ லாபத்துக் காகவோ செய்துகொள்வதன்று. பரஸ்பர அன்பு, அபிமானம், நம் பிக்கை ஆகியவற்றால் அமைவது. பரிசம் போட்டுப் பெண்ணை விலைக்கு வாங்க முடியாது. பரஸ்பர சம்மதம் இருந்தால்தான் கல்யாணத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று சட் டம் வற்புறுத்துகிறது. பெற்றோர் களோ பெரியோர்களோ சம்மதிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

விவாகரத்தைப்பற்றி 'ஸோவியத் பெண்மணி' என்ற பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. மாஸ்கோ கோர்ட்டில் ஒருவன் விவாகரத்துக் காக மனுப் போட்டானும். அவனுக் கும் அவன் மனைவிக்கும் கல்யாண மாகி முப்பத்தைந்து வருஷங்களாகி விட்டன. நாலு குழந்தைகள். சில காலமாக அவளுக்கும் தனக்கும் சண்டை உண்டாகிறதாக அவன் காரணம் காட்டியிருந்தான். வழக்கை மனைவி எதிர்த்தாள். கண வன் கூறியது போதுமான காரண மல்லவென்று சொல்லி மனுவைக் கோர்ட்டார் தள்ளிவிட்டார்கள்.

குழந்தைகள் சந்தோஷமாக வாழ்வதற்கு ஏற்றபடி சட்டங்கள் ஸோவியத் அரசாங்கத்தில் இருக் கின்றன. குழந்தைகளின் நன்மைக் காகவே பெற்றோர்கள் தம் உரிமை யைப் பயன்படுத்த வேண்டுமென் பது அவர்கள் கொள்கை. குழந்தை களைச் சரிவரக் கவனிக்காவிட்டால் பெற்றோர்களை அரசாங்கம் தண்டிக் கும். அவ்வளவு தூரம் அரசாங்கம் குடும்பங்களைக் கவனித்து வருகிறது. பெற்றோர்கள் வேலை செய்ய முடி யாமற் போனாலும் முதுமையடைந் தாலும் தங்கள் பிள்ளைகளின் பொரு ளுதவியைப் பெறலாம். இதற்கு ஏற்றபடி சட்டம் இருக்கிறது.

குழந்தைகளுக்காக அரசாங்கம் பல நன்மைகளைச் செய்கிறது. குழந்தை வளர்ப்பு ஸ்தாபனங்கள், கிண்டர்கார்டன் பள்ளிக்கூடங்கள், விளையாட்டிடங்கள், கோடை வாச ஸ்தலங்கள், ஆரோக்கியசாலைகள் முதலியவற்றை அரசாங்கம் நடத்தி வருகிறது. குழந்தைகளின் கலைப் பண்பையும், சமுதாயப்பற்றையும், ஆரோக்கியத்தையும் வளர்க்கவும் அரசாங்கம் ஏராளமான பணம் செல வழிக்கிறது.

யுத்தத்தால் ருஷ்யக் குடும்பங்கள் கஷ்டத்துக்குள்ளாயின. ஆனாலும் அதனால் அவை குலையவில்லை. ஒட் டிப் பழகும் பற்றும் அன்பும் உடை யவையாய், நாட்டின் நன்மையில் ஈடுபட்டவையாய், அவை தேச பக்தியை நன்கு வெளிப்படுத்திவிட் டன. ஸோவியத் பெண்மணிகளின் தீரமும் தியாகமும் யுத்தத்தில் வெளியாயின. தம் நாட்டின் பாது காப்புக்குத் தம்மிடம் உள்ள எதை யும் அவர்கள் கொடுக்கத் தயங்கி னதே இல்லை.

பின்னணி சங்கீதம்

சினிமாவில் பின்னணி சங்கிதக் கருவிகளை, நம் கண்ணுக் குத் தெரியாமல் வைத்திருக்கிறார்கள். நியாயமே. ஆனால் அவற்றை நம் காது கேட்காமலும் வைத்திருப்பார்களானால், இன்னும் அதிக நியாயமாக இருக்கும்.

—ஹென்ரி ஸ்டிராஸ் (பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர்)

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச்சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள் பற்றியும் அருமையாய்ப் பதில் தருகிறார்.

கேள்வி: நிஜமாகச் சொல்லுங்கள்: எல்லாப் பெண்களும் இந்த உலகத்தைவிட்டு மறைந்து போனால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: நானுங்கூடத்தான் மறைந்து போவேன். வண்ண வண்ண அழகை விட்டுவிட்டு முரடர்களோடு வாழ யார்தாம் விரும்புவார்கள்?

* *

கே: சோஷலிஸம் என்பதற்கு இலக்கணம் சொல்வீர்களா?

ப: ஏழைகளின் பாரிசவாயு; பணக்காரர்களிடமுள்ள போர்வைகளைக் கேட்பது.

* *

கே: ஒரு பெண்ணின் கண்கள் எதைப் புலப்படுத்துகின்றன?

ப: ரஸ்தா விளக்குகளில் உள்ள சிவப்பும் பச்சையும் இந்தக் கண்களில் உண்டு; ஆனால் அவற்றிற்கு நேர்விரோதமாக இங்கே அர்த்தம் செய்துகொள்ள வேண்டும்.

* *

கே: நோயாளிக்கு ரத்தம் வழங்க வேண்டுமென்று உங்களைக் கேட்டால் கொடுப்பீர்களா?

ப: நான் ரத்தத்தைக் கொடுக்க மாட்டேன்; மூளையைத்தான் கொடுப்பேன். தங்கள் தங்களிடம் இருக்கும் சிறந்த பொருளையே நன்கொடையாக அளிப்பது ஜனங்களின் வழக்கம். வேறு நல்ல பொருள் தங்களிடம் இல்லாதவர்களே ரத்தத்தைக் கொடுப்பார்கள்.

* *

கே: நீங்கள் மறக்க முடியாத முகம் எது?

ப: என்னுடையதுதான். கண்ணாடி எத்தனை தரம் அதை எனக்குக் காட்டியிருக்கிறது தெரியுமா?

* *

கே: நம்முடைய படத் தொழிலின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: தகுதியில்லாதவர்களுக்குப் பிரமாத அதிருஷ்டம் அடிக்கும்.

* *

கே: இந்தியாவில் மனைவி தன் கணவனுடைய குற்றங்களையெல்லாம் பொறுக்கிறாளே; ஏன்?

ப: அவனைத் தெய்வமாகத் தொழ வேண்டுமென்று பாடம் படிக்கிறாள்; இது ஒரு காரணம். உலகத்தில் வீட்டைவிட்டு வெளியில் அவளுக்கு இடம் இல்லை; அது மற்றொரு காரணம்.

காப்பிரைட் : பிலிமிண்டியா (ஆங்கிலம்; ஜனவரி, '48), பம்பாய்.

கே: இந்தியாவில் சங்கீதப் பித்து என் அதிகமாக இருக்கிறது?

ப: வீட்டில் அழுகைச் சத்தம் கேட்கும் தொட்டில் ஏகப்பட்டதாக இருந்தால், காதுக்குப் பரிகாரம் வேண்டாமா?

* *

கே: ஸ்ரீமான் படேல், நீர் ஏன் ஒரு படத்தில் நடிக்கக் கூடாது?

ப: சரியாய்ப் போச்சு. என் முகத்தைப் பற்றி நான் கொஞ்சம் நல்ல அபிப்பிராயம் அல்லவா வைத்திருக்கிறேன்?

* *

கே: ஐ. நா. ஸ்தாபனத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

ப: முழு நம்பிக்கை உண்டு, அதன் தோல்வியில்.

* *

கே: கல்யாணமுடிச்சுப் பிரம்ம லோகத்திலே போடப்படுகிறது என்கிறார்களே; அப்படியானால் பூலோகத்தில் அதை நடத்துவதற்கு அர்த்தம் என்ன?

ப: பிரம்மலோகத்தில் நிச்சய தார்த்தம் ஆகிப் பூலோகத்தில் கல்யாணம் நடக்கிறது போலும்! இல்லாவிட்டால் புரோகிதர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும்!

* *

கே: ஆண் எப்போது நாணம் அடைகிறான்?

ப: முழுப்பூசினிக்காயைச் சோற்றில் மறைக்கிறானென்று வெளிப்படும்போது.

* *

கே: இந்த உலகத்தில் யாரிடமாவது உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

ப: உண்டு. என்னிடம் கொஞ்சம்; பாக்கியெல்லாம் கடவுளிடம்.

கே: இந்தக் காலத்து யூனிவர்சிடிப் பட்டங்களால் என்ன பயன்?

ப: அதைப் பணமாக்கும் வழி தெரிந்தால் மிகவும் பயனுண்டு. அதைப் பணமாக்கும் ரகசியத்தைத்தான் காலேஜ்களிலே சொல்லிக் கொடுப்பதில்லை.

* *

கே: வக்கீல்கள் அவசியமா?

ப: அவசியந்தான்! குற்றத்தைப் பெருமைப்படுத்தவும் நிலைக்கச் செய்யவும் வேண்டாமா?

* *

கே: ஆண் வாத்தியாரும் மாணவியும் நெருங்கிப் பழகுவது அபாயமா?

ப: கல்யாணம் செய்து கொள்வதாக இருந்தால் அபாயமே வராது.

* *

கே: வருங்காலம் நமக்குத் தெரியாமல் மறைந்திருக்கிறதே, இது சரிதானா?

ப: மறைந்திருப்பதைத் தேடும் நீண்ட போராட்டந்தான் வாழ்க்கை. மனிதனின் முடிவான இலக்காகிய கடவுள்கூட முழுதும் மறைந்த பொருளாக இருந்து கொண்டு தன்னை மனிதன் எப்போதும் தேடிக்கொண்டிருக்கச் செய்கிறார். இந்தத் திரையை நீக்கிவிட்டால் வருங்காலம் என்ற ஒன்று இராது; மனிதனுக்கு வாழ்க்கையும் இராது.

* *

கே: குழந்தைகளால் உங்களுக்கு உபத்திரவம் உண்டாகிறதா?

ப: அவை சின்னக் குழந்தைகளாக இருக்கும்வரையில் ஒன்றும் இல்லை; பொறுப்பற்ற போக்கிரிகளாக மாறும்போதுதான் உபத்திரவம்.

பாதுஷாவின் தந்திரம்

எம். எஸ். கே.

> 'போனார்', 'இருக்கிறார்', 'போனார்', 'இருக்கிறார்' என்று ருஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலினைப்பற்றி ஓயாமல் வதந்திகளும் செய்திகளும் வந்து கொண்டேயிருக்கின்றன. ஆகவே, இந்தக் கதையை வெளியிட்டுள்ள 'ஸ்வதந்த்ரா' ஆசிரியர், "கம்யூனிஸ்டுகளின் விரோதிகளுடைய பத்திரிகைகள் ஏமாற்றப்படுகின்றனவா, அல்லது தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்கின்றனவா?" என்று கேட்கிறார்.

வெகு காலத்துக்கு முன்னே கீழ்நாடுகளில் ஒன்றில் லோம்டீகான் என்று ஒரு பாதுஷா இருந்தான். அவன் மகா சாமர்த்தியசாலி; தைரியசாலி. ஒவ்வொரு வருஷமும் புதிய புதிய நாடுகளை அவன் பிடித்தான்; கடைசியில் அவனுடைய ராஜ்யம் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரையில் பரவி விட்டது.

அவனுடைய ஆட்சிக்கு உட்பட்ட அரசர்கள் அவனை வெறுத்தார்கள்; வேறு பலர் அவனிடத்தில் நம்பிக்கை வைக்கவில்லை.

நாளடைவில் லோம்டீகானுக்குக் கிழப்பருவம் வந்தது; மயிர் நரைத்தது. அப்போது அவனுக்கு ஒரு பயம் தோன்றியது. "என் பிள்ளை என்னைப்போல் ஆணை செலுத்த முடியாதவன். நான் கண்ணை மூடின மறு கணமே அந்தச் 'சந்தோஷச்' செய்தி வெகு வேகமாக நாலு திசையிலும் பரவும். எனக்கு உட்பட்ட ஸம்ஸ்தானங்கள் சிதைந்து போகும். இதை எப்படித் தடுப்பது?" என்று ராத்திரி யெல்லாம் தூங்காமல் சிந்தித்தான்.

அவனுடைய முதல் மந்திரி என்ன என்னவோ உபாயங்களைச் சொன்னான். ஒன்றும் பாதுஷாவுக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் பாதுஷாவே ஒரு வழி கண்டுபிடித்தான்.

தன்னுடைய ஒற்றர்களுக்குள் மகா கெட்டிக்காரன் ஒருவனை அழைத்தான். அவனைக் கீழ்க்கோடி ஸம்ஸ்தானத்துக்கு அனுப்பி, "ஷாஹின்-ஷா கடுமையான நோய்வாய்ப் பட்டிருக்கிறார். அநேகமாகச் செத்தே போவார்" என்ற வதந்தியைப் பரப்பும்படி செய்தான். அந்த ஸம்ஸ்தானத்து அதிபதி இதைக் கேட்டுக் கலகம் செய்ய ஏற்பாடு செய்தான். கலகம் கிளம்புவதற்குச் சிறிது முன்பே லோம்டீகான் திடீரென்று ஸம்ஸ்தானத்துக்கு வந்து அதிபதியோடு சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தான்; பலவிதமாக ஸம்ஸ்தானத் தலைவனுக்குச் சிறப்புச் செய்தான். வேடிக்கைகளும் பரிசளிப்பும் நடந்தன. ஏக அமர்க்களப்பட்டது. புகழும் பாராட்டும் விசுவாசமும் அமோகமாக உண்டாகிவிட்டன. பாதுஷா மீண்டும் தலைநகரத்துக்கு வந்துவிட்டான்.

மேற்கு ஸம்ஸ்தானம் ஒன்றில்

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 31—1—48) 156, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை, சென்னை.

ரகசியமாகப் படைகளைக் கொண்டு போய் நிறுத்தினான். அதற்கும் மேற்கே உள்ள மாகாணத்தில், பாதுஷா செத்துப் போய்விட்டார் என்ற வதந்தியைக் கிளப்பிவிட ஏற்பாடு செய்தான். அங்கிருந்த அதிகாரி படைகளுடன் கலகம் செய்யக் கிளம்பினான். சமயம் பார்த்து அவனை அடக்கிவிட்டான் பாதுஷா.

இப்படிப் பல இடங்களில் பல சமயங்களில் செய்த பிறகு அவனுக்கே அலுப்புத் தட்டியது. வேறொரு யோசனை தோன்றியது.

அடிக்கடி பாதுஷாவுக்கு மயக்கம் உண்டாகும் என்பது யாரும் அறிந்த விஷயம். ஒரு நாள் திடீரென்று நெடுந் தூரத்திலுள்ள சீனத்திலிருந்து ஒரு ஹகீம் வந்திருப்பதாக அங்கங்கே பேசிக்கொண்டார்கள். மயக்கத்தைப் போக்குவதில் அவர் நிபுணராம். பாதுஷாவுக்கு வைத்தியம் செய்யத்தான் அவர் வந்திருக்கிறார் என்ற வதந்தி கிளம்பியது. பிறகு அவர் தம் உறவினரைப் பார்க்கவே வந்திருக்கிறார் என்று சொல்லிக்கொண்டார்கள். மிகவும் உயர்ந்த பதவியிலுள்ளவருக்கு வைத்தியம் செய்யவே தாம் வந்திருப்பதாகவும், அவர் இன்னாரென்று தமக்கே தெரியாதென்றும் ஹகீம் சொன்னதாக ஒரு செய்தி எழுந்தது. "என் பெயரையே கொண்ட வேறொருவர் வந்திருக்கிறார்; நான் அல்ல" என்று ஹகீம் சொன்னதாக மற்றொரு சமாசாரமும் பரவியது. அரண்மனையில் குழப்பம் நிலவுகிறதென்று சிலர் சொன்னார்கள். மருந்து கொடுக்கவேண்டிய நிலை மீறிவிட்டதாகையால் ஹகீம் ஊருக்குப் போய்விட்டாரென்று மற்றும் சிலர் காதோடு காதாய்ச் சொல்லிக் கொண்டார்கள். இன்னதுதான் உண்மை என்று தெரியாமல் ஒரே கொந்தளிப்பாக இருந்தது.

ஆனால் ஒரு நாள் நரைத்த தாடியுடன் ஷாஹின்-ஷா குதிரைமேல் ஆரோகணம் செய்து ஒரு மாகாணத்துக்கு வந்து தோன்றினான். மறுநாள் நெடுந்தூரத்திலுள்ள மற்றொரு மாகாணத்துக்குப் போனான். தேசத்தின் வேறொரு மூலையிலுள்ள மாகாணத்துக்கு ஒரு நாள் சென்றான். இங்கே பள்ளிக்கூடம் வைத்தான்; அங்கே மசூதிக்கு நிலம் திறந்துவிட்டான்; இங்கே ஒருவனைத் தண்டித்தான். இவற்றை யெல்லாம் கண்டு கேட்ட ஜனங்களுக்கு, முன்னே கேட்ட வதந்திகளுக்கு என்ன அர்த்தமென்று புரியவில்லை.

இந்த மாதிரி உபாயங்கள் பல ஆண்டுகள் நடந்துகொண்டே வந்தன. ஒரு நாள் உண்மையாகவே பாதுஷா இறந்துபோனான்; தான் இறக்குந்தறுவாயில் "உன்னத பதவி வகிப்பவர்கள் மரணத்துக்கு முன்பே பல முறை சாகடிக்கப்படுவார்கள்" என்று அவன் சொன்னான்.

மரணச் செய்தி வந்தபோது பொதுஜனங்கள் அதைக் காதிலே வாங்கிக்கொள்ளவில்லை; எப்போதும்போலத் தங்கள் காரியத்தைக் கவனித்தார்கள். இதனால் பாதுஷாவின் குமாரனுக்குப் போதிய சாவகாசமும் அநுகூலமும் கிடைத்தன. கலகம் செய்யக் கிளம்பும் சூழ்ச்சிக்காரர்களை அடக்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டான்.

•••••••○○•••••

மனைவி விதவையாய்ப் போனவனுக்கு, இந்த உலகத்தால் என்ன பயன்?

சிலருடைய நடவடிக்கைகள் விநோதமாய் இருக்கின்றன. அவை சுபாவமா? மனநோயா?

மனநோயின் குறிகள்

எம். எஸ். நாராயண சாஸ்திரி

மனநோய் என்றால் அதை 'ஹிஸ்டிரியா' என்கிறோம். முற்றினால் பைத்தியம் என்கிறோம். மனநோய் ஏற்படுவது நரம்புத் தளர்ச்சியால்தான். எந்த நோய்க்கும் மருந்து உண்டு. மனநோய்க்கு மட்டும் எந்த மருந்தும் பயன் படாது. மனநோயை நாம் முதலிலேயே கண்டுபிடித்து, தகுந்த வைத்தியம் செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் நாம் மிகவும் அசிரத்தையாய் இருந்து விடுகிறோம். இங்கே பாருங்கள்:

நஞ்சப்பன், நஞ்சப்பன் என்று எங்கள் கிராமத்தில் ஒருவர் இருக்கிறார். சுமார் நாற்பது வயது இருக்கும். அவருக்கு எடுத்ததெல்லாம் சந்தேகம், பயம். ஒரு கடிதம் எழுதித் தபாலில் போட்டார் என்றால், உடனே ஒரு சந்தேகம் வந்துவிடும். 'போட்டேனா, போடவில்லையோ?' என்று பத்துத் தடவை சந்தேகப்பட்டு, பத்துத் தடவை சந்தேக நிவர்த்தி செய்து கொள்வார். தாமே சென்றுதான் தபாலில் போட்டிருப்பார். இருந்தாலும், அதைத் தபாற் பெட்டியிலிருந்து தபாற்காரன் எடுத்துக் கொண்டு போகும் வரையில் இவருக்கு நிம்மதி இருக்காது. வீட்டுக் கதவையோ, பெட்டி பேழையையோ பூட்டினாலும் சரிதான், இரண்டு மூன்று தடவை திரும்பத் திரும்ப வந்து இழுத்துப் பார்த்துக்கொண்டே இருப்பார். கையில் காசை எடுத்தால் எண்ணி எண்ணிக் குறித்து வைத்துக்கொள்வார். பணத்தை ஒருவருக்குக் கொடுக்கும் பொழுது, திரும்பவும் ஒரு முறை கையிலே வாங்கி எண்ணிப் பார்ப்பார்.

எனக்கு மற்றொரு நண்பர் உண்டு. அவர் அதிகமாகப் பேசமாட்டார். ஆனால், நிறையப் பொடி போடுவார். யாரையாவது கண்டால் உடனே அவருடன் பேச ஆரம்பித்துவிடுவார். "என் சார், பாருங்கோ இந்தப் பயலே! இதோ இருக்கு கடை; அங்கே போய்க் கொஞ்சம் பொடி வாங்கிண்டு வாடான்னா... என்ன நான் சொல்றது புரியல்லே உங்களுக்கு? என்னைப் பைத்தியம்னு நினச்சுண்டு இருக்கான்" என்று சொல்லாமல் இருக்கமாட்டார். பேச்சில் இதைத் தவிர வேறு ஒன்றுமே வித்தியாசம் இருக்காது. பொடியை மட்டும் மூச்சுக்கு மூச்சு இழுத்துக்கொண்டே இருப்பார். முதலில் இதை எல்லாம் அவருடைய சுபாவம், சுபாவம் என்றார்கள் எல்லோரும். ஆனால் அவர் இப்படிப் பேச ஆரம்பித்த ஆறு மாத காலத்திலேயே அவருடைய வியாதி முண்டிவிட்டது.

காப்பிரைட்: துண்டுப் பிரசுரம் (கன்னடம்): அடல்ட் எஜுகேஷன் கவுன்ஸில், ஸரஸ்வதிபுரம், மைசூர்.

சுந்தரம்மாள் என்று ஒரு பெண். அவளுக்கு வயது இருபதுக்குள் இருக்கும். கல்யாணம் ஆகிக் குடித்தனம் செய்பவள். சகஜமாகப் பேசுவாள், பழகுவாள். ஆனல் அவளிடம் ஒரு விசேஷம் உண்டு. வீட்டில் உள்ள கட்டிலோ, நாற்காலியோ எதையும் அது அது இருக்கும் இடத்தை விட்டுக் கணத்துக்குக் கணம் சிறிது நகர்த்திப் போட்டால்தான், அவளுக்குச் சரிப்பட்டு வரும். தான் வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தால்கூட, அவற்றை அவள் தொட்டுவிட்டாவதுதான் போவாள். தொட்டிலிலே குழந்தை இருக்கிறதோ இல்லேயோ, தொட்டிலேப் போக வர ஆட்டிக்கொண்டிருப்பாள்.

இவற்றைப் பார்க்கும் நாம், அவர்களுக்கு என்னவோ இப்படி ஒரு வழக்கம், சுபாவம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிரேம். இது தவறு. இவை எல்லாம் ஒரு வகைச் சேஷ்டைகள். நரம்புகளில் தளர்ச்சி ஏற்படுவதாலேயே இந்த விஷமங்களும் தடுமாற்றங்களும் உண்டாகின்றன. சிலருடைய சேஷ்டைகள் ஒரே விதமாய் இருக்கும். சிலருடைய சேஷ்டைகள் நாளுக்கு நாள் அதிகமாகிவிடும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது.

மரியன் என்ற குடியானவனுடைய மனைவி இறந்து போய்விட்டாள். மாது என்ற பெண்ணே அவன் இரண்டாம் தாரமாகக் கல்யாணம் கட்டிக்கொண்டான். மரியனுடைய கிழத்தாய் இவர்களுடன் வசித்து வந்தாள். வீட்டில் எப்போதும் மாடும் கன்றுமாக ஓயாப்பாடு, ஒழியாப் பாடு. மாதுவின் உடம்பு நாளுக்கு நாள் இளேத்துப் பலம் குன்றி அடிக்கடி ஜுரம் வர ஆரம்பித்தது. வீட்டிலிருந்த மரியன் கொஞ்சம் கவலேப்பட்டான். ஏதாவது வைத்தியம் செய்ய வேண்டுமென்று எண்ணினன். "ஐயையோ! இது மூத்தாளுக்குப் பொங்கல் இடாத தோஷம். அவள் வந்து பிடித்து ஆட்டுகிருள். இதற்கு வைத்தியம் கிடையாதுடா! பொங்கல் இடவேண்டும். புடைவை வாங்க வேண்டும்" என்று ஒரே அடியாய்ச் சாதித்தாள் மரியனின் தாய். மரியனுக்கும் சந்தேகம் வந்து விட்டது. பொங்கல் படைத்தான்; எல்லாம் செய்தான். வருவாரும் போவாரும் இதையே சொல்லிச் சொல்லி, மாதுவின் உள்ளத்தில் இந்தத் திகில் பதிந்துவிட்டது. அவளுக்குத் தன் புருஷனுடைய மூத்தாளேப்பற்றியே நினேப்பு, அதே கனவு; ஒரே பயம். இந்த நிலேமையில் மாது கர்ப்பிணியானுள். நாட்கள் ஓட ஓட, மாதுவின் உடம்பு மெலிந்து நரம்புத் தளர்ச்சி அதிகமாகிவிட்டது. தன் தேக வலிவு உள்ள வரையிலும் தாங்கினுள். பிறகு சத்தம் போடக் கிளம்பிவிட்டாள். "ஐயோ, மூத்தாள் தோஷம்! பேய்!" என்று மரியனின் தாய் கத்த, மரியனும் பயந்து சத்தம் போட, கடைசியில் மூத்தாள் போன வழியே மாதுவும் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

எங்கேயோ ஒரு வீட்டுக்குச் சென்றிருந்த சமயம் ஒரு சிறுவனேச் சந்தித்தேன். அவனுக்கு வயது ஒன்பது இருக்கும். நான் பலகாரம் சாப்பிடும்போது அவன் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். எனக்கு வைத்திருந்த ஜிலேபிகளில் ஒன்றை அவனுக்குக் கொடுத்தேன். அதைப் பார்த்தவுடன் சாதாரணமாய் இருந்த அவனுடைய கண்களில் ஒரு விதப் பயம் தென்பட்டது; அவன் உடல் குலுங்கியது.

நான் எவ்வளவு வற்புறுத்தினாலும் ஜிலேபியை "வேண்டாம்; வேண்டாம்" என்று அவன் மறுத்தான். இது எனக்குச் சாதாரணமாகத் தோன்றவில்லை. இவனிடம் ஏதோ மனக் கோளாறு இருக்க வேண்டுமென்றே தோன்றியது. மிகவும் நயந்து நல்ல வார்த்தைகள் சொல்லி அவனைக் கேட்டபோதுதான் உண்மை வெளியாயிற்று. "பத்து வயசு வரைக்கும் எனக்கு ரொம்பவும் போராத காலம். யாராவது விஷம் வெச்சு என்னைக் கொன்னுடுவாளாம். நான் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்னு சொன்னாராம் ஜோஸ்யர். செத்துப் போயிடுவேன்னு சொன்னா எங்கம்மா" என்றான் சிறுவன். நான் தங்கியிருந்த வீட்டின் அடுத்த வீட்டுப் பையன் அவன். அடுத்த வருஷம் மறுபடியும் நான் சென்றபோது அந்தச் சிறுவனைக் காணவில்லை. திடீரென்று ஜுரம் வந்து அவன் மாண்டு போய்விட்டான் என்றார்கள்.

சிலர் ஏதாவது ஒரு பெரிய குற்றத்தைக் குற்றம் என்று தெரிந்துகொண்டே செய்துவிடுகிறார்கள். அவர்களுக்கு அதைச் செய்யாமல் இருக்கச் சம்மதமில்லை; செய்தாலும் குற்றம் என்று தெரியும். அப்படிச் செய்யும்போது அவர்களிடம் அதற்குத் தகுந்த வலிவும் உறுதியும் இருந்தால், அவர்கள் ஜயித்துக்கொண்டு விடுகிறார்கள். வலிவு குறைந்தாலோ வந்தது விபரீதம்.

முத்தண்ணன் என்பவர் ஒரு கிழவர். அவருக்கு ஆசை அதிகம். சிறு பிராயத்தில் குடும்பம் பாகமாகாததால் சொத்து முழுவதையும் இவரே அபகரித்துத் தம் வசமே சேர்த்துக்கொண்டுவிட்டார். கோர்ட்டிலே கேஸ் நடந்தது. பயனில்லை. அதுமுதல் அவருக்கும் மற்ற அண்ணன் தம்பிமாருக்கும் மனஸ்தாபம் உண்டாகிப் பேச்சு வார்த்தை இல்லாமல் போய்விட்டது. இந்த அநியாயமெல்லாம் அவருடைய மனத்தை உறுத்திக்கொண்டிருந்த காரணமோ என்னவோ, அவரது உடல் சற்று மெலிந்ததும், ஒருவிதச் சேஷ்டை அவரிடம் ஆரம்பித்துவிட்டது. வீட்டில் எங்கேயும் ஒரே ஒரு பேனாக் கத்தியையும் வைக்கவிடமாட்டார். சமையலறையில் அரிவாள்மணை இருந்தாலும் எடுத்துக்கொண்டு போய் ஜாக்கிரதையாகப் பீரோவில் வைத்துப் பூட்டிவிடுவார். ஏன் என்று யாராவது கேட்டால், "கத்தி இருந்தா அந்தப் பயல்களுக்கு அகப்பட்டுவிடும்; என்னைக் கொன்னுடுவானுங்க" என்பார் கிழவர். தம்மைக் காண யார் வந்தாலும் வந்தவர் கண்ணில் படாமல் உள்ளே சென்று மறைந்துகொள்வார். தீர்த்தம் சாப்பிட்டாலுங்கூட அதை முதலில் மோந்து மோந்து பார்ப்பார்.

மற்றொருத்தியின் அவஸ்தையைக் கேளுங்கள். அன்னபூரணி என்ற ஒரு பெண் சிறு வயதிலேயே கல்யாணமாகி விதவையும் ஆகிவிட்டாள். வேறு வினை வேண்டாம். வயசுச் சிறுமிக்கு என்ன ஆசைதான் இருக்காது? மனத்தில் கூடத் தப்பு நினைக்கக் கூடாது என்று தெரிந்திருந்தாலும், காதல், கற்பனை, இன்பவாழ்க்கை எல்லா இயற்கை இச்சைகளும் பிற்காலத்திலே அவளிடம் வளர்ந்தன. அவற்றால் விளையும் இன்பமோ துன்பமோ எல்லாவற்றையும் அநுபவிக்க அவள் சித்தமாய் இருந்தாள்; அநுபவித்தாள். சீக்கிரத்திலேயே இது எல்லோருக்கும் தெரிந்த ரகசியமாகிவிடும் போல் வளர்ந்துவிட்டபோது, தான் செய்தது எல்லாம் தவறு என்று அவள் எண்ண

ஆரம்பித்தாள். பயம் வந்துவிட்டது. மானத்தை விடவும் முடியவில்லை; வைத்துக் கொள்ளவும் முடியவில்லை. தான் நல்லவளாக வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. திடீரென்று தடுமாற்றம். யார் எங்கே வரட்டும், போகட்டும்; "ஐயோ! இவன் என்னை முறைத்து முறைத்துப் பார்க்கிறானே; இவனை விரட்டேன். பயமாய் இருக்கிறதே!" என்பாள். எந்த ஆண் பிள்ளையையும் அவள் காணச் சகிக்க மாட்டாள். இப்படி அட்டகாசம் செய்யத் தொடங்கிவிட்டாள்.

மனநோய் இவ்விதம் பல காரணங்களால் திடீர் திடீர் என்று ஏற்படுகிறது. முக்கியமாக நம் தேகம் வலிவு குன்ற இடம் கொடுக்கக் கூடாது. மக்கள் மன நிம்மதி இல்லாமல், இயற்கைக்கு விரோதமான காரியங்களைச் செய்வதையோ, தகாத சேஷ்டைகளைச் செய்வதையோ, நாம் அலட்சியம் செய்யக் கூடாது. உடனே கவனித்துச் சிகிச்சை செய்வோமானால் மன நோய் முற்றுவதற்கு முன் அதைக் குணமாக்கும் வழிகளைத் தேடலாம்.

பொறுமைக்கு எல்லை

திருவள்ளுவர் மிகவும் பொறுமையுள்ளவரென்று சிலர் பேசிக்கொண்டார்கள். அதைக் கேட்ட ஒருவன், "நான் அவரைச் சோதித்துப் பார்த்துவிடுகிறேன்" என்று சொல்லி, அந்தப் புலவரிடம் சென்றான். அப்பொழுது அவர் நெசவுவேலை முடிந்து உணவுண்டு இளைப்பாறிக்கொண்டிருந்தார். அவருக்கு அருகில் சில புதிய துணிகள் இருந்தன.

போன பேர்வழி அந்தத் துணிகளில் ஒன்றை எடுத்து, "இது என்ன விலை?" என்று கேட்டான். வள்ளுவர் அதன் விலையைச் சொன்னார். அவன் உடனே முரட்டுத்தனமாக அதை இரண்டாய்க் கிழித்து ஒரு துண்டை எடுத்துக் காட்டி, "இதன் விலை என்ன?" என்று கேட்டான். புலவர் சிறிதும் கோபம் அடையாமல் முன்னே சொன்ன விலையில் பாதியைச் சொன்னார். அவன் அதோடு விடவில்லை. மறுபடியும் கையில் இருந்ததை இரண்டாகக் கிழித்து அந்தத் துண்டின் விலையைக் கேட்டான். அப்போதும் பொறுமையோடு அதன் விலையைச் சொன்னார் வள்ளுவர். மேலும் இரண்டு தடவை இப்படியே கிழித்து ஒரு கோவணத்தளவுக்குத் துணி வரும்படி செய்து கேள்விகளைக் கேட்டான். அவர் விடைசொல்லி வந்தார். அதற்குமேலும் அவன் கிழித்து, "இதன் விலை என்ன?" என்று கேட்டபோது பளீர் என்று அவன் கன்னத்தில் ஓர் அறைவிட்டு, "இதுதான்" என்றார். அறைபட்ட வலியைக்கூடப் பார்க்காமல் அவன், "உங்களுக்குக் கோபம் வரவே வராது; பொறுமையே உருவம் நீங்கள் என்கிறார்களே?" என்றான்.

"அதற்கும் ஓர் எல்லை உண்டு" என்று வள்ளுவர் கூறவே அவன் உண்மையை உணர்ந்துகொண்டு போய்விட்டான்.

கலை இலக்கியங்களின் ஆதாரம் எது ?
கண்டபடி அயலாரை நகல் செய்வது சரியா ?

கலைகளின் மூலதர்மம்

வடக்கும்கூர் ராஜராஜ வர்மா

கேரளத்தில் சமீபகாலம்வரையில் வாழ்ந்திருந்த கவிகள் தம் நூல்களின் மூலமாகத் தேசத்தின் பண்பாட்டை ஆதரித்து வளர்த்து வந்தார்கள். அவர்களுடைய நூல்களை ஆராய்ச்சி முறையில் அலசிப் பார்த்தால், ஒரு வேளை பல குற்றங்கள் அவற்றில் இருக்கலாம். ஆனாலும் பாரதமக்கள் அல்லது மலையாளிகளின் பண்பாட்டுக்கு இழுக்கான எதையும் அந்த நூல்களில் சிறிதும் காண முடியாது. ஆகவே, அந்த நூல்கள் எந்தக் காலத்திலும் போற்றத்தக்க பெருமை வாய்ந்திருக்கின்றன.

இன்று நம் தாய் மொழியில் காணப்படும் பல நவீன இலக்கியங்களை முற்றும் மேல்நாட்டு இலக்கியங்களின் குழந்தைகளே என்று கூறலாம். பிரான்சும் ருஷ்யாவும் போன்ற நாடுகளிலேயே அவை பிறந்திருக்க வேண்டும். அவற்றில் பல நல்ல அம்சங்கள் இருக்கலாம். அந்தத் தேசத்து மக்களுக்கு அவை நன்மை பயக்கும் என்பதையும் நாம் ஒப்புக்கொள்வோம். ஆனால் ரிஷிகள் பிறந்த பாரத தேசத்தின் மண்ணில் அவற்றை அப்படியே கொணர்ந்து ஊன்றி வளர்ப்பது வீணாகவே முடியும்.

இப்போது நம் தாய்மொழியில் ஒவ்வொரு கணமும் வளர்ந்துவரும் சிறுகதைகள், நாடகங்கள், தனிப் பாடல்கள் முதலிய இலக்கியங்களைப் பார்த்தால், 'நமது ஒழுக்கத்துக்கு இவ்வளவு சிதைவு ஏற்பட்டுவிட்டதா?' என்று யாரும் அஞ்சவேண்டியிருக்கிறது. நம் எழுத்தாளர்கள் இப்படிச் செய்து வந்தால், வருங்கால மக்களுக்குப் பெருந் தீங்கு புரிந்தவர் ஆவார்கள். நம்மைப் பின்பற்றி வந்த சந்ததிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ள வருங்கால மக்கள் வெட்கமடைவார்கள்.

முன்னேற்றமாகக் கருதப்படும் இலக்கியங்களில், அழுகி ஆபாசமடைந்த ஒரு 'காதல்' தலைதூக்கி நிற்பதைக் காணலாம். நம் அலங்கார சாஸ்திரங்கள் வெறுத்து ஒதுக்கிய ரசாபாசங்களே இன்றைய இலக்கியங்களுக்கு அடிப்படையாயிருக்கின்றன. ஆசிரியன் மாணவி, சகோதரன் சகோதரி, எஜமானன் வேலைக்காரி, எஜமானி வேலைக்காரன் என்ற வேற்றுமைகளை நாம் இன்றைக் காதல் இலக்கியங்களில் காண முடியாது. தகுதியற்ற நாயகனைப் படைத்து, அவன் வழிதவறி நடந்து நஞ்சை உண்டு அல்லது தூக்கிட்டுக் கொண்டு சாகும்படி செய்வதே நவீன எழுத்தாளர்களின் முறையாக இருந்துவருகிறது. ஏழைகளைப் பசிப் பிணிக்கு ஆளாக்கிப் பரலோகத்

காப்பிரைட்: கைரளி (மலையாளம்: மார்கழி), திருச்சூர்.

துக்கு அனுப்பவும் இவர்கள் பின் வாங்குவதில்லை. இப்படிப்பட்ட இலக்கியங்கள், அரக்கர்களைப்போல் எத்தனை வாலிபர்களையும் ஏழைகளை யும் தெடுத்துப் படுகுழியில் ஆழ்த்தி யிருக்கின்றன என்பதைக் கணக்கிடு வது கஷ்டம்.

மேல்நாடுகளில் இப்படிப்பட்ட இலக்கியங்களால் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கலாம். அதற்காக நம் நாட்டிலும் இவற்றை வளர்க்க முய லுவது அடாத காரியமாகும். மேல் நாடுகளிலும் நம் நாட்டிலும் பண் பாடுகள் வேறுபட்டிருப்பதே இதன் காரணம். ஒன்று சுத்த தர்மத்தை இலக்காகக் கொண்டது; மற்றது இயற்கைச் சுகத்தை அடிப்படை யாகக் கொண்டது. ஒன்று ஆத்ம தத்துவத்தை லட்சியமாகக் கொண் டது; மற்றது அரசியலை ஆதாரமாக உடையது. நிலைமை இதுவாயிருக்க, அதற்கும் இதற்கும் ஒற்றுமை ஏற் படுவது முடியாத காரியம். அதற் காக முயல்வதும் வீணே.

நம் நாட்டினருக்கு ஆத்மிகமான புராதன ஸம்ஸ்காரம் தொன்று தொட்டு வழிவழி வந்திருக்கிறது. அந்த ஸம்ஸ்காரத்தை நிலைநாட்டயே நாம் இலக்கியத்தையும் பிற கலைகளை யும் படைக்கவேண்டும். வால்மீகியும் வியாசரும் காளிதாசனும் சங்கரரும் அவதரித்த நாட்டில் பிறந்ததற்கு, ஒவ்வோர் இந்தியனும் மலையாளி யும் பெருமை கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட அதிருஷ்டம் எளிதில் கிடைப்பதல்ல. பரிசுத்த மனம் கொண்ட புண்ணிய புருஷ ரையே ஆசிரியராக ஏற்கவேண்டும். அவரையே உதாரணமாகக் கொண்டு, அவரிடம் காணும் பண் பாடுகளைக் கடைப்பிடிப்பதாலேயே நமக்கு முன்னேற்றம் ஏற்படும். அதுவே நமது கடமை.

எந்த நாட்டினரும் தங்கள் கலை களை வளர்க்கவேண்டியது அவசியம். ஆனால், தங்கள் நாட்டில் தொன்று தொட்டு வழி வழி வந்திருக்கும் ஸம்ஸ்காரத்துக்கு அணுவளவும் கெடுதி வராமலே கலைகளை வளர்க்க வேண்டியது அதைவிட அவசியம். இதுவே நமது வாழ்க்கையின் நோக்கம் கைகூட வழியாகும்.

முதல் சமாசாரப் பத்திரிகை

ஜூலியஸ் சீசரைத்தான் முதல் முதல் சமாசாரப்பத்திரிகை யின் சிருஷ்டிகர்த்தாவென்று சொல்லவேண்டும். செனெட் சபையின் உத்தரவுகளையும் வேறு செய்திகளையும் வெள்ளைப் பலகையில் எழுதி ரோமாபுரியின் முக்கிய இடத்தில் வைக்க வேண்டும் என்று அவர் கட்டளையிட்டார். இந்தப் பலகையில் உள்ள செய்தியைப் பிரதிசெய்து வெளி மாகாணங்களுக்கு அனுப்பினர். இந்த வழக்கம் கிட்டத்தட்ட 300 ஆண்டுகள் நடை பெற்றது. முதல்முதலில் ஒழுங்காக அச்சிடப்பட்ட சமாசாரப் பத்திரிகை 1009-ஆம் ஆண்டு ஜெர்மனியில் தோன்றியது. ஆண்ட் வர்ப்பில் 1616-இல் ஒரு பத்திரிகை வெளியாயிற்று. 'லண் டன் வார சமாசாரம்' என்ற பத்திரிகை 1622-இல் ஆரம்ப மாயிற்று.

—ரஷ்வத் பாக் (ஹிந்து)

குழந்தைகளின் சில ரசமான பேச்சு, செயல்களை இங்கே தந்திருக்கிறோம். இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்கப்படாதவை திருப்பி அனுப்பப் படமாட்டா. அவை சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது. —**ஆசிரியர்.**

சின்னக் குழந்தைகளின் வகுப்பிலே போய், ஹெட்மாஸ்டர் குழந்தைகளின் சத்தத்தைக் கவனித்தார். முத்துவின் வலது கையைப் பார்த்தார். அது மகா அழுக்காக இருந்தது.

"இந்த முத்துவின் கையை விட அழுக்கான கை வேறே எந்தப் பையனுக்காவது இருக்க முடியுமா? இருந்தால் காட்டலாம். அவனை நான் அடிக்கவில்லை" என்றார் ஹெட்மாஸ்டர்.

கொஞ்சநேரம் மௌனம் நிலவியது. யாருமே கையை நீட்டவில்லை. பின்பு,முத்துவே, "இதோ பாருங்கள், ஸார். நீங்க என்னோடை இன்னொரு கையைப் பார்க்கலையே. அதைப் பாருங்கோ" என்று சொல்லி, வலது கையை இழுத்துக்கொண்டு, இடது கையை முன்னே நீட்டினான்!

* * *

முந்திய நாள் நடந்த ஒரு கல்யாணத்தில் பட்டணப் பிரவேசம் முடிய இரவு மூன்று மணியாயிற்று என்று எங்கள் வீட்டிலே நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். என் ஆறு வயதுத் தம்பியும் இதைக் கேட்டுக் கொண்டே யிருந்தான். அவனைப் பார்த்து என் பாட்டி, "உன் கல்யாணத்திலே உன்னையும் இப்படித்தான் சாரட்டில் வைத்துச் சுத்தணும்" என்றாள். "என் கலியாணத்திலே இப்படி யெல்லாம் செய்யக் கூடாது. ஊர் கோலத்தை எட்டு மணிக்கே முடிச்சுடணும். இல்லாத போனால், எனக்குத் தூக்கம் வந்திடும்" என்றான் தம்பி.



—**அ. கு. நடராஜன், அருப்புகோட்டை.**

சிறுவன் ராமு தன் சிநேகிதன் பாலுவிடம், "ஏண்டா பாலு, உங்க பாட்டி என்னமோ ஆத்திலே குளத்திலே விழுந்து பிராணனை விட்டுடறேன்னு சொல்லிண்டே இருக்காளே; ஏன் இன்னும் விடல்லே?" என்று கேட்டான்.

பாலு சிரித்துக்கொண்டே, "அவ விட்டுடத்தான் போறாளாம்டா. ஆறு கொளத்தையெல்லாம் போய்ப் பார்த்தாளாம். எதைப் போய்ப் பார்த்தாலும் ரொம்ப ஆழமாய் இருக்காம்டா" என்றான்.

—ஓ. எஸ். சௌந்தரியராஜன்,
பழைய மாம்பலம்.

* * *

தாத்தாவின் தெவசம் நடந்து, எல்லாரும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

சீயம் என்ற பட்சணத்தைச் சமையற்காரர் பரிமாறினார். பெரியவர்களுக்கு முழுசாகப் போட்டுவிட்டு, சிறு குழந்தைகளுக்குப் பாதி பாதி விண்டு போட்டுக்கொண்டு வந்தார்.

ஆறு வயது மொட்டைச் சீனு, "இன்னிக்கி எங்க தாத்தா தெவசம் தானே. எனக்கு முழுசாப் போடணும்" என்று கத்தினான்.

"முடியாது. இந்தச் செல்லமெல்லாம் இன்னிக்கி நடவாது" என்று அதட்டினார் அப்பா.

"ஊம் ஊம்! இன்னிக்கு எங்க தாத்தா இருந்தா எனக்கு முழுசாப் போடச் சொல்லுவார்; அத்தோட உன்னையும் தடியாலெ அடிச்சுப்புடுவர், தெரியுமா?" என்று உறுமிக் கொண்டே சிறுவன் எழுந்துவிட்டான்.

—ஆர். வரதன், சென்னை.

* * *

ஒரு நாள் நானும் என் தம்பியும் அயலூருக்குப் போனோம். என் தம்பியே வண்டியை ஓட்டினான். குதிரையைக் கண் காது தெரியாமல் சவுக்கால் அடித்தான்.

"அடே! வாயில்லாச் சீவனை அடிக்காதேடா. இப்படி அடித்தால், நாமெல்லாம் அடுத்த ஜன்மத்திலே குதிரையாய்ப் பிறப்போம். குதிரை மனிதனாய்ப் பிறந்து நம்மை அடிக்கும்" என்று நான் எச்சரித்தேன்.

அதற்கு அவன் கொஞ்சமும் ஆலோசியாமல், "இல்லை, அண்ணா, போன ஜன்மத்தில் இந்தக் குதிரை மனிதனாய்ப் பிறந்து நம்மை அடித்திருக்கிறது. அதனால்தான் இது இப்போது நம்மிடம் இப்படி அடிபடறது!" என்றான்.

—மு. ரா. கந்தசாமி, அம்பா
சமுத்திரம்.



'அரசனும் ஆண்டியாவான்.' உண்மை. ஆனால், இந்த நவாப் வீழ்ந்த கதை மகா கோரம், மகா பரிதாபம்!

ஸிராஜின் வீழ்ச்சி

ஸர் யதுநாத சர்க்கார்

1757-ஆம் வருஷம் பிளாஸி யுத்தம் நடைபெற்றது. பிளாஸியென்னும் கிராமத்தில் ஆங்கிலேயர்களுக்கும் நவாப் ஸிராஜ் உத் தௌலாவுக்கும் நடந்த போர் அது. ஆங்கிலேயரின் படைக்குக் கிளைவ் தலைமை வகித்தான். ஒரு மாந்தோப்பில் அவனுடைய படை இறங்கியிருந்தது. நவாபின் பக்கம் பிரெஞ்சுக்காரர்களும் வங்காளத்து முஸ்லிம்களும் ராஜபுத்திரர்களும் குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப் படைகளுடன் போராடினார்கள். ஆங்கிலேயருக்கு வெள்ளை வீரரும் சென்னைத் தெலுங்குச் சிப்பாய்களும் படைகளாக உதவினார்கள்.

அன்று வெள்ளிக் கிழமை; 1757 ஜனவரி 23-ஆம் தேதி. நவாப் கல்கத்தாவைப் பிடித்துச் சரியாக ஒரு வருஷம் ஆகியிருந்தது.

காலை எட்டு மணிக்கு இரு தரப்பினரும் அணிவகுத்திருந்தார்கள். முதலில் பிரெஞ்சு வீரர் சுடத் தொடங்கினார்கள். ஆங்கிலேயர் சிலர் இறந்தார்கள். தொடர்ந்து நவாபின் பீரங்கிப் படைகள் போர் நடத்தின. அவர்களின் குறி சரியாக இல்லை. ஆங்கிலேயர் 30-பேர்களை இழந்தார்கள். அவர்களுடைய குண்டு குறி தவறாமல் அடித்தது. 11-மணி வரையில் யாருக்கும் வெற்றி தோல்வியில்லாமல் போர் நிகழ்ந்தது. திடீரென்று பெருமழை வந்துவிட்டது. நவாபின் படையில் வெடி மருந்தை மூடி வைக்காததால் மருந்தெல்லாம் நனைந்து உபயோகப்படாமல் போய்விட்டது. ஆங்கிலேயரோ தங்கள் வெடிமருந்தைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்தார்கள்.

மழை நின்றவுடன் நவாபின் படைத் தலைவன் மீர் மதான் பெருங் கூட்டமாகச் சென்று, அளவிலே சிறிய ஆங்கிலப் படையை அடக்கிவிடலாமென்றெண்ணினான். அவர்களுடைய மருந்தும் நனைந்து போயிருக்குமென்பது அவன் நினைப்பு. ஆனால் அடுத்தடுத்து வந்து பாய்ந்த குண்டுகளால் மீர் மதானும் வேறு சில படைத்தலைவர்களும் இறந்தார்கள். படை திரும்பிச் சென்றது.

பிற்பகல் 2-மணி ஆயிற்று. கிளைவ் தம் இடத்திலிருந்து வந்து பார்த்தார். எதிரியின் படை மீண்டு சென்றுகொண்டிருந்தது. மீர் மதான் வீழ்ந்ததை அறிந்த ஸிராஜ் உத் தௌலா மீர் ஜாபரைத் தன் கூடாரத்துக்கு அழைத்தான். மீர் மதான் பாதத்தில் தன் தலைப்பாகையை எடுத்து வைத்து, "என் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான் மீர் ஜாபர். தான் இங்கிலீஷ்காரருடன்

காப்பிரைட் : மாடர்ன் ரிவ்யூ (ஆங்கிலம் : ஜனவரி '4'),
120-2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

போரிடுவதாகக் கொரான்மேல் ஆணையிட்டுக் கூறினான். "இப்போது படைகளோடு திரும்பிப் போய் இரவு இளைப்பாறி நாளைக் காலையில் புது முறுக்கோடு என் தலைமையில் போரை நடத்தலாம்" என்று சொன்னான். ஆனால், நவாபின் கூடாரத்தைவிட்டு வெளி வந்ததும் கிளைவுக்கு நவாபின் தளர்ந்த நிலையைத் தெரிவித்து, உடனே வந்து தாக்கும்படி சொல்லியனுப்பினான். இந்தத் துரோகத்தின் விளைவாகக் கிளைவே இங்கிலீஷ் படையை அழைத்துக் கொண்டு கிளம்பினான். நவாபின் படைகள் படைத்தலைவர்களை இழந்த துயராலும் திரும்பிப் போகும்படி உத்தரவு வந்ததாலும் மனம் சோர்ந்திருந்தார்கள். சிறிய பிரெஞ்சுப் படையினர் மாத்திரம் உஷாராக இருந்து நவாபின் படைவீட்டைப் பாதுகாத்து வந்தார்கள்.

கிளைவ் வரும்போது இடையிலிருந்த பிரெஞ்சுச் சேனையைத் தாக்கினான். அவர்களின் ஆயுத வண்டிகளைக் கைப்பற்றினான். நவாபின் படையிலிருந்த ராஜபுத்திரர்களும் பிறரும் எதிர்த்தெழுந்தார்கள். சேறுபட்ட நிலத்தில் பீரங்கிவண்டிகளை இழுத்துக் கொண்டு எருதுகள் வரமுடியாமல் தத்தளித்தன. சக்கரங்கள் கீழே ஆழ்ந்தன. இங்கிலீஷ் படையிலிருந்து குண்டுமாரி பொழிந்து கொண்டேயிருந்தது. மீர் ஜாபரும் பிறரும் ஒரு தடவைகூடச் சுடவில்லை. கிளைவ் சமயம் பார்த்துப் படைவீரர்களை ஏவினான். பிரிட்டிஷார் முன்னேறிக்கொண்டே வந்தனர். மாலை 4-மணிக்குள் போராட்டம் நின்றது. நவாபின் படைவீரர்கள் போட்டது போட்டபடியே போட்டுவிட்டு ஓடிப் போனார்கள். படைக் கிடங்குகளைக் கிளைவ் போய்க் கைப்பற்றிக்கொண்டான். நவாபின் படைகளை ஒழுங்காகத் திருப்பிக்கொண்டு செல்லக் கூட நல்ல தலைவன் இல்லை. இங்கிலீஷ் படைவீரரோ களத்திலே கிடந்த தளவாடங்களின்மேல் கவனத்தைச் செலுத்தாமல் தாவூத்பூரை நோக்கி நடந்தார்கள். நவாப் படை திரட்டுவதற்கு முன் அவனுடைய தலைநகரைப் பிடித்துவிட வேண்டுமென்பது அவர்களுடைய கருத்து. இந்தப் போரில் பிரிட்டிஷாரின் பக்கத்தில் 13-ஐரோப்பியர்களும் 36-சிப்பாய்களும் இறந்தார்கள். நவாபின் படையிலோ 500-பேர் உயிர் இழந்தார்கள்.

பிளாஸிப் போர்க்களத்திலிருந்து 4-மணிக்கு நவாப் தன் படைவீரர்களை விட்டு விட்டு வேகமாக ஓர் ஒட்டகத்தின்மேல் ஏறிக் கொண்டு சில ஊழியர்களுடன் புறப்பட்டு ஓடோடிவந்து நள்ளிரவில் தலைநகரை அடைந்தான். மூர்ஷிதாபாதில் ஒரே குழப்பமும் பீதியுமாக இருந்தன. படையைத் திரட்டி எதிர்ப்பதென்பது நடவாத காரியம். ஸிராஜ் உத் தௌலாவுக்கு யாரை நம்புவதென்பதே யோசனையாய்ப் போயிற்று. பயத்தால் நடுங்கினான் ஸிராஜ். அவனுடைய மனைவிமார் தொந்தரவு செய்தார்கள். ஆகவே அவன் பாட்னாவுக்கு ஓட ஆரம்பித்தான். ஜூன் 24-ஆம் தேதி இரவு நம்பிக்கையுள்ள அலி ஒருவனும், தனக்கு ஆப்தமான மனைவி லுத்ப் உன்னிஸா பேகமும் உடன்வர ஒருவரும் அறியாமல் புறப்பட்டான்.

வங்காளத் தலைநகரில் ஒரு மாஜிஸ்டிரேட் இல்லை; ஒரு தலைவன் இல்லை. போருக்கு மறுநாள் அந்தத் தலைநகரை அடைந்த மீர்

ஜாபர் தன் வீட்டுக்குள்ளே குந்தியிருந்தானே ஒழிய அரசாங்கப் பொறுப்பை ஏற்கமாட்டேனென்று சொல்லிவிட்டான். ஆனால் ஜூலை 29-ஆம் தேதி தலைநகரத்துக்குட் புகுந்து ஸிராஜின் அரண்மனைக்கு அருகிலிருந்த மூராத் பாக்கில் தங்கினான். பிற்பகலில் மீர் ஜாபர் இருந்த இடமாகிய ஹீரா ஜீல் என்ற அரண்மனைக்குச் சென்றான். அங்கே ராஜாக்களுக்கும் பெரிய மனிதர்களுக்கும் முன்னே ஜாபர் அலி கானைக் கைலாகு கொடுத்து அழைத்துச் சென்று சிங்காதனமேற்றி நவாப் பதவியில் அமர்த்தி வணங்கியதோடு மற்றவர்களையும் அப்படியே வணங்கச் செய்தான்.

இவ்வாறு வங்காளத்தில் முஸ்லிம் அரசாட்சி முடிவடைந்தது. அயல் நாட்டான் கத்தியின் பலத்தால் அரசர்களை ஆட்டி வைப்பவனானான்.

நவாப் பத்மா நதி வழியே ஓடத்தில் பாட்னாவை நோக்கிச் சென்றான். இடையிலே உணவு சம்பாதிப்பதற்காகத் தன் ஓடத்தை விட்டு இறங்கினான். அவன் மாறுவேஷத்தில் இருந்தாலும் தானா ஷா என்ற முஸ்லிம் பக்கிரி அவனைக் கண்டு கொண்டான். நவாப் அதிகாரம் வகித்த போது அந்தப் பக்கிரியின் காதையும் மூக்கையும் அரிந்துவிடும்படி உத்தரவு செய்திருந்தான். பக்கிரி ராஜமகல் கவர்னரிடம் சொல்லவே அவன் ஸிராஜ் உத் தௌலாவைப் பிடித்துக் கட்டுக்காவலுடன் மூர்ஷிதாபாதுக்கு அனுப்பினான். ஜூலை மாதம் 2-ஆம் தேதி நள்ளிரவில் பதவியிழந்த நவாபை அந்த நகரத்துக்குக் கொண்டுபோனார்கள். மீர் ஜாபர் அவனை என்ன செய்வதென்று தெரியாமல் தன் மகன் மீரான் கையில் ஒப்பித்துவிட்டுத் தூங்கப் போய்விட்டான். அந்த முரடன் அன்றிரவே இங்கிலீஷ்காரருக்குத் தெரியாமலே ஸிராஜைச் சிறையில் கொலை செய்துவிட்டான்.

கொலை செய்யும் ஏவலை நிறைவேற்றிய முகம்மதி பேக் என்பவன் மிக மட்டமான குணமுடையவன். அவனை ஸிராஜின் தந்தை வளர்த்தார்; அவன் தாய் அவனுக்குக் கல்யாணம் செய்துவைத்தாள். சிங்காதனம் இழந்த அரசன் கீழேவிழுந்து கதறினான்; இரங்கும்படி கெஞ்சினான். உயிரைக் காப்பாற்றினால் ஒருவருக்கும் தெரியாமல் வாழ்வதாகச் சொன்னான். ஒன்றும் பலிக்கவில்லை. கடவுளை நோக்கிச் சிறிது பிரார்த்தனை செய்வதற்குக்கூட அவனுக்கு இடம்கொடுக்கவில்லை. கடைசிக் கதறலாக, "நான் அநியாயமாக ஹுஸேன் குலி கானைக் கொலை செய்ததற்குப் பயனாக இதோ நானே கொலைசெய்யப்படுகிறேன்" என்று கதறி உயிர் நீத்தான்.

மறுநாள் அவன் உடம்பை யானைமேல் வைத்து நகரத்தின் வீதிகளைச் சுற்றிவரச் செய்து அவமானப்படுத்தினார்கள். யானை ஓரிடத்தில் வந்து நின்றது. அந்த இடத்தில்தான் மூன்று வருஷங்களுக்கு முன் ஹுஸேன் குலியைக் கொலை செய்யும்படி ஸிராஜ் ஏவினான். யானை அங்கே வந்து நின்றவுடன் ஸிராஜின் உடலிலிருந்து ஒரு ரத்தத்துளி அந்த இடத்தில் கீழே சொட்டியது. இதைக் கண்ட ஜனங்கள் அஞ்சி நடுங்கினார்கள். தெய்வ நீதியை இது புலப்படுத்தியது. பிணம் ஸிராஜின் பழைய அரண்மனைக்கு எதிரே வந்தபோது ஜனங்களிடையே ஆரவாரம் ஏற்பட்டது. அங்கே ஓர் உயர் குடும்பப் பெண்மணி காலில் செருப்பில்லாமலும் தலையில் மூடுதுணியில்லாமலும் வந்து யானையை அணுகினாள். மாரடித்து அழுது புலம்பி

ளுள். அவள்தான் விராஜின் தாய். வெளியில் ஜனங்கள் செய்த ஆரவாரத்தைக் கேட்டு, தன் மகனின் சடலத்தைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலோடு முசமூடியை விலக்கித் தள்ளி ஓடிவந்தாள். ஆனால் அவளுடைய விருப்பம் நிறைவேற வில்லை. அவள் ஓர் அரசனுடைய பெண்; சிற்றரசனின் மனைவி; ஓர் அரசனுடைய தாய். அவளை அங்கேயிருந்த காவலாளர் அடித்து வீட்டுக்குள் துரத்திவிட்டார்கள். அப்படித் துரத்தும்படி ஏவினவன் காதிம் ஹுஸேன் என்பவனே. அவன் இளம் பருவத்தில் விராஜின் தந்தையால் காப்பாற்றப் பட்டவன்!

விராஜின் முடிவு சோகமயமானது. அவனுடைய நினைவை இரண்டு பேர் போற்றினார்கள். ஒருத்தி அவன் மனைவி. அவனது மரணத்துக்குப் பிறகு பல வருஷங்களாக மாலைதோறும் அவன் சமாதியில் அவன் மனைவி லுத்ப் உன்னிஸா பேகம் விளக்கேற்றி வைத்து வந்தாள். அவள் இதைத் தன் வாழ்க்கையின் இறுதிவரையில் செய்துவந்தாள். மற்றவர் நவீன சந்திர ஸேன் என்ற வங்கக் கவிஞர். அவர் பிளாஸி யுத்தம் என்ற கவிதையில் விராஜின் குற்றங் குறைகளை மறைத்து, படிப்பவர்கள் உருகும்படியாக அவன் வீழ்ந்த வீரத்தைப் பாடியிருக்கிறார்.

நல்ல வேலைக்காரர்கள்

குமாஸ்தா சுப்புவை முதலாளி தனியே அழைத்தார். "சுப்பு, காரியாலயத்திலே நீ செய்யும் வேலையைக் கூர்ந்து கவனித்து வருகிறேன். எந்த வேலையையும் மிகவும் நுணுக்கமாகக் கவனித்தப் பழுதில்லாமல் செய்து முடிக்கிறாய். எத்தனை நேரமானாலும், சலிக்காமல் வேலை செய்கிறாய். ஆகையால்....."

சுப்பு பரம சந்தோஷம் அடைந்தான். "ஆகையால், உன் பதவியை உயர்த்தி, சம்பளத்தைக் கூட்டப்போகிறேன்" என்று அவர் சொல்லப்போகிறார் என்று அவன் எண்ணினான்.

முதலாளி தொடர்ந்து சொன்னார்: "ஆகையால், உன்னை நான் வேலையிலிருந்து தள்ளிவிடப் போகிறேன். ஏனென்றால், உன்னைப்போன்றவர்கள்தாம் வெளியே கிளம்பி, போட்டிக் கம்பெனி ஆரம்பித்துவிடுகிறார்கள்" என்று முடித்தார் முதலாளி.

* * *

என் மனைவி பாட வாய் திறந்தால், என் நாய் ஊளையிடத் தொடங்கிவிடுகிறது. என் நாய் பரம ரசிகன் என்பதில் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு.

—கோர்ட்டில் கேட்டது (வொர்ல்ட் டைஜஸ்ட்)

* * * *

தேசங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தேவை பரஸ்பர வியாபாரமே; நாட்டுப்பாடம் பயிற்சியல்ல.

—ரெக்கார்டர் (லண்டன்)

அற்புதமான இயற்கைக் காட்சிகள் !
அங்கே வாழும் மக்களும் அற்புதமானவரே !

சிம்லா வனங்களிலே

ராமகுமார்

சிம்லாவிலே எத்தனையோ ஆண்டுகளாக இருக்கிறேன்; ஆயினும் அந்தப் பரந்த மலைகளுக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதைப் பார்க்கச் சந்தர்ப்பமே கிடைத்ததில்லை. அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தவுடனே அன்று காலை ஆறு மணிக்கு லேசான தூற்றலில் நாங்கள் சிம்லாவிலிருந்து புறப்பட்டோம்.

இருளும் வெளிச்சமும் கலந்த அந்த வைகறைப் பொழுதில் மலைச் சிகரங்கள் மிகவும் அழகாக இருந்தன. இரண்டு மைல் தூரம் நடந்து போய் நாங்கள் லாரியில் ஏறினோம். பதினேழு மைல் தொலைவிலுள்ள தியோக் ஸம்ஸ்தானத்தை நோக்கி லாரி புறப்பட்டது.

ஆகாயத்தில் கருமுகில்கள் கூட்டங் கூட்டமாகப் பவனி வந்தன. தூற்றலும் தும்பலுமாக இருந்தது. லாரியின் பின்புறத்தில் பெட்டியின் மேல் படுக்கையை வைத்துவிட்டு, அதன்மீது உட்கார்ந்தேன். குளுமையான காற்றும் மழைத்துளிகளும் என் உடலில் வீசின. அந்தச் சிலுசிலுப்பு எனக்கு ஒருவித உல்லாசத்தைத் தந்தது. எதிரே இருபுறமும் வானோங்கிய மலைகள்; முகிற் கூட்டங்களில் மறைந்து அவை பல துண்டுகளாகத் தென்பட்டன. மைபோல் கறுத்த முகில்கள் மலையடிவாரத்தில் சூழ்ந்துகொண்டன; அவற்றைப் பார்க்கும்போது அலை வீசும் கடலின் ஞாபகம் வந்தது. இம்மாதிரியான அழகிய காட்சியினிடையே அந்த மலைப் பாதையில் எங்கள் லாரி ஓடியது.

சமதரை முடிந்து, இப்பொழுது லாரி மலைமேல் ஏற ஆரம்பித்தது. அது மிகவும் உயரத்திலே ஏறியது. ஒரு தடவை லாரியின் எஞ்சின் நின்று போயிற்று; பிரேக் போட்டும் வண்டி நில்லாமல் பின்னுக்குச் சறுக்கி வந்தது. பின்னால் கிடுகிடு பாதாளமாக இருந்தது. வண்டி அதில் போய் விழுந்துவிடுமோ என்று நான் பயந்து நடுங்கினேன். ஒரு புறத்தில் கூழாங்கற்கள் குன்று போலக் குவிந்திருந்தன. அந்தக் குன்றின் புறமாக டிரைவர் வண்டியை முட்டவிட்டான். கால்மணி நேரம் கழித்து வண்டி மறுபடி மேலே ஏறியது. மிகவும் குறுகலான பாதை. லாரிக்கு இரு புறமும் ஒவ்வொரு சாண்தான் பாதையில் இடம் இருந்தது. பாதையைத் தள்ளி ஆழ்ந்த பள்ளங்கள்; தலைமேல் உயரமான மலைகள். மழை நாளானதால் பாதை முழுவதும் சேறும் சகதியுமாக இருந்தது. வண்டிச் சக்கரங்கள் ஓரடி ஆழம் பாதையில் புதைந்தன.

இப்பொழுது வண்டி இறக்கத்தில் போயிற்று. நாங்கள் வண்டியை இறுகப் பிடித்துக்கொண்டோம். பாகூவிலிருந்து சிறிது தூரத்தில் மலை சரிந்து பாதையில்

காப்பிரைட்: விசால பாரத் (ஹிந்தி- டிசம்பர் '47),
120-2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

விழுந்திருந்தது. ஆறு அடி அகலமே இருந்த அந்த வழியில் வண்டி போக முடியவில்லை. பாதையைச் சரிப்படுத்தும் வரைக்கும் நாங்கள் அரை மணிநேரம் அங்கே காத்திருக்க வேண்டியதாயிற்று. மழை வலுத்துவிட்டது. மலைமேல் முகில்களின் மகாநாடு கூடியது. வண்டி மறுபடி புறப்பட்டது; எப்படியோ ஒருவிதமாகப் பன்னிரண்டு மணிக்கு நாங்கள் தியோக் ஸம்ஸ்தானத்து முசாபரி பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

அங்கே அன்று பொலிடிகல் ஏஜெண்டு வந்திருந்தார். உருளைக்கிழங்கு வியாபாரிகள் குற்றவாளிகளைப்போல அவரெதிரே உட்கார்ந்திருந்தார்கள். ஸம்ஸ்தானத்து மந்திரிகள் அந்த வியாபாரிகளுக்குப் பிரசங்கம் செய்தார்கள். ஏஜெண்டு துரை நாற்காலியில் அமர்ந்து சிகரெட் புகையைக் கக்கியவண்ணம் நடுநடுவே ஏதாவது சொல்லுவார். திவான் அதை வியாபாரிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்வார். இப்படி வெகுநேரம் வரையில் அந்தக் கூட்டம் நடந்தது. நாங்கள் களைத்துப் போயிருந்ததால் படுக்கப் போய்விட்டோம்.

மறுநாள் காலையில் எழுந்ததும் அந்தக் குளிர்ப் பிரதேசத்தில் டீ குடிப்பது மிகவும் ஆனந்தமாக இருந்தது. மலைவாசிகள் முதுகில் தானியப்பைகளைத் தொங்கவிட்டுக் கொண்டு, கூலிவேலை செய்யச் சிம்லாவை நோக்கிப் போயினர். அழுக்கான கோணிப்பட்டையால் தைத்துக் கிழிந்துபோன கோட்டுகளும் பைஜாமாக்களும் அணிந்து அவர்கள் வெறுங்காலோடு நடந்தார்கள். உடைகளைக் கொண்டு அவர்களுக்குள்ளே ஆண்பெண் வேற்றுமையைக் காண்பது சிரமமாக இருந்தது. பல நாட்களாக அவர்கள் தண்ணீர்கூடக் குடிக்கவில்லையோ என்று தோன்றிற்று. இவர்களுடைய வறுமையை யார் கவனிக்கிறார்கள்? கோடையில் சிம்லாவுக்கு வரும் தலைவர்களும் பெரிய மனிதர்களும் மால் ரோட்டின் அலங்காரத்தையும் ஆடம்பரமான ஹோட்டல்களையும் பார்த்துவிட்டுப் போகிறார்கள்; மலைகளிலே மறைந்துள்ள இந்தக் கிராமங்களுக்கு அவர்கள் வந்தால், இயற்கையழகோடு மனிதனின் இத்தகைய தாழ்வுற்ற நிலையையும் நேரில் காணலாம்.

இங்குள்ள மலைநாட்டுப் பெண்கள் முழு விடுதலையோடு வாழ்கிறார்கள். யாரோடும் அவர்கள் தாராளமாகப் பழகலாம். கொடுக்கல் வாங்கல் விவகாரங்கள் யாவும் இங்கே வெளிப்படையாக நடக்கின்றன. யாருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது; கையெழுத்தப் போடக்கூடத் தெரியாது.

அன்று பகலில் மழை நின்று, வானம் தெளிந்தது. நீல ஆகாயத்தில் கருமுகில்கள் இன்னமும் சாய்ந்திருந்தன. நாங்கள் குதிரைமேல் ஏறிக்கொண்டு பசுமையான மலைகளிலே குளுமையான காற்றில் பயணத்தைத் தொடங்கினோம். பச்சை மலையின் நடுவே பார்வதகங்கை வெள்ளிக்கோடுபோல வளைந்து வளைந்து ஓடியது. மழை பெய்ததனால் வெள்ளம் வேகமாக ஓடியது.

பார்வதகங்கையின் சத்தம் காதிலே ஒலிக்க, நாங்கள் ஒவ்வொரு மலையாகத் தாண்டினோம். கங்கையும் எங்களுடனே வந்தது. ஆகாயத்திலிருந்து இறங்கிய இரண்டு மலைகள், பல ஆண்டுகளாய்ப் பிரிந்திருந்த நண்பர்கள் கூடுவதுபோல, ஒன்றை ஒன்று அணைத்துக்கொண்டன. பல நீர்வீழ்ச்சிகள் பார்வதகங்கையிலே கலக்க ஓடின. அந்த நீர்வீழ்ச்சிகளின் கீழே அமர்ந்து எங்கள் களைப்

பைப் போக்கிக்கொண்டோம். மேலே உயர்ந்த மலை; கீழே ஆழமாக ஓடும் பார்வதகங்கை. சேற்றில் வழுக்கிய பாதையில் நாங்கள் ஜாக்கிரதையாகப் போனோம். குதிரை மேல் போவதைவிட நடப்பதே எனக்குச் சௌகரியமாக இருந்தது. மலைகளிலே மறைந்து மறைந்து தோன்றும் சூரியனும், குதிரைகளின் கழுத்திலே கட்டிய மணிகளின் ஓசையும் அந்தக் காட்சியின் அழகை மேம்படுத்தின. நாம் இறக்கத்திலே வரும்போது, மேட்டிலே ஏறும் கூட்டத்தைக் காண விந்தையாக இருக்கும்.

அன்று சாயந்தரம் நாங்கள் கோட்காயி போய்ச் சேர்ந்தோம். பார்வத கங்கையும் எங்களோடு கூடவே வந்தது. மலைகளின் மடியிலே குழந்தை போலக் குதிக்கும் அந்தக் கங்கையும், நீல வானும், கருமுகிலும், மலைகளின் வரிசையும், குறுகலான பாதையும், முப்பதடி சதுரமான கறுத்த பாறைகளும், அவற்றையடுத்து அகாதமான பள்ளங்களும் பார்க்கப் பார்க்க விந்தையாக, மோகனமாக, அழகாக இருந்தன.

அன்று சங்கராந்தி. தொழிலாளிகளுக்கும் குடியானவர்களுக்கும் பெரிய பண்டிகை நாள். அதிகாலையிலிருந்தே அவர்கள் மதுபானத்தில் மூழ்கிப் பசும் புல்லினாலும் பல நிற மலர்களாலும் தம்மை அழகுபடுத்திக்கொண்டிருந்தார்கள். அன்று விடுமுறையாதலால் யாருக்கும் வேலையைப்பற்றிக் கவலை இல்லை. தொழிலாளிகளின் மனைவிமாரும் பெண்களும் ஊரிலுள்ள பெரிய மனிதர்களுக்கு அறுகம் புல்லையும் பூக்களையும் காணிக்கையாகத் தருவார்கள். அதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து பணமும் துணியும் பெறுவார்கள். அன்றைத் தினம் யாவருமே அழகிய ஆடைகள் உடுத்திருந்தார்கள்.

அரிசியை ஊறவைத்த தண்ணீரில் ஏதோ சில பச்சிலைகளைக் கலந்து அவர்கள் 'லுங்கடி' என்ற மதுவைத் தயாரிக்கிறார்கள். அநேகமாக ஒவ்வோர் இரவிலும் வேலை முடிந்தபிறகு அவர்கள் இதைக் குடிக்கிறார்கள். இந்த மதுவைக் குடிக்காவிட்டால் அவ்வளவு வேலைகளைச் செய்ய முடியாது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். கிழவர்களும் சிறுவர்களுங்கூட அன்று நிறையக் குடித்துவிட்டுச் சிவந்த கண்களோடு தெருவில் கூத்தாட்டத்தில் கலந்துகொண்டு பாடினார்கள்.

கோட்காயியில் இரண்டு வகுப்பார் இருக்கிறார்கள். சிலர் பயிர்த்தொழில் செய்து வாழ்கிறார்கள். இவர்கள் நாகரிகமாகவும், சாப்பாடு துணிக்குக் குறைவில்லாமலும் வாழ்கிறார்கள். மற்றொரு வகுப்பார் காடுகளில் கூலிவேலை செய்கிறார்கள். இவர்கள் மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருக்கிறார்கள்.

சில சிறுவர்கள் படிக்க விரும்பியும், ஊரிலே பள்ளிக்கூடம் இல்லை. தொண்ணூறு வயதுக் கிழவியிலிருந்து சிறு பையன் வரையில் யாவரும் சிகரெட் குடிக்கிறார்கள். மலைநாட்டுக் குழந்தைகளிலும் பெண்களிலும் சிலர், பால்போன்ற நிறத்தோடும் ரோஜா நிறக் கன்னங்களோடும் அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருககிறார்கள்.

மதுபானமும் சிகரெட்டும் பலரை நோயாளிகளாக்கிவிடுகின்றன. இவ்வளவு நல்ல காற்றும் தண்ணீரும் இருந்தும் அவர்களின் ஆரோக்கியம் கெட்டுப்போகிறது.

ஒரு பெண் தன் கணவன் உயிரோடு இருக்கும்போது மற்றொருவனை மணக்கலாம். அவனை மணந்து

கொள்பவன் அவளுடைய முதற் கணவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டும். குழந்தை இல்லாதவர்கள் எத்தனை மணங்கள் வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். என் அருகில் இருந்த ஐம்பத்தைந்து வயதுக் கிழவன் பதினாறு வயதுப் பெண் ஒருத்தியை இரண்டு மாதம் கழித்து மணப்பதாக இருந்தான். அவனுடைய மனைவியே அந்தப் பெண்ணைப் பார்த்து வைத்திருக்கிறாளாம். இந்த நாட்டில் குழந்தைகள் மிகக் குறைவாகவே பிறக்கின்றன.

நான் அந்த ஊரிலிருந்து திரும்பும்போது என் நண்பர்களை முன்னால் அனுப்பிவிட்டு, நான் மட்டும் நடந்தே சிம்லாவுக்கு வந்தேன். கோட்காயியில் ஒரு சத்திரத்திலே என்னை அன்போடும் மாசற்ற உள்ளத்துடனும் வரவேற்று வசதிகள் செய்து கொடுத்த அந்த முஸ்லிம் நண்பரை நான் மறக்க முடியாது. அவருடைய வற்புறுத்தலினால் நான் அங்கே ஒரு நாள் அதிகமாகத் தங்கினேன்.

இந்த மலைநாட்டிலே வாழ்பவர்கள் யாவரும் இருட்டில் செல்லும் யாத்திரிகர்கள்; அவர்களுக்கு வாழ்க்கையிலே எவ்வித நோக்கமும் இல்லை. இவர்களுக்காக யாராவது பாடுபட்டு உழைத்தால், மலைகளின் பின்னால் மறைந்துள்ள இந்த மனிதவர்க்கம் பாரதநாட்டுக்கு மிகவும் பயன்பட்டு, உயர்ந்த நாகரிகத்தையும் பெறும்.

உலகத்தை ஆளத் தகுந்தவர் யார்?

கல்கத்தாவில் சில வாரங்களுக்கு முன் அகில இந்திய ஜால வித்தைக்காரர் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதற்குப் பாரிஸ் நகரிலிருந்து பிரெஞ்சு ஜாலவித்தைக்காரர் ராபெர்ட் வெனோ என்பவர் கீழ்க்கண்ட புத்திசாலித்தனமான ஒரு செய்தியை அனுப்பியிருந்தார்:

"நண்பரே, இந்தியாவில் உள்ள என் சகோதர ஜால வித்தைக்காரர்களுக்கெல்லாம் தயவுசெய்து என் அன்பைத் தெரிவியுங்கள். சகல தேசங்களையும் ஜாலவித்தைக்காரர்களே ஆளத் தொடங்கினால் உலகம் எவ்வளவோ மேலாக இருக்கும். ஏனென்றால், ஜாலவித்தை என்பது மனிதர்களுக்குள்ளே பிரமாதமான சகோதரத்துவத்தை வளர்ப்பது. ஜாலவித்தைக்காரர்கள் பிறர் மனத்தை அறிந்தவர்கள். பொல்லாதவர்களாய் இருக்க அவர்களால் முடியவே முடியாது."

—ஸி. ஆர். எம். (இலஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா)

கொள்ளையடித்து வாழும் மரம்

தனக்குப் பக்கத்திலுள்ள வேறு மரங்களின் வேர்களைச் சந்தனமரத்தின் வேர்கள் ரகசியமாகத் தாக்கி, அவற்றின் உணவைப் பறித்துவிடுகின்றன. சந்தன மரத்தின் பக்கத்தில் உள்ள வேறு ஒரு மரத்தை வெட்டிவிட்டால் போதும்; உடனே சந்தனமரம் துக்கம் கொண்டாடி, வாடி வதங்கத் தொடங்கிவிடும்!

—ஸெஸிலீ லெஸ்லீ (ஆன்லுக்கர் - வருஷ மலர்)

இந்திய சர்க்காரில் வைத்திய மந்திரி பதவி வகிக்கும் ராஜகுமாரி அம்ருத் கௌர் உண்மையிலே ராஜகுமாரி. ஆனால், ராஜபோகங்களைத் துறந்து 'காந்தி பக்தை'யானார்.

ராஜகுமாரி அம்ருத் கௌர்

★

ராஜகுமாரி அம்ருத் கௌர், கபூர்தலா சம்ஸ்தானத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ராஜா ஹர்நாம்சிங்கின் மகள். சிங்குக்கு ஏழு குழந்தைகள். அவர்களில் அம்ருத் கௌர் ஒருத்தியே பெண்குழந்தை. பஞ்சாபில் உள்ளது கபூர்தலா சம்ஸ்தானம். சம்ஸ்தானத்தின் தற்போதைய மகாராஜாவின் மாமன் ஹர்நாம்சிங். அயோத்தியில் உள்ள கபூர்தலா எஸ்டேட்டுக்கு ஹர்நாம் சிங், 1895-ஆம் வருஷம் வரையில் பல வருஷ காலம் மானேஜராக இருந்தார். மாகாண கவுன்ஸிலிலும் அங்கத்தினரா யிருந்தார். கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையிலும் சில காலம் ஓர் அங்கத்தினராயிருந்தார். நல்ல ராஜதந்திரி; பிரபல பிரசங்கி. தம் குடும்பத்தோடுகூடக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். கபூர்தலா ஸம்ஸ்தானத்தில் சிம்மாசனம் ஏறும் உரிமையை இதனால் இழந்துவிட்டார்.

ராஜகுமாரி அம்ருத் கௌர் 1887-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி பிறந்தார். இங்கிலாந்தில் டார்ஸெட் ஷயரில் உள்ள ஷெர்போன் பெண்கள் கலாசாலையில் கல்வி கற்றார். பின்னால் அதே கலாசாலையில் தாமே வாத்தியாரா யிருந்து பாடம் போதித்தார். அந்தக் கலாசாலையின் தலைமை வாத்தியார் பதவியை வகிக்கும் விசேஷ கௌரவமும் பெற்றார். இப்படியெல்லாம் இருந்தும், ராஜகுமாரி எப்போதும் கண்டிப்பாய்க் கதரே உடுத்து வந்தார்; சைவ உணவே உண்பார்; ஆழ்ந்த மத பக்தி நிறைந்தவர். காந்தியடிகளின் உபதேசத்தில் ஈடுபாடு கொண்டார். 1935-ஆம் வருஷம் தொடங்கி, மகாத்மாவின் ஆசிரமத்திலேயே வசித்து, அவரிடம் நெருங்கிப் பழகினார். அவருக்குச் சேவை புரிவதிலேயே தமது நேரத்தை யெல்லாம் ஈடுபடுத்தினார்.

ஓர் இந்திய ராஜகுமாரியாக இருந்தும், தேசபக்தி என்ற அமிர்தத்தை ஆவலோடு பருகினார். இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே யிருந்து இந்தியப் புதல்வரையும் புதல்விகளையும் ஊட்டி வளர்த்த அமிர்தம் அல்லவா அது? ராஜபோகங்களை யெல்லாம் அம்ருத் கௌர் துறந்துவிட்டார். "காந்திஜியே இந்திய தேசத்தின் பிதா; அவரே இந்தியாவின் தத்துவ தர்சி, நண்பர், வழிகாட்டி" என்று போற்றினார். தேசத்தின் சுதந்தரப் போராட்டத்தில் குதித்தார்.

1942-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 3-ஆம் தேதி கல்கத்தாவில்

காப்பிரைட்: நியூ டெமொகிராட் (ஆங்கிலம்: 20-2-'48),
22, எல்பின்ஸ்டன் ஸர்க்கிள், கோட்டை, பம்பாய்.

சிறைப்பட்டார். 1945-ஆம் வருஷம் சிம்லா மகாநாட்டுக்குக் காந்திஜி சென்றபோது, பங்தோபஸ்துச்சிறையிலிருந்து அம்ருத் கௌர் விடுதலை அடைந்தார்.

அகில இந்தியப் பெண்கள் மகாநாட்டுக்கு மூலகாரணமாயிருந்தவர்கள் ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவும் ராஜகுமாரியுமே. அகில இந்தியப் பெண்கள் மகாநாட்டின் சமூக சேவைப் பிரிவுக்கு ராஜகுமாரி 1930-ஆம் வருஷம் காரியதரிசியாய்ப் பதவி வகித்தார். 1931-33 ஆம் ஆண்டுகளில் அகில இந்தியப் பெண்கள் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவரானார். டாக்டர் அன்னி பெஸண்ட், ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, ராஜகுமாரி இந்த மூவருந்தாம் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர்களிடம் நேரே பழகி, இந்தியப் பெண்களுக்கு இன்றுள்ள ராஜீய அந்தஸ்தைச் சம்பாதித்துத் தந்தவர்கள்.

ராஜகுமாரி 1938-ஆம் வருஷம் அகில இந்தியப் பெண்கள் மகாநாட்டின் தலைவராய்ப் பதவி பெற்றார். 1937-41-ஆம் வருஷங்களில் அகில இந்தியப் பெண்கள் நிதிச் சங்கத்துக்குத் தலைவராய் இருந்தார். இந்திய சர்க்காரின் கல்வி ஆலோசனை போர்டில் முதல் முதலாக அங்கம் வகித்த பெண் அவரே. அப்போதைய சர்க்காரின் கொள்கையைக் கண்டிப்பதற்கு அடையாளமாக 1942-ஆம் வருஷம் அவர் இந்தப் பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டார்.

ராஜகுமாரி இன்று மஹிலா மண்டலியின் தலைவர்; அகில இந்தியப் பெண்கள் மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டிகளில் அங்கத்தினர்; அகில இந்தியப் பெண்கள் நிதிச் சங்கத்தில் அங்கத்தினர்; ஸம்ஸ்தானக் காங்கிரஸிலும் அங்கத்தினர். பெண்களும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரும் சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதில் ராஜகுமாரி மிக்க அக்கறை கொண்டவர்.

அகில இந்திய முக்கியஸ்தர்களில் ஒருவரான ராஜகுமாரி, சர்வதேசக் கீர்த்தியும் பெற்றவர். ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம், கலை வளர்ச்சி ஸ்தாபனத்திலே இந்தியாவின் பிரதிநிதியாக அவர் அங்கம் வகித்தார். 1946-ஆம் ஙூ நவம்பர் மாதம் சர்வதேசங்களின் பிரதிநிதிகளும் லண்டனில் கூடிய கூட்டத்திலே அந்த ஸ்தாபனத்தின் உபதலைவர்களில் ஒருவராக ராஜகுமாரி ஏகமனதோடு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய சர்வதேசக் கீர்த்திக்கு இது ஒரு சான்றாகும்.

ராஜகுமாரி இந்திய சர்க்காரின் வைத்திய மந்திரி பதவி யேற்றார். பதவி யேற்றவுடன் முதலிலே அவர் செய்த காரியம் இதுதான்: பஞ்சாபில் கலகத்தால் அலைக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்தார். வைத்திய மந்திரி காரியாலயத்தைத் திறமையாக வேலைசெய்யும் வகையில் திருத்தி அமைத்தார். மந்திரி சபையிலே ஒரு பெண் வந்து புகுந்தே நைந்து குலைந்த பழைய வழக்கங்களையும் சம்பிரதாயங்களையுமெல்லாம் ஒழித்துத் தொலைக்க வேண்டியதாயிற்று.

பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்தபோது, அகதிகளின் தேவைகளை ராஜகுமாரி வற்புறுத்திக் குறிப்பிட்டார். இந்தியா, பாகிஸ்தான் இரண்டிலுமே அகதிகளைப் பத்திரமாய்ப் பாதுகாத்து அனுப்புவதுதான் முதலில் கவனிக்க

வேண்டிய கடமை என்று அவர் சொன்னார். ராணுவத்துக்குள்ளே கூட வகுப்புவாத விஷம் புகுந்துவிட்டது. ஆகையால், அந்த அந்த வகுப்புத் துருப்புக்களையே அந்த அந்த வகுப்பினருக்குப் பாதுகாவலாய் அனுப்பினால்தான் பத்திரமாக இருக்கும். இப்போதைய நெருக்கடியில் பஞ்சாபில் போக்குவரத்துச் சாதனங்கள் சீர்குலைந்து, அடியோடு ஸ்தம்பித்துப் போய் விட்டன. பன்னிரண்டு அகதிகள் முகாமுக்கும் ஜலந்தர், அமிர்தசரஸ், லாகூர், ராவல்பிண்டி, சியால்கோட், குஜரான்வாலா ஆகிய இடங்களில் உள்ள அகதிகளின் ஆஸ்பத்திரிகளுக்கும் லேடி மவுண்ட்பாட்டனுடன், ராஜகுமாரி போய்ப் பார்வையிட்டார். டாக்டர்களையும் மருந்து சப்ளைகளையும் மந்திரி காரியாலயத்திலிருந்து அந்த இடங்களுக்கு அனுப்பினார்கள். ராணுவ அதிகாரிகளும் ஆஸ்பத்திரி ஊழியர்களும் புரிந்த கஷ்ட நிவாரண வேலையை ராஜகுமாரி பாராட்டினார்.

பிரிட்டிஷ் ரேடியோவில் லேடி மவுண்ட்பாட்டன் பேசியபோது, இந்திய சர்க்காரின் புதிய கல்வி மந்திரி ராஜகுமாரி அம்ருத் கௌரைப் புகழ்ந்து பேசினார். "இந்தியாவுக்கு, இமாலயம் போன்ற ஒரு வேலை காத்திருக்கிறது; சமூக சேவை புரியும் இலாக்காக்களை நிர்மாணம் செய்வதுதான் அந்த வேலை. புதிய வைத்திய மந்திரியான என் தோழி ராஜகுமாரி அம்ருத் கௌர், இந்த வேலையைத் திறமையாய்ப் புரிவார் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். அவருக்கு நிறைந்த ஆற்றலும் கற்பனையும் அறிவும் இருக்கின்றன. அவருடைய சகாக்களெல்லாம் அப்படியே திறமை வாய்ந்தவர்கள். அவர்களுடைய உதவியும் இவருக்குக் கிடைக்கும்" என்று அவர் அப்போது குறிப்பிட்டார்.

குதிரைப் புராணம்

பல ஆயிர வருஷங்களுக்கு முன் குதிரைகளுக்கு ஒவ்வொரு காலிலும் குளம்புகள் நான்கு இருந்தன; பிறகு மூன்றாயின; அப்பால் இரண்டாகி, இப்போதெல்லாம் ஒற்றைக் குளம்புதான் இருக்கிறது.

குதிரையின் பிறப்பிடம் அமெரிக்கா. அங்கிருந்துதான் அது மற்றக் கண்டங்களுக்குப் பரவிற்று. என்ன காரணத்தாலோ அமெரிக்காவில் ஒரு குதிரைகூட இல்லாமல் அழிந்து போயிற்று. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபோது அங்கே குதிரையே இல்லை. பின்பு ஐரோப்பியர் குதிரைகளை அங்கே கொண்டுபோனார்கள்; விருத்தியாயின. இப்போது அங்கே அதிகமாகக் குதிரைகள் இருக்கின்றன.

* * *

தனித்தனியே எல்லாரிடமும் சொல்லிவிடும் விஷயத்துக்குத் தான் ரகசியம் என்று பெயர்

* * *

நிர்ப்பந்தம் மட்டிலுமே லஞ்சத்தின் காரணமாக இருக்க முடியாது.

அமெரிக்கரின் நீக்ரோ வெறுப்பு

ஆ. நா. சிவராமன்

நம் 'தினமணி' ஆசிரியர் அமெரிக்காவில் அடைந்த இந்த விசித்திர அநுபவம், வேடிக்கையாக இருந்தாலும், நீக்ரோக்களிடம் அமெரிக்கரின் மனுேபாவத்தில் இருக்கும் கிலியைத் தெளிவாகக் காட்டுகிறது. கறுப்பு நிறத்தைக் கண்டு அமெரிக்கருக்கு வெறுப்பில்லை; நீக்ரோக்களைக் கண்டே வெறுப்பு.

"எதற்கும் நீங்கள் தலைப்பாகை அணிந்துகொண்டு போனீர்களானல் நல்லது. தெற்கே உள்ள ஜனங்கள் மிக்க உபசாரமாய் நடத்துவார்கள். நீக்ரோக்களும் நல்ல பசங்கள்தாம்; தங்கள் நிலைமை தெரிந்தவர்கள். தாங்கள் இருக்கிற இடத்திலே சந்தோஷமாகவே அவர்கள் வாழ்கிருர்கள்." இதுதான் அமெரிக்காவின் தெற்கத்தி நண்பர்கள், தங்கள் தெற்குப் பிரதேசங்களைப்பற்றி எனக்குச் சொன்ன யோசனைகளின் சாரம். ஆனுல், நான் தலைப்பாகை அணிந்துகொள்ளாமலே போகத்தான் தீர்மானித்தேன்.

தெற்குப் பிரதேசத்தை ஆராயவே நான் அங்கே சுற்றுப் பிரயாணம் செய்யப்போகிறேன். ஆகையால், கொஞ்ச நாள் வரையில் வெறும் 'கறுப்ப'னுகவே இருந்துவிட்டு, பிறகுதான் நான் யார் என்பதை வெளியிடவேண்டும். இப்படி நான் தீர்மானித்துக் கொண்டேன்.

முதலில் டென்னெஸீ மாகாணத்தில் நாக்ஸ்வில் என்ற நகரத்துக்குச் சென்றேன். ராஜாங்க இலாக்கா அதிகாரி ஒருவரது அறிமுகக் கடிதம் பெற்று, சௌகரியமான ஒரு ஹோட்டலில் போய்த் தங்கினேன். அங்கே எனக்கு எவ்விதத் தொந்தரவும் இல்லை.

ஆனுல், இரவில் ஒரு பரீட்சை செய்ய விரும்பினேன். தனியாக வெளியே சென்றேன். மூன்ருந்தரமான ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தேன்.

உள்ளே நுழைந்தேனுே இல்லையோ, ஸப்ளை செய்யும் வேலைக்காரிகளில் ஒருத்தி குடுகுடு என்று மற்ருெருத்தியிடம் ஓடினுள். அவள் காஷியரிடம் ஓடினுள். சற்று நேரத்தில் ஹோட்டல் சிப்பந்திகள் அத்தனை பேருமே ஒரு மகாநாடு கூடி மந்திராலோசனை புரியத் தொடங்கிவிட்டார்கள். கடைசியில், என்னை ஏற்றுக் கொள்வது என்று அவர்கள் தீர்மானித்ததாகத் தோன்றுகிறது. நான் நீக்ரோவாக இருந்தால் இப்படி உள்ளே வர மாட்டேன் அல்லவா என்று அவர்கள் எண்ணியிருக்கலாம்.

மேஜையடிக்கு என்னை அழைத்துச் சென்ருர்கள். பின்பு மற்றவரையெல்லாம்விட எனக்கு அதிக உபசாரம் நடந்தது. எனக்கு ஸப்ளை செய்த பெண், "நீங்கள் நீக்ரோ அல்ல என்று என் சொல்லவில்லை?" என்று என்னைக் கோபிக்கக்கூடக் கோபித்துக் கொண்டாள்.

ஹோட்டலில் உள்ளவர்கள் என்னிடம் மிக்க மரியாதையாக நடந்து கொண்டார்கள். ஆனுல், "இந்தக் கறுப்பர் நீக்ரோ அல்ல" என்று

காப்பிரைட்: காலியர்ஸ் (ஆங்கிலம்: 27-12-'47), ஸ்பிரிங்பீல்டு, ஓஹியோ, ஐக்கிய அமெரிக்கா.

மானேஜர் மாத்திரம் வெகு முன் ஜாக்கிரதையாக ஒவ்வொருவருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறார் என்பது நிச்சயம்.

எலிவேட்டரை இயக்குபவர்கள் நீக்ரோப் பெண்கள். எலிவேட்டரில் நான் ஏறுவதைக் கண்டால், அவர்களுக்கு என்னவோ ஆச்சரியம். என் நிறம் கறுப்பாயிருக்கையில் என்னை எப்படி ஹோட்டலில் ஏற்றுக் கொண்டார்கள் என்று அந்தப் பெண்களுக்குப் புரியவேயில்லை. "உங்களை நீங்கள் கறுப்பர் என்று நினைக்கிறீர்களா, இல்லையா?" என்றே ஒருத்தி என்னைக் கேட்டுவிட்டாள். நான் அவளுக்கு என்ன பதில் சொன்னேனே? ஏதாவது மழுப்பித்தான் இருப்பேன்.

பதினைந்து நாள் நான் டென்னெஸீயில் தங்கினேன். நான் நீக்ரோ அல்ல என்று தெரிந்த நிமிஷத்திலே, என்னை ஜனங்கள் அளவுக்கு மிஞ்சி உபசரித்தார்கள். நீக்ரோக்களை அவர்கள் பிரித்துவைத்திருப்பதன் காரணம் நிறம் அல்ல; சரித்திரமே.

விவசாய இலாக்கா அதிகாரி ஒருவர் என்னைத் தம் வீட்டில் விருந்துண்ண அழைத்தார்.

"என்னைச் சிலர் நீக்ரோ என்று தவருக எண்ணிக்கொள்கிருர்கள். ஆனல், 'கறுப்பு ஜாதியான்' என்றே நான் சொல்லிக்கொள்வேன்" என்று அவரிடம் சொன்னேன.

உடனே பிரமாதமாய் அவர் முகம் சிவந்தது. "கறுப்பு ஜாதியின் வாசனை துளி உங்களிடம் இருந்தாலும் சரிதான்; என் அழைப்பை இதோ வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்" என்ருர். பிறகு, அவருக்கே என்ன தோன்றிற்ரே; தம்மைச் சமாளித்துக்கொண்டு, "அப்படி இல்லை. நான் சொல்ல வந்தது இதுதான்: ஒரு நீக்ரோவை என் வீட்டுக்கு விருந்துண்ண அழைக்கமாட்டேன். என் தாத்தாவிடம் பல நீக்ரோக்கள் அடிமையாக இருந்திருக்கிருர்கள்" என்ருர்.

நாக்ஸ்வில் நகரத்தை விட்டுத் திரும்பும்போது ரெயில்வே ஸ்டேஷன் வெயிட்டிங் ரூமில் உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை. பக்கத்திலேயிருந்த ஓர் ஆபாசமான சிறு ஹோட்டலுக்குள் புகுந்தேன். ஒரு கப் காபி கேட்டேன்.

ஸப்ளை செய்யும் வேலைக்காரி என்னை வெறிக்க வெறிக்கப் பார்த்தாள். வழக்கப்படி 'மகா நாடு' கூடியது. கடைசியில் மானேஜர் என்னிடம் வந்தார். "நீர் வெளியே போகலாம். கறுப்பு மனிதருக்கு இங்கே ஸப்ளை செய்வதில்லை" என்ருர்.

மிக்க அமைதியாக "நான் நீக்ரோ அல்ல" என்றேன்.

மானேஜர் திகைப்புற்று, ஒன்றும் புரியாமல், வாய் மூடி மௌனியாய்த் திரும்பிப் போனுர். மூன்று நிமிஷமாயிற்று, அவர் திகைப்பு அடங்க. என்ன என்னவோ ரகசியச் சமிஞ்ஞைகள் நடந்தன. பிறகுதான், ஒரு கப் காபியைக் கண்டேன்.

ரகசியம் இதுவே. நான் காபியைக் குடித்துக்கொண்டிருக்கையில், ஒரு வெள்ளைக்காரர் என் பக்கத்திலே வந்து உட்கார்ந்து என்னை விசாரித்தார். ரெயில்வே ஸ்டேஷன் வெயிட்டிங் ரூமில் என் பக்கத்திலே உட்கார்ந்திருந்த ஒருவரே இவர்.

"ஒரு கப் காபி குடிக்கிறீர்களா?" என்று அவரைக் கேட்டேன்.

"வேண்டாம். இங்கே உங்களுக்குச் சரியாய் ஸப்ளை செய்கிருர்களா என்று பார்க்கவே வந்தேன். உங்களிடம் இவர்கள் என்னவாவது அசட்டுத்தனமாய் நடந்துகொண்டு

விடக் கூடாதே என்பது என் கவலை'' என்றார் அவர்.

நான் ஹோட்டலை விட்டுக் கிளம்பும்போது, மானேஜர் என்னிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, ''வடக்கேயிருந்து வரும் நீக்ரோக்கள் சில சமயம் தடதட என்று உள்ளே புகுந்துவிடுகிறார்கள். அதனால்தான்......'' என்று இழுத்தார்.

டென்னெஸீ மாகாணத்தில் உள்ள சட்டனூகா நகரை விட்டுப் புறப்பட்டபோதுதான், உண்மையான தெற்குப் பிரதேசத்தை நான் காணத் தொடங்கினேன்.

ரெயிலில் 'கறுப்பு ஜாதி'யாரின் பகுதியை எனக்குக் காட்டினார்கள். அதில் உட்கார எனக்கொன்றும் ஆட்சேபம் இல்லை. ஆனாலும், உண்மை நிலைமை தெரியவேண்டாமா? கண்டக்டரிடம் சென்றேன். ''ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்துக்கு வந்திருக்கும் இந்தியப் பத்திரிகை நிருபன் நான்'' என்று தெரிவித்தேன்.

''அப்படியானால் நீங்கள் இங்கே உட்காரலாகாது. அந்தப் பக்கம் போய் உட்காருங்கள். சௌகரியமாயிருக்கும்'' என்று, வெள்ளைக்காரர் உட்காரும் பகுதியைச் சுட்டிக் காட்டினான் கண்டக்டர்.

வெள்ளைக்காரர் பகுதியில், எட்டுப் பெண்களும், நாலு குடிகாரக் காலிகளும் இருந்தார்கள். நான் அங்கே போய் உட்கார்ந்தேனோ இல்லையோ, அந்த நாலு காலிகளும் சட்டென்று எழுந்தார்கள். இருவர் எனக்கு முன்னே வந்து உட்கார்ந்தார்கள். ஒருவன் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். ஒருவன் என் பின்னால் வந்து உட்கார்ந்தான். பக்கத்தில் உட்கார்ந்தவன் என்னைப் பார்த்து ஏதோ ஆபாசமாய்ச் சமிஞ்ஞை செய்தான். பின்னால் உட்கார்ந்தவன் என்னவோ உளறினான். இதென்ன, க்ளு க்ளக்ஸ் க்ளான் என்ற கொள்ளைக்காரர் கூட்டமோ என்று நான் பயந்துவிட்டேன். இதையெல்லாம் கண்ட பெண்கள் துளியாவது அருவருப்புக் காட்டவேண்டுமே; காட்டவில்லை. அவர்களுக்கு வெகு குஷி. அதுதான் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. பதினைந்து நிமிஷ மாயிற்று. கண்டக்டரிடம் அவர்கள் ஏதோ கிசுகிசுத்தார்கள். பிறகே அவர்கள் என்னுடன் சகோதரப் பிரயாணிகளாக நடந்துகொண்டார்கள்.

ஒரு மணி நேரத்தில் இவர்கள் எல்லோரும் அங்கங்கே இறங்கிவிட்டார்கள். வண்டியில் நான் மட்டும் தனியே இருந்தேன். புதிதாய் நாலு பெண்கள் வந்தார்கள். அவர்களுக்கு என் வண்டியைக் காட்டியிருக்கிறான் கண்டக்டர். வண்டியிலே பெண்கள் ஒரு 'கறுப்பு ஜாதி' யானைக் கண்டார்கள். ''அட ஆண்டவனே, கண்டக்டர் எங்களை இங்கே ஏன் அனுப்பினான்?'' என்று கூவினார்கள். ஒருத்திக்கொருத்தி பலமாய் வாதப் பிரதிவாதம் செய்துகொண்டார்கள். இரண்டு பெண்கள் மரயிலை விட்டே இறங்கி ஓட முயன்றார்கள். அவர்கள் முகத்திலே திகில் வழிந்தது.

இந்த வேடிக்கையை யெல்லாம் பார்த்து எனக்குப் பரிதாபம் உண்டாயிற்று. ''அம்மணிகளே, நீங்கள் இப்படிப் பரபரப்படையும் காரணம் எனக்குத் தெரியும். ஆனால், நான் நீக்ரோ அல்ல; இந்தியாவிலிருந்து வந்திருப்பவன்'' என்றேன்.

அப்போதுதான் அவர்களுடைய மனத்துக்கு நிம்மதி எற்பட்டது. உட்கார்ந்து, என்னிடம் நட்போடு நடந்துகொண்டார்கள்.

அலபாமா மாகாணத்தில் மஸில் ஷோல்ஸ் என்ற நகரில் 86-வயதுக் கிழவர் ஒருவரைச் சந்தித்துப் பேசினேன். மிஸிஸிப்பி நதிக்கரையில் ஒரு தோட்டத்துக்கு அவர் சொந்தக்காரர். "நீக்ரோக்களைப் பிரித்து வைக்கும் வழக்கம் சில வருஷங்களுக்குள் ஒழிந்துதான் தீரும். என்றாலும், அது ஒழிவதை என் கண்ணால் பார்க்காமல், நான் செத்துப் போகவேண்டும். ஒரு நீக்ரோ என்னை வந்து கைகுலுக்கவாவது! அதை என் மனத்தாலும் நினைக்க முடியவில்லை" என்றார் கிழவர். பாவம்! நிற வேற்றுமை செத்தொழியு முன்பு தாம் செத்தொழிய வேண்டுமென்று போட்டி போடுகிறார் இந்தக் கிழவர்!

ஜாக்ஸன் நகரில் மகா ஆடம்பரமான ஒரு ஹோட்டலில் நான் தங்கினேன். அதன் எலிவேட்டரில் ஏறியபோது, அங்கே இருந்த நீக்ரோப் பெண் தயங்கித் திகைத்தாள். "இறங்கிவிடுங்கள். எலிவேட்டரில் நம்மைப் போன்ற கறுப்பு ஜாதியார் ஏறக்கூடாது" என்றாள்.

நான் அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன். அவளுடைய ஜாதியல்ல நான் என்று அவளிடம் சொல்ல எனக்கு மனம் வரவில்லை. ஆகவே நயமாக, "பரவாயில்லை. இந்த ஹோட்டலில் தங்கியிருக்கும் விருந்தாளி நான். என் அறைக்குத்தான் போகிறேன்" என்றேன்.

அவள் நடுநடுங்கிக்கொண்டே என்னை எலிவேட்டரில் ஏற்றி மாடிக்குக் கொண்டுபோய் விட்டாள். ஒருவேளை நான் விருந்தாளி அல்ல என்று ஏற்பட்டுவிட்டால், அவளுடைய உத்தியோகமே போய்விடும். அது நிச்சயம். எனவே, ஒரு மணி நேரம் கழித்து என்னை ஒரு வெள்ளைக்காரர் கை குலுக்கியதை அவள் கண்டபோது, அவளுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. நான் நீக்ரோவாக இருந்தால், வெள்ளைக்காரன் என்னை இவ்வளவு மரியாதையாய் நடத்த மாட்டான் அல்லவா? அதுதான் எனக்கே தெரியுமே.

ஜாக்ஸன் நகர ரெயில்வே ஸ்டேஷன் டிக்கட் குமாஸ்தாவிடம் சென்று, "ஸ்டேஷனில் காபிக் கடை இருக்கிறதோ?" என்று கேட்டேன். பிரயாணிகள் காத்திருக்கும் அறையில், கறுப்பு ஜாதியாருக்கென்று ஒதுக்கியிருக்கும் பகுதிக்குப் போகும்படி அவர் எனக்குச் சொன்னார். "நான் நீக்ரோ அல்ல" என்றேன். அவர் என்னவோ என்னிடம் மன்னிப்புக் கோரினார். எதற்கென்றே எனக்குப் புரியவில்லை. பின்பு தெருவின் எதிர்ச்சாரியில் இருந்த ஒரு ஹோட்டலுக்குப் போகும்படி அவர் எனக்குக் கை காட்டிவிட்டார்.

வெகு ஜாக்கிரதையாகவே நான் அங்கே போனேன். ஸப்ளை செய்யும் வேலைக்காரியிடம், "நான் ஒரு பத்திரிகை நிருபன். இந்தியாவிலிருந்து வந்திருப்பவன், இந்தியாவிலிருந்து. அநாவசியமான சந்தேகங்களுக்கு இடம் கொடுக்க நான் விரும்பவில்லை. எனக்குச் சாப்பாடு வேண்டும்" என்றேன்.

அவள் என்னை வெறித்துப் பார்த்தாள். இன்னொரு வேலைக்காரியிடம் சென்றாள். வழக்கப்படி மந்திராலோசனை நடந்தது. பின்பு, அந்த இரண்டாவது வேலைக்காரி என்னிடம் வந்தாள். "ஐயா, நீங்கள் இந்தியர் என்று எனக்குத் தெரிகிறது. ஆனால், இங்கேயுள்ள பலருக்கு அது தெரியாது. ஆகையால், நீங்கள் அதோ அந்த மூலையில் போய் உட்கார்ந்து கொள்ளுகிறீர்களா?" என்று கேட்டாள்.

"என்னால் உங்களுக்குச் சிரமம் வேண்டாம்" என்று சொல்லித் திரும்பினேன்.

"ஐயா, உங்களைப் பட்டினியாய் அனுப்ப எனக்கு மனமில்லை. தயவு செய்து அங்கே போய் உட்காருங்கள். இல்லை, நீங்கள் இங்கேதான் உட்கார வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாலும், இங்கேயே உங்களுக்குச் சாப்பாடு போடுகிறேன்" என்றாள்.

"எனக்கு அவ்வளவு பசியில்லை. ஆனால், உங்கள் நல்ல மனசைப் பாராட்டுகிறேன்" என்று சொல்லி விட்டு, மற்றொரு ஹோட்டலுக்குப் போனேன். பெட்டியடியிலே நல்ல பருமனும் அதற்கேற்ற உயரமும் உள்ள ஒரு முரட்டாத்மா உட்கார்ந்திருந்தான். எனக்குத்தான் கிளிப்பிள்ளை மாதிரி ஒரு சூத்திரம் தெரியுமே; அதைச் சொன்னேன்; "நான் ஒரு பத்திரிகை நிருபன்; இந்தியாவிலிருந்து வந்திருப்பவன், இந்தியாவிலிருந்து. எனக்குச் சாப்பாடு வேண்டும்" என்றேன்.

அவன் என்னை ஏறெடுத்துப் பார்த்தான். என் முகத்தை, விழுங்கி விடுபவன் போல விழித்தான்; "நீர் ஓர் இந்தியனாய் எனக்குத் தோன்றவில்லை; போம் வெளியே" என்றான்.

இப்படி விழுந்த முதல் அடியைக் கண்டே வாபஸாக எனக்கு இஷ்டமில்லை. "சாப்பாடு கிடைக்காததைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனால், என்னைப் பொய்யன் என்கிறீர்களே; அதுதான் வருத்தமாக இருக்கிறது" என்று சொல்லி, என் அடையாளச் சீட்டுக்களை வெளியே எடுத்து அவரிடம் காட்டப் போனேன். இதற்குள் அவர் பெட்டிக்குப் பின்னே முங்கி எழுந்தார். அப்போது அவர் கையிலே முப்பது அங்குல நீளமும் இரண்டு அங்குலப் பருமனும் உள்ள ஒரு கைத் தடி இருந்தது. அடுத்த கணத்தில், அது என் தலைக்கு எட்டங்குல தூரத்துக்கு அருகே என்னை நெருங்கி வந்துவிட்டதைக் கண்டேன். மறு அரைக் கணத்தில், அந்த ஹோட்டலுக்கு முப்பது கஜ தூரத்துக்கு அப்பால் நான் போய்க் குதித்தேன்.

ஸ்டேஷனுக்குத் திரும்பிப் போனேன். இந்தத் தமாஷெல்லாம் எனக்குக் குஷியாக இருந்தது. டிக்கட் குமாஸ்தாவிடம் இந்தக் கதையை யெல்லாம் வேடிக்கையாய்ச் சொன்னேன். வண்டியிலே என் ஆகாரத்தை நான் உண்ண வேண்டுமென்று அவர் என்னைக் கட்டாயப்படுத்தினார். என் முழுப் பசியும் தீரும்வரையில் தாம் என்னை விட்டுப் போக முடியாதென்று சொல்லி, என் கூடவே இருந்தார். நான் சாப்பிட்டு முடிந்ததும், அதற்குரிய கட்டணத்தை அவரே கொடுத்துவிட்டார்.

பேட்டன் ரூஜ் என்னும் இடத்தில் நீக்ரோக்களுக்கென்றே பிரத்தியேகமாய் நடக்கும் கல்லூரியை நான் பார்க்க விரும்பினேன். அது நகரத்துக்குச் சில மைல் தூரத்தில் இருக்கிறது. நாங்கள் கல்லூரியை நெருங்கிச் சென்றுகொண்டிருந்தோம். என்னை விருந்தாளியாய் ஏற்றுக்கொண்டிருந்த நண்பர், "இப்போது உங்களைச் சந்திக்கப்போகும் கறுப்பு ஜாதியாரோடெல்லாம் நீங்கள் கை குலுக்கப் போகிறீர்களா?" என்று என்னைக் கேட்டார்.

இந்தக் கேள்வியை அவர் ஏன் கேட்டார் என்று எனக்கு உடனே புரியவில்லை. ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம் எனக்கு அதன் அர்த்தம் புரிந்தது. "ஆமாம், அதுதானே இயற்கை? என்னைச் சந்திக்கும் எவருடனும் கைகுலுக்கவே எண்ணுகிறேன். நீங்கள் மாட்டீர்களா?" என்று கேட்டேன். அவர் நேரடி

யாய்ப் பதில் சொல்லவில்லை; மென்று விழுங்கினர்.

கல்லூரிக்குப் போனதும் கல்லூரித் தலைவர் என்னிடம் கையை நீட்டினர். நான் கைகுலுக்கினேன். எனக்குத் துணை வந்த இரண்டு வெள்ளைக்கார நண்பர்களும் அப்படியே அவருடன் கைகுலுக்கினர்கள்.

கல்லூரித் தலைவருக்குத் தமது கல்லூரி விஷயத்தில் மிகுந்த பெருமை. "நீக்ரோக்களைச் சித்திரவதை செய்யும் லிஞ்சிங் என்னும் கொடுமைபற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அது தெற்குப் பிரதேசத்தில் மிக்க அபூர்வமாகத்தான் நடக்கிறது. தங்களைப் பிரித்து வைக்கும் வழக்கத்தை நீக்ரோக்கள் ஒப்புக்கொண்டு நடந்தால், அவர்களது வாழ்க்கை சரளமாகவே நடக்கிறது. நீக்ரோக்களின் கல்வி விஷயத்தில், சமீப காலத்தில் அரசாங்கம் அதிக அக்கறை காட்டி வருகிறது" என்று அவர் என்னிடம் சொன்னர்.

நான் இந்தியாவைப் பற்றி ஏதோ சொன்னேன். அவர், "இங்கே எங்களுக்கு அரசியல் சட்ட ரீதியான உரிமைகள் இருக்கின்றன. அந்த உரிமைகளையே நாங்கள் கேட்கிறோம்; மேலே ஒன்றும் கேட்கவில்லை" என்றார்.

அரசியல் சட்டத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டதும், என் வெள்ளைக்கார நண்பர்களின் முகத்திலே திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டதை நான் கண்டேன். கடைசியில், கல்லூரித் தலைவரிடம் நாங்கள் விடைபெற்றபோது, நான் மீண்டும் அவருடன் கைகுலுக்கினேன். இந்தத் தடவை என் நண்பர்கள் இருவரும் அவருடன் கைகுலுக்கவில்லை.

நாங்கள் திரும்பிவரும்போது, வழியிலே என் நண்பர்கள், "அவனைச் சந்தோஷப்படுத்தவே நாங்கள் அவனுடன் கைகுலுக்கினேம். அந்தப் பயல் என்னவோ அரசியல் சட்ட உரிமைகள்பற்றிப் பேசுகிறன். அவன் இருக்கவேண்டிய இடத்தில் அவனை வைக்கவேண்டும். இந்தக் கறுப்பர்களோடு ஒரு நாளும் நான் கைகுலுக்குவதில்லை. இன்று என்னவோ குலுக்கினேன். இந்தப் பசங்களிடம் எனக்குப் பிரியம் உண்டு. ஆனல், சட்ட உரிமைகளைப் பற்றி இவர்கள் பேசினல், இவர்கள் இருக்கவேண்டிய இடத்தில் இவர்களை வைக்க வேண்டியதுதான்" என்று சொன்னர்கள்.

ஜனதிபதி தியொடோர் ரூஸ்வெல்டின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் இங்கே எனக்கு ஞாபகம் வந்தது. தியொடோர் ரூஸ்வெல்டைக் கண்ட ஒரு நீக்ரோ தன் தொப்பியைத் தூக்கி அவருக்கு மரியாதை செய்தான். அவரும் அப்படியே அவனுக்குப் பதில் மரியாதை செய்தார். இதைக் கண்ட யாரோ ஒருவர் தியொடோரைக் கோபித்துக் கொண்டார். அதற்கு அவர் சொன்ன பதில் இதுதான்: "ஒரு நீக்ரோவுக்குத் தெரிந்த மரியாதை ஒரு வெள்ளைக்காரனுக்கும் தெரியும் என்பதையே அவனுக்கு நான் காட்ட விரும்பினேன்."

உன் உணவுக்குத் தகுந்தபடி மனசும், உன் பானத்துக்குத் தகுந்தபடி குரலும் அமைகின்றன.

—கபீர்

சிறு கதை:



ரத்த —

மகாத்மா காந்தியின் வீர மரணம் பற்றித் தீர்க்க தரிசனம் கண்டது போல் இந்தக் கதையை, மகாத்மாவின் உபவாச காலத்தில் குஜராத்தியில் எழுதியிருக்கிருர் பிரபல ஆசிரியர் 'ஸோபான்'. ''அவர் மார்பிலிருந்தும் தலையிலிருந்தும் கண்களிலிருந்தும் என்னவோ வழிந்து கொண்டிருக்கிறது. அது ரத்தமாக இருக்குமோ?'' என்று நடுங்குகிருர் 'ஸோபான்'. ஐயோ! அதுவே தான்; உலகமே கண்டு இன்று கண்ணீர் சொரிகிறது. 'ஸோபான்' கண்ட இந்த மகா தியாகக் காட்சி ஆழ்ந்த பொருள் பொதிந்தது.

கனவுக்கும் விழிப்புக்கும் இடையிலுள்ள ஒரு வித நிலைமையில் நான் கண்ட காட்சிகள் பல. அவற்றை வெறும் கற்பனை என்று நீங்கள் சொல்லுவீர்கள்; பகற் கனவு என்ருவது, மனப் பிரமை என்ருவது நினைப்பீர்கள். ஆனல் எனக்கு என்னவோ அந்தக் காட்சிகள் உண்மையில் நடந்தவை' போலவே தோன்றின. அதோ அந்தப் பரந்த ஆகாயமும், என் வீட்டுக்கு வெளியில் நிற்கும் ஆலமரங்களும் எவ்வளவு உண்மையானவையோ அவ்வளவு உண்மையானவை நான் கண்ட காட்சிகள்! எனக்குங்கூட இப்போது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அது கனவு என்று தான் என் அறிவு கூறுகிறது. ஆனல் மனம் ஏனே அதைக் கனவு என்று ஏற்றுக்கொள்ளவில்லை!

— சமர்ப்பணம்

மூல ஆசிரியர்: 'ஸோபான்'
மொழிபெயர்த்தவர்: எச். விஜயகுமார்

அமாவாசை இரவு! ஆனால் வானத்தில் பேருக்குக்கூட ஒரு மேகம் இருக்கவில்லை. இரவு பயங்கரமாக இல்லாமல் அங்குமிங்கும் உடுக்கணங்களின் ஒளியால் வசீகரமாக விளங்கியது; பூமியில் எங்கும் இருள் சூழ்ந்திருந்தபோதிலும் தாரகைகளின் மங்கிய ஒளியில் பொருள்கள் அனைத்தும் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தன. தூரத்தில் தெரிந்துகொண் டிருந்த மலைத் தொடர்கள் கரும் போர்வையைப் போர்த்துக் கொண்டு நிற்பவை போலத் தோன்றின. மரங்கள் கூடக் கருநிறத்துடன் விளங்கின. எங்கும் அமைதி! சாந்தி!

ஆனால் அந்த அமைதியும் சாந்தியும் பயங்கரமாக இருக்கவில்லை. பூமி முதல் முதலில் தோன்றிய பொழுது எந்த நிலைமையில் இருந்திருக்கும் என்பது எனக்குத் தெரியாது. உலகத்தின் பிரளய காலம் எவ்விதம் இருக்கும் என்பதை என்னால் கற்பனையும் செய்ய முடியவில்லை. நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்தைத்தான் நான் அறிவேன். ஆனால் அதில்கூட அநுபவித்திராத ஒருவித நிலைமையை நான் அப்போது அநுபவித்துக்கொண் டிருந்தேன்.

அப்போது நான் இருக்கவில்லை! வேறு எவரும் இருக்கவில்லை! மனித குலம் மகா மாயையான நித்திராதேவியின் அரவணைப்பில் மூழ்கிப் போதையுடன் கனவுலகில் ஆழ்ந்திருந்தது. ஊர்களும் கிராமங்களும் வீடுகளும் கண்களுக்குத் தென்பட்டுக்கொண் டிருந்தன. ஆனால் எல்லாம் வெறிச்சென்று விளங்கின. காற்று மிகவும் மெதுவாக வீசிக்கொண் டிருந்தது. ஆறு கூட அன்ன நடை போடுவது போல் மெல்ல மெல்ல எவ்விதச் சப்தமும் செய்யாமல் ஓடிக்கொண் டிருந்தது.

தூரத்தில் - வெகு தூரத்தில் - அதோ அங்கே வான வளையம் பூமியைத் தொட்டு முத்தமிடுகிறது; அவ்வளவு தூரத்தில் ஒரு கிரணம் தோன்றுவதைப் பார்த்தேன். அப்போது நான் இருக்கவில்லை; என்றாலும் நான் அதைப் பார்க்க முடிந்தது. கண்களால் அல்ல; ஆத்மாவால். மெதுவாகக் கிரணங்கள் அதிகமாயின. ஒரு மனித உருவம் தென்பட்டது. நான் பிரமை தட்டியவன்போலப் பார்த்துக் கொண்டே நின்றேன். அந்த உருவம் ஆடைகளை அணிந்திருந்ததா இல்லையா என்பதுகூடச் சரியாகத் தெரியவில்லை. குளிர்ந்த ஒளிக் கிரணங்கள் உருவெடுத்து வந்திருந்தன போல இருந்தது அந்த உருவம்! அது யார்? நான் தெரிந்து கொள்ள முயன்றேன். முடிய

வில்லை. அது யார்? ஆணா? பெண்ணா? இரண்டும் இல்லை!

மெதுவாக அந்த உருவம் அடியெடுத்து வைத்து, என்னை நோக்கி வருவது போலத் தோன்றியது. ஆனால் அது வெறும் பிரமைதான்! இருள் அதிகமாகச் சூழ்ந்து கொண்டே வந்தது. தாரகைக் கணங்கள் அந்த உருவத்தின்மீது ஒளிக் கிரணங்களை வீசிக்கொண்டிருந்தன. சில விநாடிகள் சென்றன. அந்த உருவம் தெளிவாகத் தெரியலாயிற்று. அதன் அழகை வர்ணிப்பது என்றால் முடியாத காரியம். அதன் கண்களை நான் என்றுமே மறக்க முடியாது. சாந்தமான பார்வைதான். ஆனால் ஏனோ என்றால் அதை ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை. அதன் உடலிலிருந்து ஒளிக்கதிர்கள் வீசுவதை நான் பார்த்தேன்.

எதிர்பாராத விதமாகப் புகைப் படலம் ஒன்று மேலே கிளம்புவது போலத் தோன்றியது. என் பார்வை பூமியின் நாலு புறங்களிலும் திரும்பியது. அந்த உருவத்தின் கண்களும் பத்துத் திசைகளிலும் திரும்பி எதையோ தேடிக்கொண்டிருந்தன. தூரத்தில் - வெகு தூரத்தில் - பரந்த நிலப் பரப்பின் மேல் சிறிய அணுவைப் போன்ற ஒரு வீடு எரிந்துகொண்டிருந்தது. துறவியின் தவத்தைக் குலைக்க, அரக்கன் கண் விழித்து நோக்குவதைப் போல இருந்தது அந்த நெருப்பின் ஜ்வாலை. சற்று நேரத்தில் துயரமும், துன்பமும், வேதனையும், பயங்கரமும் நிறைந்த கூக்குரல்கள் அந்தத் திசையிலிருந்து கிளம்பி வானைப் பிளந்து சென்றன. மேலும் ஒரு கணம் சென்றது. திடீரென்று யாரோ ஒரு பாதகனின் அட்டகாசமான சிரிப்பு இடியோசை போலக் கேட்டது.

நெருப்பு, பரவிக்கொண்டே வந்தது. பரவியிருந்த அமைதியும் மெதுவாகக் குலைந்துகொண்டே வந்தது. இருளின் - இரவின் - அழகு விகாரமாக மாறிக்கொண்டே வந்தது. அம்மம்மா!

சற்று நேரத்தில் தாரகைகளின் ஒளி மங்கிப் போய்விட்டது. அவற்றின் புன்சிரிப்பு மாயமாக மறைந்துவிட்டது. சிறிது நேரத்தில் மலைகளும், பள்ளத்தாக்குகளும், மரங்களும், செடிகளும், ஓடைகளும், ஆறுகளும், நகரங்களும், கிராமங்களும், வீடுகளும், கோவில்களும் புகைப் படலம் சூழ்ந்து விளங்கின. மரங்கள் நடுங்கின; வீடுகள் நடுங்கின; உலகமே நடுங்கியது. ஆறு, அமைதியை இழந்து இரு கரைகளையும் மீறிக் கண்கால் தெரியாமல் ஓடலாயிற்று.

மனிதனின் கதி...?

மனிதனே காணாத இடத்தில் மனிதர்கள் திரள் திரளாகக் கூடினர். உலகின் ஒவ்வொரு பகுதியிலும் பெரிய குழப்பம் ஏற்பட்டது.

அந்த உருவம்...?

அது மெதுவாக அடியெடுத்து வைத்து என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது. அதன் சாந்தம் நிறைந்த பார்வை, உக்கிரமுடையதாக மாறிக்கொண்டிருந்தது. நடு ஆகாயத்தில் நின்று, அந்த உருவம் என்னைப் பார்த்துக் கேட்கலாயிற்று:

"இந்த அமைதியைக் குலைத்துப் பாழாக்கிய பாவி யார்? மனிதனா? மிருகமா? பறவையா? தாவரமா? வாயுவா? அல்லது மனிதனா?"

அந்த உருவத்தின் சொற்கள் எதிரொலித்தன. ஆனல், நான் பதில் கொடுக்கவில்லை. மறுபடியும் அதன் குரல் கேட்டது.

"விரைவிலே தோன்ற இருந்த மனேகரமான காலை வேளையைக் கடுந் தீயிலிட்டுப் பொசுக்கிக் களங்க மடையச் செய்தது யார்? உலகத்தில் வாழும் பாதையைத் தடைப் படுத்தியது யார்? வாய் திறந்து சொல்லுங்கள்!"

ஆனல்......

பதிலில்லை! வீடு எரிந்துகொண்டிருந்த இடத்தில் இரண்டு மனிதர்கள் கையில் தீப்பந்தங்களைப் பிடித்தவாறு ஓடிக்கொண்டிருப்பது தெரிந்தது. ஒருவனுக்குப் பின்னல் மற்றவன் ஓடிக்கொண்டிருந்தான். இருவரும் வழியிலிருந்த ஒவ்வொரு வீட்டுக்கும் தீ வைத்துக்கொண்டே சென்றார்கள். சற்று நேரத்துக்குள் அந்த இரண்டு பேர், இருபது பேர்களாகி, அடுத்த கணம் இரண்டாயிரமாகி, அதற்கடுத்த கணம் இருபதினாயிரம் ஆகிவிட்டார்கள். "அடி! குத்து! வெட்டு! கொல்லு!" என்பது போன்ற கூச்சல்கள் நாலு திசைகளிலிருந்தும் கிளம்பின. சிறிது நேரத்துக்குள், மனிதக் கூட்டம், சிறுசிறு கும்பலாகப் பிரிந்துவிட்டது. மரண வேதனையால் மக்கள் போட்ட கூச்சல் கேட்போர் இருதயத்தையும் வானையுமே பிளந்து சென்றது. அந்தோ!

2

அந்த உருவத்தின் தோற்றமே மாறிப் போயிருந்தது. அதன் கண்களிலிருந்து முன்னைப்போல் ஒளிக்கதிர்கள் வீசவில்லை.

கண்முன்னிருந்த காட்சியும் மாறியது!

அதே இரவு வேளைதான். அதுவும் அமாவாசையாகத்தான் இருக்க வேண்டும். மேகங்கள், வானையும் தாரகைகளையும் மறைத்துக்கொண்டிருந்தன. எங்கே பார்த்தாலும் ஒரே கறுப்பு! ஒரு மனிதன்கூடக் கண்களுக்குத் தென்படவில்லை. காற்றின் இரைச்சலும், வேகமும், பிரளய காலத்தைப் பற்றிக் கவிகள் செய்யும் கற்பனையை நினைவூட்டின.

அந்த உருவம்...? ஆம்; அதே உருவந்தான்! அது கரிய நிற ஆடைகளை அணிந்திருந்தது. அதன் கண்களை நான் அறிந்துகொண்டு விட்டேன். அதன் கண்களில் துளித்திருந்த நீர்த் துளிகள் வைரம்போல மின்னின. உருவம் நின்றுகொண்டிருந்தது. நான் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

"நீ! நீயா இந்தக் குற்றத்தைச் செய்தாய்? அடே மனிதா! உலகைக் காக்கும் சக்தி உனக்குக்கிடைத்தது. அதை இப்படியா உபயோகித்துக் கொண்டாய்?" என்று கேட்டது அந்த உருவம்!

ஆனல், பதில் யார் கொடுப்பார்கள்? பதில் கொடுப்பதற்கு யார் இருந்தார்கள்? உருவம் ஒரு பெருமூச்சு விட்டது; அதன் கண்களிலிருந்து ஒரு துளி நீர் பூமியின்மேல் விழுந்தது. உலகம் சற்று நடுங்கியது.

சிறிது நேரத்துக்குள் பூமிக்குள்ளிருந்து ஏதோ ஓர் உருவம் வெளியே வருவது போலத் தோன்றியது. அந்த உருவம் பூமிக்குள்ளிருந்து வந்துகொண்டிருந்தவரையே பார்த்துக்கொண்டு நின்றது. பூமிக்குள்ளிருந்து வந்தது மனிதன்தான். அவன் கண்கள் மூடியிருந்தன. கைகளை அசைத்துக்கொண்டே ஏதேதோ அவன் பேசலானன்:

"நான்! நான் இந்தத் தீயை அணைப்பேன்! இந்தக் குழப்பத்தை நீக்குவேன்! உலகத்தை நானே

காப்பேன். உலகிலுள்ள எல்லாருக்கும் நான் இன்பமளிப்பேன்.''

''எப்படி?'' என்று கேள்வி பிறந்தது ஆகாயத்தில். அது அந்த உருவத்தின் கேள்வியாகத்தான் இருக்கும்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அந்த மனிதன் மிகவும் ஆச்சரியமடைந்தவன் போலத் தென்பட்டான். அந்தக் கேள்வியைக் கேட்டது யாரென்று அறிய விரும்பிய அவன் தன் கண்களைத் திறந்து பார்க்க முயன்றான். ஆனால் அவன் கண்ணிமைகள் திறக்கவே இல்லை. தன் இடுப்பில் தொங்கிக்கொண்டிருந்த உறையிலிருந்து அவன் வாளை உருவி எடுத்தான். கன்னங்கரிய இருட்டில் வாள் பளிச்சென்று மின்னிற்று.

''உலகம் முழுவதையும் என் வசமாக்குவேன். அப்படிச் செய்யாவிட்டால் யாருக்கும் இன்பம் கிட்டாது. என் வாளால் அனைவரையும் என் வசமாக்குவேன்; அடக்குவேன். உலகம் முழுவதிலும் சாந்தியையும் அமைதியையும் நிலவச் செய்வேன்! ஒருவரை ஒருவர் துன்புறுத்தாமல் பார்த்துக்கொள்வேன்! என் பெயரைக் கேட்ட மாத்திரத்திலே உலகம் நடுங்கி ஒடுங்கி அடங்கி விடும்படி செய்வேன்'' என்ற சொற்கள் அந்த மனிதனின் வாயிலிருந்து வெளிவந்தன.

''நீ எவ்வளவு காலம் இந்த உலகில் இருக்க முடியும்?'' என்று மறுபடியும் கேள்வி பிறந்தது.

கணநேரம் மனிதன் குழம்பினான். என்றாலும் அந்தக் கேள்விக்கும் பதிலளித்தான்.

''என் பிரஜைகளுக்காக - உலக மக்களுக்காக-நான் ஒரு திட்டம் வகுத்துவிட்டுப் போவேன்.''

''கொஞ்சம் பொறு. யார் உன் பிரஜைகள்? யார் உலக மக்கள்?''

மனிதன் மறுபடியும் தன் கண்களைப் பிசைந்துகொண்டு, கேள்வி கேட்டது யார் என்று பார்க்க முயன்றான். ஆனால் ஏனோ இமைகள் திறக்கவே இல்லை. அவன் முகத்தில் வியப்புக் குடிகொண்டிருந்தது.

''யார் நீ? என் தேசத்தை-உலகத்தை-மக்களை-நீ அறியமாட்டாயா? உலகம் முழுவதையும் புரட்டிப் புரட்சி செய்யும் என்னை நீ அறியமாட்டாயா?'' என்று அவன் கேட்டான்.

''அறிவேன், வீரனே! அறிந்துதான் கேட்கிறேன். உலகில் நீ எவ்விதம் அமைதியையும் இன்பத்தையும் நிலைநாட்டுவாய்? ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உன் முன்னோர்களில் ஒருவன் தன் வீட்டுக்குத் தானே தீ வைத்தான். அந்த நெருப்பை, நெருப்பாலேயே அணைக்க உன்னால் எவ்விதம் முடியும்?''

''எல்லாவற்றையும் அழித்துவிட்டுப் புதிதாகப் படைக்கும் திறமை அந்த மனிதனிடம் இல்லை!''

''உன் முன்னோர்களில் எவ்வளவோ பேர்கள் உலகத்தைப் புதுப்பிக்க முயற்சி செய்து தோல்வி அடைந்திருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா?''

''தெரியும்! அத்துடன் அவர்கள் செய்த தவறுகளும் தெரியும். எனக்கு என்மீதும், என் மக்கள் மீதும், என் படைகள்மீதும் பூர்ண நம்பிக்கை இருக்கிறது. நான்......''

''நீ நாளை இந்த உலகத்திலிருந்து விடைபெற்றுக்கொள்வாய். ஆனால் உன் வாள்முனை என்றைக்கும் வெற்றி பெறாது என்பது நினைவிருக்கட்டும். அற்புதமான அரிய

தொரு சக்தி உனக்கு வாய்த்திருக்கிறது. அதை நீ அழிவு வேலையிலா உபயோகிக்கப் போகிறாய்?"

"அழித்தால்தானே புதுப்பிக்க முடியும்; படைக்க முடியும்?"

"உண்மைதான். ஆனால், எதைப் படைக்க முடியும் தெரியுமா? வாள்களை! வாள்முனைகளை! மனிதர்கள் என்றும் ஒருவனுக்கு அடிமையாக இருக்க முடியாது. உன் எண்ணமும் வாழ்வும் இந்த நெருப்பை அணைக்க முடியாது. இதற்கு எண்ணெய்தான் வார்க்கும்."

மனிதன் பதிலளிக்க முயன்று கொண்டிருக்கையிலேயே, அவனுடைய தோற்றம் மாறிவிட்டது; வாள் உறைக்குள் அடங்கிவிட்டது. முகத்தில் ஆவேசத்துக்குப் பதில் புன்சிரிப்புத் தவழ்ந்தது.

"நீ யார்? அவனுடைய சகோதரனா?" என்று கேட்டது உருவம்.

"இல்லை! அவனுடைய பகைவன் நான்."

"உன் லட்சியம் என்னவென்பதைச் சொல்லுவாயா?"

"என் ஒருவனால் அது இயலாது. ஒத்துழைப்பில் நான் நம்பிக்கை கொண்டவன். பாதாள லோகத்திலுள்ள என் நண்பன் என் அருகில் இல்லாமல் என் கட்சியை நான் எடுத்துரைக்க முடியாது."

"அதோ அவன் வந்துவிட்டான்."

பாதாளத்திலிருந்து ஒரு மனிதன் வந்தான். ஆனால் அவனிடம் வாள் இல்லை.

"உம்! உங்கள் தொழில் என்ன? சொல்லுங்கள்! நெருப்பு மூட்டுவது தானா உங்கள் தொழிலும்?"

"இல்லை! நெருப்பை அணைப்பது தான் எங்கள் வேலை."

"எவ்விதம் அணைப்பீர்கள்? உங்கள் உலகிலுள்ள எண்ணெய்க் கிடங்குகளைக் கொண்டா? திரண்ட செல்வத்தாலா? மக்களின் ரத்தத்தாலா?"

"ஆம்! எங்களுடையது என்று சொல்லக்கூடிய எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்தாவது இந்தப் பெருந் தீயை அணைப்போம். அது வரையில் எங்களுக்குச் சாந்தி ஏற்படாது."

"ஆனால், அதனால் நெருப்பு அணையுமா?"

"சந்தேகமில்லாமல்!"

"சரித்திரப் புத்தகத்தின் ஏடுகளை நீங்கள் திருப்பிப் பார்த்தது உண்டா? சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை மறந்துவிட்டீர்களா?"

"அவ்விதத் தவறு மறுபடியும் ஏற்படாது. நெருப்பின் மூல காரணத்தைக் கண்டுபிடித்து, நாங்கள் அதனை அடியோடு ஒழிப்போம்."

"அந்த மூல காரணம் யாது?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும், அந்த இரண்டு மனிதர்களும் ஒருவரை ஒருவர் பார்த்து விழிக்கலானார்கள். வாளை ஏந்தியிருந்த மனிதன் மௌனமாகவே இருந்தான். மற்றவன் பேசலானான்.

"அந்த மூலகாரணமா? அது பலவீனமான மக்களைத் தாக்குவது தான்!"

"உன் நண்பனைக் கேட்டுத்தான் சொல்லுகிறாயா?"

எங்கும் அமைதி நிலவியது. இருவரும் மேலே பார்த்தார்கள். ஆனால்...? கன்னங் கரிய மேகங்களைத் தவிர, அங்கே வேறு ஒன்றும் இல்லை.

3

காட்சி மாறியது.

அந்த உருவம் இப்போது தென்படவில்லை. ஆகாயம் செக்கச்செவேலென்று இருக்கிறது. உலகம் முழு

வதும் தீப்பிடித்து எரிவது போலத் தோன்றுகிறது. காலன் நர்த்தனம் செய்கிறான். ஆண்களின் சாவோலம், பெண்களின் அபயக் குரல், நெஞ்சைப் பிளக்கும் குழந்தைகளின் அழுகுரல் இவை தாம் எங்கும் கேட்கின்றன. பயத்தால் நடுநடுங்கியவாறே நான் இந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

சிவந்திருக்கும் வானத்திலிருந்து யாரோ ஒருவர் இறங்கி வருகிறார். அவர் முகத்தில் சாந்தம் குடி கொண்டிருக்கிறது. அவர் கையில் ஒரு கலசம் இருக்கிறது. கலசத்தை அவர் அக்கினி ஜ்வாலைகளுக்கு மேலே காட்டுகிறார். ஜ்வாலைகள் தணிகின்றன. அக்கினியின் வேகம் சற்று அடங்குகிறது. பூமியின்மீது இரக்கம் நிறைந்த பார்வையைச் செலுத்தி அந்தக் கலசத்தை அவர் தலைகீழாகக் கவிழ்க்கிறார். ஜ்வாலைகள் பெரும்பாலும் அடங்கிவிடுகின்றன.

ஆனால் சற்று நேரத்தில் அந்த உருவம் மறைந்து போய்விடுகிறது.

மெதுவாக ஜ்வாலைகள் மறுபடியும் எழும்பி வானை அளாவுகின்றன.

மறுபடியும் யாரோ ஒருவர் வருகிறார். அவருடைய மார்பிலிருந்தும் தலையிலிருந்தும் கண்களிலிருந்தும் என்னவோ வழிந்துகொண்டிருக்கிறது. அது ரத்தமாக இருக்குமோ? யாராவது அவரைக் காயப்படுத்தியிருப்பார்களோ? ஜ்வாலைகள் மறுபடியும் அடங்குகின்றன.

...ஆனால் உருவம் மறைந்ததும் மறுபடியும் நெருப்பு, தன் வல்லமையைக் காண்பிக்க ஆரம்பித்துவிடுகிறது. ஆகாயத்திலுங்கூட நெருப்புப் பிடித்துவிடும் போல இருக்கிறது. யாரோ பேசுவது போலத் தோன்றுகிறது. குரல் பழக்கமானதுதான். ஆனால் உருவம் கண்களுக்குத் தெரியவில்லை. குரல் மட்டும் செவிகளுக்கு எட்டுகிறது.

"அர்ப்பணியுங்கள்! இன்னும் அர்ப்பணியுங்கள்! - தாராளமாக, அதிகமாக - அர்ப்பணியுங்கள்! புனிதமான ரத்தம் சிந்தாமல் இந்த நெருப்பு அணையாது. புத்தருடைய ரத்தம் மட்டும் போதாது. ஏசுநாதருடைய ரத்தம் மட்டும் போதாது. ஆயிரக் கணக்கான மகாத்மாக்களின் ரத்தத்தை அர்ப்பணியுங்கள்! உலகைக் காப்பாற்றுங்கள்!"

திடீரென்று ஆகாயத்தில் எனக்கும் உங்களுக்கும் பரிசயமான ஒருவரின் உருவம் தென்படுகிறது. அவருக்குப் பின்னால் ஒரே ஆரவாரமாக இருக்கிறது. என்றாலும் ரத்தம் நிறைந்த கலசங்களை யுடையவர்களின் எண்ணிக்கை குறைவாகத் தான் இருக்கிறது. அதோ அவர்கள் வருகிறார்கள்...வந்துவிட்டார்கள்!

திடீரென்று கண்கள் இருளடைகின்றன. காட்சியையும் காணோம். என் வீட்டிலேயே நான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். எதிரில் என் தம்பி வாடிய முகத்துடன் கையில் தினசரிப் பத்திரிகையுடன் நின்று கொண்டிருக்கிறான். பத்திரிகைத் தலைப்பின்மீது என் பார்வை விழுகிறது. நான் திடுக்கிடுகிறேன். நான் கண்ட காட்சிகள் உண்மையாகப் போகின்றனவா? பத்திரிகையில் பின் கண்டவாறு எழுதியிருக்கிறது!

"காந்திஜி உண்ணாவிரதத் தீயில் இறங்கப் போகிறார்."

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

சகோதர வாக்கு

ஒரு புதிய பத்திரிகை வந்தால், மற்றப் பழைய பத்திரிகைகள் அதை எப்படி வரவேற்கின்றன என்று அறிய யாரும் விரும்புவது இயல்பு. ஏனென்றால், அந்தப் பழைய பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள், புதிய பத்திரிகையின் பொருளையும் தன்மையையும் பிரதிபலிக்கும் அல்லவா? 'மஞ்சரி' யைப் பற்றிப் பிரபல பழம் பத்திரிகைகள் என்ன சொல்லுகின்றன? அந்தப் பத்திரிகை அபிப்பிராயங்கள் சிலவற்றைக் கீழே தருகிறோம்:

தமிழில் இதுதான் புது முயற்சி. — தினசரி.

தமிழ்ப் பத்திரிகைகளுக்குள் மிக நன்றாய் விற்பனையாகக் கூடியது மஞ்சரி. — ஹிந்து.

இன்றைய இந்தியப் பத்திரிகைகளின் சாரமான அம்சங்களையெல்லாம் பிரதிபலிப்பது மஞ்சரி. — ஸ்வதந்த்ரா.

சிறந்த விஷயங்களைச் சுருக்கிக் கொடுக்கிறது. — சுதேசமித்திரன்.

விஷயங்களில் சிறந்தவற்றைச் சேகரித்து உதவும் பணியை மஞ்சரி ஏற்றுள்ளது. இதற்காகப் பிரபல தேனீக்கள் உழைக்கின்றன. — ஈழகேசரி.

தமிழில் ரீடர்ஸ் டைஜெஸ்டுக்கு முற்றும் இணையானது - அதுதான் மஞ்சரி. — ப்ரீ இண்டியா.

பலவிதச் சுவை, காலத்துக்கேற்ற பொருள் என்பதையே நோக்கமாகக் கொண்டு விஷயங்களைச் சேகரித்திருக்கிறார்கள். — பம்பாய் க்ரானிக்கில்.

கவர்ச்சியுள்ளதாக இருக்கிறது. — ஹிந்துஸ்தான்.

'மலர்க் கதம்ப'த்துக்கு உரிய லட்சணமும் மணமும் பெற்று விளங்குகிறது. — வீரகேசரி.

இன்னொரு விசேஷம். கல்கத்தா 'அமிர்த பஜார்', அமெரிக்காவில் வெளியாகும் 'காலியர்ஸ்', 'பேரெண்ட்ஸ் மகஸீன்' போன்ற பிரபல பத்திரிகைகள் தாங்கள் வெளியிடும் விஷயங்களை 'மஞ்சரி' யில் உபயோகித்துக்கொள்ள அன்போடு அநுமதி தந்திருக்கின்றன. 'அமிர்த பஜார்' ஆசிரியர் ஸ்ரீ துஷார்காந்தி கோஷின் அநுமதிக் கடிதம் குறிப்பிடத் தக்கது. அவரை அநுமதி கேட்டோம். அவர் 'மஞ்சரி' முயற்சியைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்து தட்சணமே அநுமதியளித்துவிட்டார். இன்னும் பல பிரசித்தமான பத்திரிகைகளின் அநுமதியையும் - உள் நாடு, வெளிநாடு இரண்டிலிருந்துந்தான் - கூடிய விரைவில் எதிர்பார்க்கிறோம்.

இத்தனை அன்பையும் ஆதரவையும் தொடக்கத்திலேயே பெற்றுவிட்ட 'மஞ்சரி' மேலும் மேலும் ஓங்கிவளர என்ன தடை?

— ஆசிரியர்.

Regd. No. M. 4975

மஞ்சரி — மார்ச் '48

பிச்சைப் பாட்டு . . . . டாக்டர் உ. வே. சாமிநாதையர் 1
தனயன் துயரம் . . . . தேவதாஸ் காந்தி 4
வைத்தியருக்குச் சன்மானம் . . . . . பிப்பிள்ஸ் ஹெல்த் 13
நமக்கு வேண்டிய தொழில்கள் . . . . . . கிர்லோஸ்கர் 17
குழந்தையின் பழக்கம் . . . . . பேரெண்ட்ஸ் மகஸீன் 22
மின்சார மீன் . . . . ஸயின்ஸ் டைஜஸ்ட் 25
கூடு மாறிய சாமியார் . . . . போதாயனகவி 30
மகாநாட்டுத் தலைவலி . . . . கொறவஞ்சி 33
மார் தட்டும் பண்டிகை . . . . பிரஜாமதம் 38
படிப்பில் தோற்ற பேரறிஞர் . . . . இந்தியன் ரிவ்யூ 41
கதைசொல்லும் குளங்கள் . . . . . ஆந்திரப் பத்திரிகை 46
மழையை நிறுத்தும் மந்திரம் . . . அஸ்ட்ராலாஜிகல் மகஸீன் 49
ருஷ்யாவில் குடும்ப வாழ்க்கை . . . . ஓரியெண்ட் 51
பாதுஷாவின் தந்திரம் . . . . ஸ்வதந்த்ரா 55
மனநோயின் குறிகள் . . . . புஸ்தகப் பிரபஞ்சம் 57
கலைகளின் மூல காரணம் . . . . கைரளி 61
ஸிராஜின் வீழ்ச்சி . . . . 'மாடர்ன் ரிவ்யூ 65
சிம்லா வனங்களிலே . . . . விசால பாரத் 69
ராஜகுமாரி அம்ருத் கௌர் . . . . நியூ டெமொக்ராட் 73
அமெரிக்கரின் நீக்ரோ வெறுப்பு . . . . காலியர்ஸ் 76

விசேஷப் பகுதிகள்

சொல் பொருந்துமா? 12
எது சரி? 24
நகைச் சித்திரம் 36
காந்தி: வாழ்வும் வாக்கும் 44
பாபுராவ் பதில் சொல்லுகிறார் 53
குழந்தைகள் குறும்பு 63
சிறுகதை: ரத்த சமர்ப்பணம்: 'ஸோபான்' 82